புது எழுத்து

ஆவணி 2002

ஆசிரியர் மனோன்மணி

இரண்டு புத்தகங்கள்

6

புது எழுத்து 6

ஆவணி 2002

தனி இதழ் விலை : ரூ. 50/-
(மொழிபெயர்ப்பு இதழுடன்)
ஆண்டு சந்தா : ரூ. 200/-
ஆயுள் சந்தா : ரூ. 5000/-

விளம்பர விகிதம்
2வது அட்டை: ரூ. 3000/-
3வது அட்டை: ரூ. 2500/-
பின் அட்டை: ரூ. 4000/-
முழுபக்கம்: ரூ. 1000/-
அரை பக்கம்: ரூ. 600/-



ஆசிரியர்
மனோன்மணி

உதவி ஆசிரியர்
சாந்தி சுகுணா

ஆர்ட் எடிட்டர்
ஜீ.முருகன்

அச்சுக் கோர்ப்பு
தே. சங்கர்
அமைதி

ஒளி அச்சு, வடிவமைப்பு
ஜீவா கம்ப்யூட்டர்ஸ்
செங்கம்
04188-23554

அச்சு
செந்தில் ஆப்செட்
தருமபுரி.

அனைத்து தொடர்புகளுக்கும்
மனோன்மணி
ஆசிரியர் புது எழுத்து
39/20 ஜே கே சி தெரு
காவேரிப்பட்டிணம்–635 112
கிருஷ்ணகிரி மாவட்டம்
தொலைபேசி:04343 52665, 51571

மாலதி மைத்ரி கவிதைகள்

இரும்புத் தொப்பி

கொஞ்ச நாட்களாக யாருடனும் பேசுவதில்லை
அதிக கோபம் அதிக அழுகை அதிக வெறுப்பு
உறக்கம் உணவு காலம் தப்பியது
யாருக்கும் பதில் சொல்வதும் இல்லை
ஆத்துக்குப் போனவளைப் பேய் பிசாசு அடித்திருக்கும்
உடுக்கை அடித்து விரட்டிப் பார்த்தனர்
ஆவேசம் அதிகரித்து எல்லோரையும்
அடிக்கத் துவங்க அறையில் வைத்துப் பூட்டி
ஆகாரம் அவ்வப்போது போட்டு வந்தனர்

ஒரு நாள் வெயில் தாளாமல் கூரையைப் பிரித்துக்கொண்டு
தோட்டத்தில் தண்ணீர் தேடி அலைந்தாள்
தண்ணீர்பட்டு பல மாதம் ஆனதால்
பானை தொட்டி எல்லாம் உடைத்து நொறுக்கியபடி
நீரை மேலே கொட்டிக்கொண்டிருந்தாள்
அப்பொழுதும் எரிச்சல் அடங்கவில்லை

ஒவ்வொரு வீட்டுத் தோட்டமாய்த் தாவித்தாவி
மூன்றாவது வீட்டுக் கிணற்றை எட்டிப் பார்த்தவளுக்கு
தாயின் கர்ப்பத்துள் தான் இருப்பதாகத் தெரிய
சந்தோஷம் அதிகமாகித் தன்னை எட்டிப்பிடித்துவிட
ஆரவாரத்துடன் குதித்தாள்

துரத்திக்கொண்டு வந்த தாயின் ஒப்பாரி கேட்டு ஓடி வந்தவர்கள்
கழுத்தளவு நீரில் நிற்பவளைத் தூக்க வழி தெரியாமல்
கலவரத்தை அடக்கவந்து ஊரோரம் தங்கியிருந்த
இரும்புத் தொப்பி சிப்பாய்களைக் கூட்டிவர
பெரிய பெரிய கயிற்றுடன் வந்து
கிணற்றில் இறங்கிக் கறுத்துச் செழித்த உடம்பை
ராட்டினம் போட்டு ஊஞ்சல் கட்டித் தூக்கினார்கள்.

சி. கார்த்திகேயன்

செத்துப் பிழைத்து வந்த பிள்ளையை
வைத்தியரை அழைத்து வந்து காட்ட
பெண்ணுக்கும் சிசுவுக்கும் ஆபத்தில்லை
கவனமா பாத்துக்குங்க என்றார்
தாய்க்கு ஒன்றும் புரியவில்லை
வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதாள்
அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள்
அவரவருக்குத் தெரிந்த வைத்தியம் செய்ய
ஒரு பயனுமில்லை

பிறந்த குழந்தை
ஊரைவிட்டுப் போய்விட்ட
ஏதோ ஒரு இரும்புத் தொப்பிக்காரனின்
சாயலில் இருப்பதாகப்
பேசிக்கொண்டார்கள்

இரும்புத் தொப்பி வளர்ந்து கொண்டே
இருக்கிறது.

பந்துகளின் இருப்பிடம்

அறை முழுவதும்
சிறிதும் பெரிதுமான
பந்துகள் நிரம்பிச் சரிகின்றன
ஓரிடத்திலும் நில்லாமல்

எத்தனை முறை அவைக்கான
இடத்தை ஒதுக்கினாலும்
அங்கே அவை இருப்பதில்லை
எங்கிருந்தாவது திடுமென ஓடிவந்து
மோதிக் கொள்வதும்
பூனையென
காலைச் சுற்றுவதும்
இரவில் உதைபடுவதும்
படுக்கையில் நசுங்குவதுமாக
தன்னைச் சதா வதைத்துக்கொள்கின்ற
சில நேரங்களில் பயந்த
குழந்தையாய் மிரள மிரள விழிக்கின்றன
எங்கே ஒளித்து வைத்தாலும்
வேறு பொருட்களை எடுக்கும்போது
இதோ இருக்கிறேன் என்று
ஓடி வருகின்றன
எங்கே பத்திரப்படுத்துவது
இவற்றை

என் மகள் வரைந்த
ஓவியத்தில் ஓர் அறைக்குள் வைத்து
பத்திரமாகப் பூட்டினேன்.

மழை வேட்டை

பல நாட்களாக எனது அறைக்கு
வெளியிலேயே நின்றுவிட்ட
கரையும் அதைத் தாண்டிய ஊரும்

விடாமல் பெய்யும் மழை
முற்றுகையைக் கிழித்துக் கொண்டு
வெளியேறுகிறேன்

தளும்பும் ஒரு புள்ளியென நினைத்து
மழை என்னைக் கரைத்துவிட முயல
நானோ எனக்குள் மழையை
மறைத்துவிட முயல
ஒரு சொட்டும் வெளியில்
சிந்திவிடாதபடி
அண்ணாந்து வாய்திறந்து குடிக்கிறேன்

மழையோ ஒரு சொட்டும் என்னை மீறி
குறிதவறி வெளியில் சிந்திவிடாதபடி
சுற்றிச் சுற்றி அடிக்கிறது.

கடலாய்ப் பெருகி நின்று
நானாய்த் திரும்புகிறேன்
மீண்டும் எனது அறைக்கு

ஓணான் கொடி

கோபித்துக் கொண்டு செல்லும்
தன் தாயைப் பின்தொடர்ந்து
செல்கிறாள் மகள்
ஒரு நிலையில் தாய் மறைந்து போக
குருட்டு வழி தன்முன் விரிந்து கிடக்க
குழம்பித் திரும்புகிறாள்
அழுதுகொண்டு வந்தவழியே
பெயர் தெரியாத புதரும்
மரங்களுமாய் நீண்டு செல்கிறது
பாதை முழுவதும் கூடு திரும்பும்
பறவைகளின் இறைச்சலுடன்

நீண்ட நேரமாய் மறைந்து கொண்டிருக்கும்
அடிவான சூரியன்
ஆடாதொடை புதரின் மேல்
வினோத பச்சையில் வலைபோல் விரிந்து
இழை நரம்புகள் அந்தரத்தில்
ஊசலாட தளும்பிக் கொண்டிருக்கின்றன காற்றில்
வேரற்ற அதன் விசித்திர பச்சை
அவளைக் கவர
பறித்துத் தனது சீட்டிப் பாவாடையில்
கட்டிக்கொண்டு வீடு திரும்புகிறாள்
தனது தோட்டத்து வேலி முழுவதும்
நூல் நூலாய் எடுத்து இறைக்கிறாள்
தோட்டம் தனி பச்சையில் ஒளிர
ஊரார் அனைவரும் அதிசயித்து
ஆசைக்குக் கொஞ்சம் அள்ளி சென்று
இறைக்கின்றனர் அவரவர் தோட்டத்தில்
எல்லோரும் அதன் அழகிய வண்ணத்திலும்
உடல் மென்மையிலும்
வேரற்ற அதன் வாழ்வின் ரகசியத்திலும்
பின்னிக்கிடந்தனர்
பல மாதங்கள் கழித்து
பொங்கலுக்கு
அம்மாவை அழைத்து வந்தார் அப்பா.

தோட்டத்தைப் பார்த்துவிட்டு
ஒரு மல்லிகைக் கொடியாவது நட்டிருக்கலாம்
காய்க்காமல் பூக்காமல்
என்னதுக்கு என்றாள் அம்மா.

ஊரே புதுப் பச்சையுடன் இருந்தது
வேறு எந்த நிறமுமில்லாமல்
சலிப்பும் அலுப்பும் பெருகி
வேரற்ற கொடியை ஒட்டடைபோல்
வழித்தெறிந்து வீச
மரம் செடிகளெல்லாம் பட்டுப்போய்
மண்ணில் கட்டைகளாய் நின்று கொண்டிருந்தன.
0

சி. கார்த்திகேயன்

முடியாத கவிதை

யாருமற்ற வெளியில்
யோசனைகள் அற்ற மனிதன்
சர் என்று வெட்டிப் பறக்கிறது
கறுப்புக் குருவி
மரங்களைக் கொத்திக் கொத்தி
சப்தம்
இரைச்சலுடன் கடல்
கடல் மேல் ஒரே நேரத்தில்
மரங்களும் செவ்வக மூக்கு கொண்ட இரும்பு மனிதனும்
மிதந்து கொண்டிருக்கிறார்கள்
நீர் வீழ்ச்சியில்
மறைகிறது கடல்
அவர்கள் முத்தமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்
பெய்யும் மழையில்
நனைந்து கொண்டிருக்கிறது பூமி
வெளியில் பறக்கும் வித்தை
கடிகாரங்களைத் தாண்ட
அறைக்குள் அலுவலகம் மற்றும் மனைவி
குழந்தை
விளையாட்டில் உயிர்ப் பெறும் பொம்மைகள்
குண்டுகளாய் மாறிப் போன எனது தாகம்
அம்மணத்தின் கடைசி விரல்களில்
வழியும் ஆற்றின் கரையில்
மனிதர்கள் ஆடையுடன்
எலும்பைக் கடிக்க நீளும் பற்கள்
இசையின் ஊடே நகர்ந்து செல்கிறது
வண்ணத்துப் பூச்சிகள்
தெறித்து விழும் வயலட் நிறத்திலிருந்து
முளைக்கிறது மஞ்சள் மரமும்
பச்சை இலைகளும்
விரையும் குதிரையில்
ஸந்தோஷம் கொள்ளும் மனம்
ஒரு ஒப்பனை கண்ணாடியில்
நீ என் முன் நின்று உன்னைப் பார்க்கிறாய்
வீசும் காற்று
ஆசையில்
எல்லாவற்றையும் எடுத்துச் செல்கிறது
எருமை மாட்டின் மேல் அமர்ந்திருக்கிறான்

அப்பாஸ்
கவிதைகள்

கறுப்பு மனிதன்
அண்ணாந்து பார்க்கிறான்
ஒருவேளை கடவுள் இறங்கக் கூடும்
பூமியின் மீது
எல்லாவற்றின் மேலும் பல வர்ணங்களை
வழங்கக்கூடும்
கேட்பதற்கு ஒன்றுமே இல்லாத கடவுள்
கவிதையில் மறைய
இல்லை
கறுப்பு கவுனில் மறைய
ஒப்பனை இல்லாத முகங்கள்
அதில் மிதந்து வர
கையுறைகளைக் கழற்றிக் கொண்டிருக்கிறாள்
மருத்துவச்சி
ஒரு பல்லை முளைக்க வைக்க வேண்டும்
காதுகளையும், கண்களையும்
விரல்களையும்
நீ வேகமாகத்தான் நடக்கிறாய்
போர் ஆரம்பித்து எண்பத்திமூன்று
ஆண்டுகள் ஆகிறது
தொலைபேசி முன்பும், கம்ப்யூட்டர் முன்பும்
அறைகளுக்குள்ளும் வெளியேயும்
அம்மணமாய்
அலைந்து அலைந்து கிடக்கிறது
எனது முடியாக் கவிதை.

மேக்லா

பனி விழும்

புல்வெளியின் மேல்
அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்
பனி விழும் இரவு
இப்பொழுது தொடங்கிவிடும்
இன்னும் உனது கைகளை விட்டுவிடவில்லை
கதகதப்பான உணர்வு
கிளர்ந்தெழும் வார்த்தைகளுக்காக
உண்மைக்காகவும் அது இருக்கலாம்
நான் காத்திருக்கிறேன்
விரல்களில் வழியும்
மலைத் தொடரின் இரவு இது
புரிகிறது
நாம் உண்மைக்கு அப்பால் இருக்கிறோம்
ஒருவேளை
இவைகளுக்கு வார்த்தை
இல்லாதபொழுது
முத்தமிடு
இப்பொழுது ஒன்றுமே இல்லை.

பாலைநிலவன் கவிதைகள்

எலும்பு மணக்கும் தேவதைகள்

பாழ் இரவின் அரவத்திலிருந்து
கழுகுகள் அழத் தொடங்கிவிட்டன
ஆயிரம் பாவங்களிலிருந்து
மாம்சம் விஷமாகும்போது
உயிர்க்கத் தொடங்குகிறான் மனுஷன்
ஆதியில்
தெய்வங்கள்
தேவதைகளின் ரகசியங்களின் மேல்
நேசங் கொண்டிருந்தன
பிறகு
தேவதைகள்
மனுஷர்களை முத்தஞ்செய்யத்
தீ விரித்தபோது
மெலிந்து போய்த் திரும்பி வந்தனர்
யாசகர்களாகிவிட்ட தெய்வங்கள்.

2.
மனுஷ்குமாரர்கள்
வனாந்திரங்களில்
சாம்பல் புசிக்கிறார்கள்
தாவரங்களற்ற பாழ்மையில்
குரல்வளைகள் செடிகளாய்
பூக்கின்றன
பசியின் பிணத்திலிருந்து
பூமி கடுகிவிட்டபிறகும்
புணர்ச்சிகளில் மூழ்கிவிட்டவர்களை
பார்த்துத் திரும்பும் தெய்வங்கள்
அச்சு அசலாய் சாத்தான்களாக
மாறிவிட்டன
நம்மைப் போலவே

3.

தெய்வங்களின்
தலையிலிருந்து முளைத்த
தேவகுமாரர்கள்
தேவதைகளின் ரகசியங்களை
வெட்டியெடுத்துப் போகும்படி
கழுகுகளிலிருந்து இறங்குகிறார்கள்
பனிபோல.
தேவதைகளோ
மனுஷர்களின் இம்சைகளால்
துவாரங்களனைத்தையும்
இழந்தவர்கள்
எலும்புகள் மணக்கும் வெளியில்
வெயில் காய்கிறார்கள்
பரிதாபம் கொண்ட தேவகுமாரர்கள்

4.
தெய்வங்கள் நடமாடுகிற தெருக்களில்
அருள்கொண்டு நடனம் புரிகிற
தேவதைகள்
முலை குலுங்குகிறார்கள்
யோனி கதறுகிறார்கள்
குறியற்ற நரமாம்சம் வேண்டும்
தேவதைகளின் பிரார்த்தனை
பலிக்க.
எங்கெங்கும் தேவகுமாரர்கள்
குறி அறுத்து இரத்தம்
பெருக்குகிறார்கள்

5.

துவாரமற்ற பெண் பொம்மைகளை
சிருஷ்டித்து
தெய்வங்கள் வணங்க
ஆரம்பித்துவிட்டன
தேவகுமாரர்கள்
குறி அறுத்து
துவாரம் எய்திவிட்டார்கள்
மனுஷகுமாரர்கள்
நிர்வாணம் பதற
சாம்பல் புசிக்கிறார்கள்

கே.ஸ்டாலின்

முடிவில்

வார்த்தை உருவாக்கப் போட்டியில்
பங்குக் கொள்ளும்
பள்ளிச்சிறுமியின்
பதட்டத்துடனிருக்கிறேன் நான்
அவிழ்க்கவியலா புதிரொன்றை
புன்னகையில் தேக்கி
எழுத்துக்களை
பிரசவித்தபடியிருக்கிறாய் நீ
உனது பிரசவ உதிரத்தின் பிசுபிசுப்புடன்
வார்த்தைகளை ஒன்றிணைப்பது
வெகு சிரமமாயிருக்கிறது எனக்கு
ஒன்றிணையா எழுத்துக்களின்
அர்த்தமற்ற முதல் அழுகையில்
குதூகலித்தபடி நீ
குழப்பமாக நான்
எனது உச்சபட்ச இயலாமையில்
உன்னைக் கருவுறுத்திய
மொழியைச் சபித்தபடி நானிருக்க
அதன் லிபிகளில் மயங்கி
கனவுலகில் லயித்திருக்கிறாய் நீ
எந்த மொழிகளுக்குள்ளும்
அர்த்தப்பட்டுவிடாத
நெடிய வார்த்தையாய்
எனது சொல்லடுக்கு நீட்சியுற
ஒரு முற்றுப்புள்ளியை ஜனித்து
நீதான் இவ்விளையாட்டை
நிறுத்த வேண்டும்.

0



ஏ. கார்த்திகேயன்

சாஹிப்கிரான் கவிதைகள்

எனக்கும் உனக்குமானது

சகஜத்தின்
கடைசி சொரூபத் துளியொன்று
சித்றி அமரும்
புல்நுனி மீட்சித் திருப்பத்து
மறுபக்கத்தில்
புள்ளிகளாய்த் திரட்சிக்
கூட்டுப்புழுக்கள் நிரம்பும்
மண் குவளையொன்றாய்
உடையக் காத்திருக்கும்
பாதரசப் பொருளொன்றின்
பலமுழுதும் தேங்கும்
பின்னிரவு மனம்
வேராய் படர்ந்தலையும்
விடுதலையின் ஆழமென்று
மண்ணைக் கடக்கும்
கவன செல்பிரிதலில்
சிதைகிறது இயல்பு நிலை
விருட்சம்.

இயல்பை நொறுக்கும்
உன் கவனங்களிடையே
என்னுள் என்றும்
கவனமின்மையின் கூர்.

0

பாதி திறந்தது கதவு

மகா சமுத்திரக் கரையோரம்
வலைமிதப்புக் குறிகளை
சாத்யப்படும் திக்குகளிலிருந்து
அனைவரும் குவியும்
வலைமீளத் துள்ளித் தாண்டும்
பெருங்கூட்ட மீன்களிடையே
வேட்டையாளிகளுக்கு
பொய் விழிகளின் இடைவெளியில்
தூரத்தில்
அற்புதமாய்த் தோன்றுகிறது
சரிவிறங்கும் கப்பலும்
மடிப்புகளில் பதுங்கும் கட்டுமரங்களும்
சுவடுகள் குலை பரப்பும்
அண்மையில் வெக்கையும்
வீச்சமும் கரிப்பும்
ஒலி விழுங்கும் ஆர்ப்பரிப்புடன்
அழகாய் அற்புதமாய்
சேய்மையிலிருக்கிறது யாவும்.
0

திக்காம்

அனந்தஷங்கர்

வெளியெங்கும் பறவை

எச்சம்

எங்ஙனும் வானம் பூசிய வசிப்பறை
எனக்குண்டு
பச்சை மரங்களின் தலைப்பு
வரைந்திருக்கும்
வானம் அது.
புள்திரியும் சப்திக்கும் அதில்
பெரும் மயில்களும் புட்களில்
அடக்கம்
கணிணித்திரை விட்டகன்றால்
சாரளமெங்கும் அப்பியிருக்கிறது
கண் நிறைக்கும் வானம்
அதன் சாம்பல், மஞ்சள் முதலான
வெளிர் நிறங்களும்
செக்கர், கார் முதலான அடர்
நிறங்களுமாகத்
திரிந்துவிட்டது ஜன்னல்
பச்சைக் கோட்டுத் தலைப்பில்
ஆடுகளை நெய்திருக்கும் சிலநேரம்
எப்போதாவது ஏதாவது
சைக்கிளைக் கூட
எப்போதைக்குமான தலைப்பில்
பாலிதீன் பைகள் மட்டுமா
என்வீட்டு எச்சங்கள்.
0

பதினேழு அர்த்தங்களில் ஒரு புன்னகை

றிக்காம்

இறந்து போன ஓவியனின்
சித்திரம் ஒன்றுக்கு இறுதி விலை
கோரலின் போது கிழக்குத் திசையில்
பெரும் பூகம்பம் வெடித்து
நிலம் மறைந்தது
அவள் கடவுளின் தூதனின் முன்பு
விபச்சாரியாய் நின்றிருந்தாள்
முடவர்கள் நடக்கவும் கேளாதவர்கள்
கேட்கவும் பேசாதவர்கள்
பாடவும் ஆன பிறகு
கிழிந்த அவள் யோனியை
கன்னிமை மூடித் தர வேண்டினாள்
ஓவியம் பெரும் மியூசியத்திற்காக
சுற்றுச்சுவர் வண்ணம் பூச வேண்டியதால்
ஏலமிடப்பட்டது
இப்படியாகத் தூதனின் ஆடைகள்
பகிர்ந்தளிக்கப்பட்ட போது
பறவைகள் விதைக்காமல் அறுக்காமல்
விண் வழியே பாடிப் போயின
அவள் ஆண்குறி மீது பொறாமையடைந்தாள்
அவளின் கடையோரப் புன்னகை பதினேழு அர்த்தங்களில்
சலனம் காட்டி உறைந்தபோது
ஓவியன் சித்திரத்தை முடித்திருந்தான்.
0

யவனிகா ஸ்ரீராம்
கவிதைகள்

குட்டைத் தேனீர்

பீங்கான்களை அடிக்கடி தவறவிடும்
நோய் பற்றிக்கொண்டது அவனுக்கு
கிழக்கில் குட்டையோரம் பெரும் மலை போல்
உடைந்த பீங்கான்களைக் குவித்திருந்தான்
சின்னஞ்சிறிய குளவிகள் அதில் கூடு கட்டி
பெரும் சிலந்திகளுக்கு இரையாயின
பீங்கான் கணக்கில் அனேகசம்பளம் இழப்பாயிற்று
சீனத்திலிருந்து வரும் உயர்தரப் பீங்கான் அவை
குதம் வழியே அடிக்கடி புணரப் படுவதால்
அவன் கனறும் சிரங்கு நோய்க்கு ஆளாயிருந்தான்
நடந்து கொண்டே தூய்மையான மழை நீரை நாக்கில்
ஏந்துவது அவனுக்குப் பிடிக்கும்
அடுக்க முடியாமல் பீங்கான்கள் வந்து விழுந்த வண்ணம்

இருக்க குட்டை தேனீராய் மாறியதையும்
நிலம் பீங்கான் கோப்பையாய் வானுயர எழுவதையும்
கண்டு நள்ளிரவில் தன் குறிகளை இரணம் கிளர கசக்குவான்
யார் ஒருவன் மறைவிடங்களில்
தாயின் நிர்வாணத்தை இரகசியமாய்க் காண்பானோ
அவன் தேவ உலகில் குழந்தையாய்ப் போய்ச் சேர்வான்
என அவன் ஆசீர்வதிக்கப்பட்டதிலிருந்து
பகல் இரவு காணாது பீங்கான்களை
உடைத்துக் கொண்டே இருக்கிறான்.

ஹவி கவிதைகள்

ஞாபக மழை

யாரோ
மர்மமான புதிர் மனிதர்
நாளின் மெழுகு வர்த்தியை
ஊதி அணைத்துக் கொண்டு
இருக்கிறார்
ஒவ் வொன்றாக
அக வெளி எங்கும் மெல்
லிய ஈர இருள் பரவும்
நட்சத்திர பாடலை
முடித்துக் கொண்டு இசை
கலைஞர்கள் போய்
விட்டார்கள் மேடையை வெறுமை
ஆக்கி விட்டு
சுருண்டு கிடக்கும் சுடர் மௌனம்
ஒளியற்ற கனவில்
மரங்கள் சிற்பங்களாகி
வாழ்வின் தார்ச் சாலை
யெங்கும்
ஞாபக மழை வழிந்த ஈரம்.

கனவில் ஒளிரும் முத்தங்கள்

முத்தங்களின் தடாகங்களில்
சரிந்து அவிழ்கின்றன தேகத்தின் உடல்
அலையடிக்கும் கரையில்
காதலின் ஈரத்துடன் அலைகின்றன
ரோஜா நிற மண்புழுக்கள்
நினைவின் தடங்களில் சுருள்கின்றன
வாழ்தலின் நிறங்களைச் சொல்லி
முத்தங்களின் வாசனை ஒளிர
நிறமிகள் பூக்கின்றன
உடல்களின் காதல் கனவுகளில்
திரவங்கள் வரையும் கவிதை
ரத்த நாளங்களைக் கீறி
விநாடிகள் துடிக்க
மௌனங்கள் கரைகின்றன
உயிர் இசையின் வெம்மையில்
காற்றலைகளைச் சிற்பித்து
கால மண்ணில் ஆழ்கின்றன
தம் தம் வளைவுகளைத் தேடி
பால் வெளிப் பாதையில்
சக உயிர்கள் சஞ்சரிக்கும்
வெளிச்சத்தை உத்தேசித்து
வெவ்வேறு திசைகளில்

அசதா

ராஜ விசுவாச கொலைக் கூலி

நிரேஷ் போத்தார்

பெரும் கனவின்
சாகசம் போலிருக்கும்
உன் வசிப்பிடம்
சொர்க்கத்தின்
மிளிரும் பிரதி
இன்றிரவு நான்
உன் பளிங்குச் சயன அறைக்குள்
பிரவேசிக்கும் படிக்குத்
தளர்த்தப்பட்டது காவல்

செம்மஞ்சள்
தீவட்டியொளியில்
அறையெங்கும்
உன் பிரசன்னம்
கதகதப்பு

ஆழ்ந்து
உறங்கிக் கொண்டிருந்தாய்

சன்னமான மூச்சொலிக்கும்
விம்மி அமிழ்ந்த
ஸ்தனங்களின் காட்சிக்குமாய்
ஊடாடியது
என் நறுக்கோலையின்
ரகசிய ஆணை.

என்றைக்கும்
திரும்பப் பெற முடியாத
பொக்கிஷத்தை
ஒப்படைக்கும் முன்பாக
பெருந்துயருற்றேன்

காலடியில்
மண்டியிட்டுப் பெற்றேன்
பின் எப்போதும்
பெற முடியாத மன்னிப்பை

தொலைவே
கானகத்தின் மௌனத்தில்
உறக்கம் கலைந்தவொரு
வௌவால்
நேரான போது

கைக் கொண்ட ஆணைப்படி
விஷமிட்டேன்
யாரும் முத்தமிடா
உன் அதரங்கள் வழி

நிலவு மங்கித்
தரையில் வீழ்கையில்
வெளியில் நிறைந்த
இருளில் கலந்து
நடந்து கொண்டிருக்கிறேன்
ராஜவிசுவாசி
உன் இருப்பின்
எதிர்த்திசையில்
சில கணங்கள் முன்
முகிழ்த்த
நம் காதலை நோக்கி.

ஸ்ரீ நேசன் கவிதைகள்

இறுதிப் பகல் தூக்கம்

வெயிலால் சூழப்பட்ட தகிக்கும் வயல்வெளி தனி வீட்டில்
மத்யான நேரத்து வயோதிகர்களின் பகல் தூக்கக் கனவுகள் நடமாட
கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றிய
பயமும் அவநம்பிக்கையும் கொண்டதான பாயில் வீழ்ந்திருக்கிறாய்
மலையொன்றில் ஏறியதிலிருந்து இறங்குவது வரையான
அனுபவத்தின் அலைந்த காட்சி ஒன்று அசைந்து மறைகிறது
சந்திப்புகள் எல்லாவற்றுக்கும் பின்பான தனிமை கிளர்ந்தெழச் செய்யும்
பிரிவுகளின் உபாதைகள் விஷப்பூச்சிகளென மொய்க்க
அரைத் தூக்கத்தின் விழிப்பிம்சைகளில் புரள்கிறாய்
நேற்று தான் வந்த கடிதம் அதிகம் பேசிய களைப்பில் உறங்குகிறது
வற்றி வறண்ட மறு எல்லையைக் காணவியலாத அகன்ற
ஒற்றை ஏரியின் அடிப்பாதையில் தனித்துத் திரியும் ஒருவன் தன்
முன்னுணர்வற்ற பாதுகாப்பின் எல்லையிலிருந்து விடுபட்டிருக்கவும்
எதையும் மையமிடாத ஒரு பேருந்து சுற்றுப்பயணத்தின்
குறிப்பிட்டிட முடியாத புள்ளியில் சிதைந்து கிடக்கவும் கண்டு
நீர்நிலையொன்றைக் கடக்கத் தயாராகும் செம்மறிக்கூட்டத்தின்
முதல் ஆட்டுத் துள்ளலாக எழுந்து அமர்கிறாய்
அதோ உன் குடியிருப்பின் மீது தம் நிழலை மெல்ல
போர்த்திப் பின் இழுத்துச் சென்றுவிடும் மேக நகரொன்று
வெம்மைத் தாங்கவொண்ணாத தனிப் பறவை அலகு பிளந்து
விழித்திரை மூடித்திறந்து சிறகுகளைக் காலொடுத் தீற்றி
ஓய்ந்து அமர்ந்திருக்கின்றது மரத்தின் மெல்லிய கிளையொன்றில்
பேரோசை எழுப்பும் குரலிமையொன்று வீட்டினுள் நுழைந்து
எறவானத்தின் வழி இறங்கிக் காணாமல் கரைகிறது
நடந்தது எதுவோ எதுவும் நடக்கவில்லையாவெனத் திகைத்து
மீண்டும் சாய்கிறாய் கண்மூடுகிறாய்
பலகாலத்துக்கும் விழிக்க முடியாததான இமைப்பளுவில்
தூக்கத்தின் பாதாளத்தை நோக்கி பிரக்ஞை தவற விழுகிறாய்
அங்குக் குளிர்ச்சியும் நிழலையும் உனக்குத் தர காத்துக் கிடக்கும்
தற்கொலையுண்டவன்தன்
எல்லா குழப்பங்களையும் இறக்கிவைத்துவிட்ட ஆன்மா.

ஆமாம் எழுதிக் கொள்கிறேன்

மலையின் மீது வெயில் படர்ந்திருக்கிறது
ஆமாம் படர்ந்திருக்கிறேன்
நீருக்கு மேல் பறவை பறந்து செல்கிறது
ஆமாம் பறந்து செல்கிறேன்
மரத்தின் இலைகள் மெல்ல அசைகின்றன
ஆமாம் மெல்ல அசைகின்றேன்
தும்பி ஒன்று தனிமையில் அமர்ந்திருக்கிறது
ஆமாம் தனிமையில் அமர்ந்திருக்கிறேன்
தவளைகள் சேர்ந்து கத்துகின்றன
ஆமாம் சேர்ந்து கத்துகிறேன்
மனிதர்கள் சென்றும் வந்தும் கொண்டிருக்கிறார்கள்
ஆமாம் சென்றும் வந்தும் கொண்டிருக்கிறேன்
பூமி வேகத்தில் சுழன்று கொண்டிருக்கிறது
ஆமாம் வேகத்தில் சுழன்று கொண்டிருக்கிறேன்
உயிரணு ஒன்று இரண்டாய்ப் பிரிகிறது
ஆமாம் இரண்டாய்ப் பிரிகிறேன்
மேகங்கள் சில உருமாறுகின்றன
ஆமாம் உருமாறுகின்றேன்
உலகத்தைச் சுற்றிக் காற்று சூழ்ந்திருக்கிறது
ஆமாம் சூழ்ந்திருக்கிறேன்
புணர்ச்சியின்பம் உலகத்தை மறக்கச் செய்கிறது
ஆமாம் மறக்கிறேன்
நிலவு வளர்ந்தும் தேய்ந்தும் அலைகின்றது
ஆமாம் வளர்ந்தும் தேய்ந்தும் அலைகின்றேன்
புதிதாய்ப் பிறந்த குழந்தை வீறிட்டு அழுகிறது
ஆமாம் வீறிட்டு அழுகிறேன்
கவிதை ஒன்று தன்னை எழுதிக் கொள்கிறது
ஆமாம் எழுதிக் கொள்கிறேன்

இருத்தல்

அவள் சொல்லக்கூடும்
சார்த்திய வீட்டிற்குள் பூட்டிய சைக்கிளாய்
நான் இருக்க விரும்பவில்லை
அவன் சொல்லக் கூடும்
சார்த்திய வீட்டிற்குள் பூட்டிய சைக்கிளாய்
நான் இருக்க விரும்புகிறேன்

கண்டராதித்தன்
கவிதைகள்

சந்தானராஜ்

ஹெர்பேரியச் செம்பருத்தி

நட்சத்திரங்களுக்குப் பதில்
நட்சத்திரங்கள் நிறைந்த
ஆகாயப் படிமத்திலிருந்து
உதிர்ந்த ஒற்றைச்செம்பருத்தியை
மலட்டுச் செடியில் ஒட்ட வைக்கவோ
பூஜை அறையில் கொண்டு வைக்கவோ
பிரம்ம ராட்சஸ் தன் காதலிக்கு
ப்ரியமாகக் கொடுக்கவோ முற்படும்போது
தான் அங்கிருந்து வரும்போதே
ஹெர்பேரியம் பற்றி அறிந்திருப்பதாக
தெரிவித்தது ஒற்றைச் செம்பருத்தி
0

இத்தனை காலம் கடந்தும்
இவ்வளவு
பொருட்படுத்தாமைகளுக்குப்
பிறகும் அன்பைப்
பெறுவதே குறியென்றின்றி
அதற்கும் மேலொரு
எதிர்பார்ப்பு
தீவிரம்
ஒரு வெறி
இருந்தது உண்மைதான்
0

காதல்

ஆளுயர பனந்தட்டிகளால்
தடுத்து மறைத்த
தொம்பைகளும் பானைகளும்
நிறைந்த இந்த இடத்தில்தான்
கள்வன் எனைக்
கண்ணாறக் கண்டான்
கைகளால் நான் மறைத்தது
போகவும் கிழங்கைப் போல
திரண்டிருந்ததெனச் சொல்லி
மனதைக் கரைத்தான்
மெல்லிய அவன் கைகளைப்
போலவேயிருக்கும்
இவரின் கைகளையெடுத்தென்
இடையைத் தழுவுமாறு
அணைத்தேன்
என் செல்லம் என் பட்டு
எனக் கழுத்தில் முத்தமிடும்
இளையவனைப் போலன்றி
அமைதியாய் உறங்குகின்றார்
இவர்.

இன்று மட்டும்
விலகி இருக்கச் சொன்னால்
கோபித்து நாள் முழுவதும்

கண்ணில் படமாட்டான்
கொஞ்சி அவன் தலையைக்
கோதும்போது
அவன் கண்களிடமும் கைகளிடமும்
தோற்றதுபோல்
என் இடது கையில்
பிசுபிசுக்கும் உதிரத் துணி
இறுதியாக முத்தமிட்டு
வலித்ததா என்பான் கள்வன்
நானும் பொய் சொல்வேன்

வீட்டின் இந்த பகுதிக்கும்
அந்த பகுதிக்கும்
வௌவால் பறக்கும்
பௌர்ணமி அந்தி
அத்தை கோவிலுக்குச் சென்றிருந்தாள்
இவரும் இங்கில்லை
வாசலுக்கெதிரே இருக்கும்
மதனியறையில் கட்டில்
துணிகளை மாற்றும் போது
இளையவன் வந்தால்
எப்படியிருக்கும்
என்றெண்ணினேன். வந்தான்.

மெல்லிய உருவம் கொண்டவனும்
என் நாசியைக் கடிப்பவனும்
என் ப்ரியமான இளையவன்
பசுக்கள் வளையவரும்
கொட்டடியில் என்னைத்
தழுவும் போது
தாலிச் சரடை தன் கழுத்தினுள்ளும்
நுழைந்து மழைக் கவ்வ வருவான்
வேண்டாமென்று தடுத்தால்
எங்கே கவ்வாமல்
போவானோயென்று.

முத்தமிடும் போது
நெற்றியுச்சியிலும் நடுநெற்றியிலும்
இருக்கும் செந்தூரத்தைத் தீற்றிக்
கொள்வான் அது அவன் கோபத்தால்
சிவக்கும் அழகைப் போலிருக்காது
என்றாலும் எனக்குப் பிடிக்கும்

சுண்ணமடித்த சுவற்றோரம்
சாய்த்தென்னைத் தழுவுவான்
சரம் தொடுத்த கையோடு
சூடியிருந்த முல்லை நசுங்கிய
மணம் இன்னும் என்னைக் கிறக்கும்

சப்தமெழக்கூடாதென அணிந்த
ஒற்றை வளையலையும்
அடிக்கடி உடைத்து
சப்தமெழுப்புவான்

அவன் விருப்பத்திற்கு மாறாக
ஏதும் செய்வேனோ என்ற
அச்சத்தால் இவரை
சிடுசிடுக்கின்றேன்

சம்பங்கியும் முல்லையும்
மணக்கும் மேடையில்
என்னை விட மார்பகங்கள் பெருத்த
இளம் பெண்ணிற்கு நாணைச் சூடி
மறுவீடு சென்றான் என் இளையவன்

நிலா, முற்றம், திண்ணை
தோட்டர்து மரங்களென
இந்த நாளைத் தழுவிக்
கொண்டிருக்கும் இரவே
இன்னும் சற்று நீண்டு இரு
அதற்குள் விடிந்ததென
இளையவன் வருந்தக் கூடாது

இவர் தூங்கிய பின்
இளையவனை நினைத்து
பிறந்த மேனியோடு அழுது
கொண்டிருப்பேன்
அப்பொழுது நீ வந்து தழுவிக்
கொள்ள
அனுமதிப்பேன் பதிலுக்கு.
0

ஆபிதீன்

வாழைப்பழம்

எத்தனையோ பழம் இருந்தாலும் இந்த் வாழைப்பழம் மாதிரி ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிரிப்பை வரவழைக்கிற பழம் எதுவும் இல்லை என்பேன், அது சின்ன அசட்டு வாசம் அடிக்கும் பூவன் பழமாகவோ இனித்துக் கொட்டும் கற்பூரவள்ளியாகவோ இருக்கட்டும் அல்லது நீளமான 'வழுக்' 'வழுக்' என்றிருக்கிற பச்சை நாடாவாவோ மொந்தனாகவோயிருக்கட்டும் அதுவுமில்லாது இடையேயுள்ள மாவாய் கரையும் ருசியுள்ள நாட்டு ரஸ்தாளியாகட்டும் எதுவாக இருந்தாலும் இவர்களுக்குச் சிரிப்பு அதன் ருசியில் இல்லாது பழத்தின் பருமனிலும் நீளத்திலும்தான் இருக்கிறது. ஊரில் ஆண்கள், 'வாடா' என்கிற இறால் போட்ட வடையைக் கிண்டலுக்கு எடுத்தால் பெண்களின் ஆயுதம் துப்பாக்கியை விட வாழைப்பழம்தான், சம உரிமை கேட்டுப் போராடாமல் ஜெயிக்க வைத்து விட்டது அவர்களை... அதுவும் கல்யாண வீடுகளில் அது பற்றிய கேலிப் பேச்சுக்கள், 'டோல்' சத்தத்தை

விட அதிகமாகி இருக்கிறது. டோலடித்து பாடுவதிலும் பாடுபொருள் பெரும்பாலும் வாழைப்பழம்தான்.

'சுல்தான் மரைக்கார் கூப்பிடுகிறாரு. என் தங்கச்சிப் பொண்ணே வாங்க...!'டோல்பாட்டு! எதற்காக கூப்பிடுகிறார்? எல்லா பெண்களுக்கும் தெரியும். 'ஊஉலு-லு ல்லுலு-லு-லு உ' என்று குலவையிட்டு கும்மாளம்தான்! தோழிகளை, வேறு வேறு கணவர்மார்களுடன் இணைத்துப் பாடச்சொல்லும் அருவருப்பான விஷயங்கள் இப்போதெல்லாம் குறைந்து விட்டனதான். ஆனால் பேச்சு எனும் 'டோல்' சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. அதற்குத் தீனி வாழைப்பழம்தான். அதன் தோல் என்பது உண்மையில் சிரிப்பால் மூடப்பட்டிருப்பது. சிரிப்பின் வண்ணம் பச்சையாக இருக்கும்... மஞ்சளாக இருக்கும்...

தோழன் பசியாற வைக்கும் ஊரில் குட்டை ஜெஹபர் லாத்தா மறக்காமல் ஒரு மரவையில் ஒரு பெரிய வாடா வைத்து அதன் துளையில் ஒரு மொத்தமான வாழைப்பழத்தை திணித்து வைப்பாள். 'கொல்லை கழிச்சல்ல போயிடுவா. என்னா தஹிரியம்?'! என்று பெரியம்மா கனியாச்சி கண்டிக்கிற மாதிரி சொன்னாலும் (சின்ன பிள்ளைகள் நாங்கள் ஒன்றும் தெரியாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோமே...!) முகம் முழுக்க எதையோ நினைத்து 'குப்'பென்று சிவப்பு.

[illegible]யாச்சிக்கும் தைரியம் அதிகம்தான். உடம்பு சரியில்லாமல் புஹாரி பெரியாப்பா சபரிலிருந்து வந்திருக்கும்போது, அவர் வீட்டில் நுழைந்ததுமே 'என்னட மச்சான்...' என்று ஓடிப்போய் அவர் நெஞ்சில் முத்தமிட்டுக் கண்கலங்க அணைத்துக் கொண்டதைத் தெரு ரொம்ப நாள் பேசிற்று. 'எஹலுக்கு மட்டும்தான் மாப்பிள்ளை...!' என்று முகத்தை வலித்துக் கொண்டது.

இப்போது கனியாச்சிக்கு துணிச்சலுடன் கால் மரப்பும் சேர்ந்து கொண்டு விட்டது! சௌதியிலிருந்து வந்திருந்த அவர்களின் மூத்த மகன் நத்தர் தனது நண்பன் அமானுதமாகக் கொடுத்த கேஸட் என்று ரகஸ்யமாக வைத்திருந்ததை, அவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் 'ஒலியும் ஒளியும்' என்று ('ஒய்யிம் ஒய்யிம்' என்பான் ஒரு தெருப்பொடியன்) நினைத்துக்கொண்டு வி.சி. ஆரில் போட்டு விட்டு தன் கூடத்து அறையில் தனியாக உட்கார்ந்திருக்கிறார்கள்! ஒலியும் ஒளியும்தான். ஆனால் 'நீல ஒலியும் ஒளியும்'. வீட்டில் உம்மா, மாமி எல்லாம் யார் வீட்டு சடங்குக்கோ போயிருந்தார்கள். என் வீட்டு கனியாப் பிள்ளைகளோ அடுப்பங்கரையில் புகுந்திருந்தார்கள். வெளிநாட்டுக்குப் போகாத வயது வந்த 'அடப்பு' நான் அப்போது மாமாவின் ரிகார்டிங் கடையில் வேலை செய்து கொண்டிருந்த சமயம். வீட்டிற்கு வந்தவன் 'உம்மா எங்கே?' என்று கேட்பதற்காக அவர்கள் அறையில் நுழைந்தால் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த கனியாச்சி யையும் அவர்களை அப்படி ஏழாவது வானத்திற்கு எடுத்துச்சென்ற அந்த, பார்த்த ஒரு வினாடியிலேயே என் நரம்புகளை முறுக்கேற்றிவிட்ட அந்த படத்தையும் பார்க்கிறேன்...! பெரியம்மா குறைந்தது அரைமணி நேரமாவது பார்த்திருக்க வேண்டும். என்னைப் பார்த்ததும் திடுக்கிட்ட வர்களாக அவர்கள் போட்ட கூச்சல்...!

'அடக்கு அடக்கு இந்த நஜீஸை! உம்மாடி. என்னா நரவல் டேப்பு! பெரிய ஒசுபு கெட்ட புள்ளையிலுவாலெ இக்கிது. ரொம்பத்தான் . கெட்டுப் போயிட்டானுவ கருமங்கொள்ளுவானுவ'.

நான் உடனே அடக்கினேன்.

குறுகுறுப்பு கேள்வியாய் வெளி வந்தது: 'என் கனியாச்சி... உடனே நீங்களே அடக்கியிருக்க வேண்டியதுதானே?'

'பாரபலா... இந்த ஹராமுலெ பொறந்த காலு மரத்து போச்சுடா! அப்படியே உட்கார்ந்து கண்ணை மூடிக்கிட்டேன்!'

இன்னும் அவர்களுக்கு நடுக்கம் தீரவில்லை. 'தப்பா தப்பா. . .'என்று காதை மூடிக்கொண்டார்கள்!

நான் சிரித்துக்கொண்டே வெளியே வந்துவிட்டேன். கண் மூடியிருந்த முகமா இது? வாழைப்பழங்களை ஒன்றாகப் பார்த்த மாதிரி அல்லவா இருக்கிறது! கேட்க இயலுமா? 'படிய வுளுந்துடுவான். பெரியம்மாகாரிட்டே பேசுற பேச்சா இது?' என்று திட்டு விழும் பெரியவர்கள் எல்லை. வைத்திருக்கிறார்கள். வாழைப்பழத்தோல் சறுக்கிக் கூட அவர்கள் எல்லையில் போய் நாம் விழக் கூடாது!

சப்தம் போட்டு யாரையாவது வந்து அடக்கச் சொல்லலாம் என்று பார்த்தால் வந்தவர்களும் பார்த்து கெட்டுப் போய் விட்டால்? நாளைக்கு கட்டிக் கொடுக்கப் போகிற குமர்கள்.

குமர்களுக்கும் எல்லாம் தெரிந்துதான் இருக்கிறது என்று கனியாச்சிக்குத் தெரியவில்லை. வீட்டில் எந்த பெண்களாவது வாழைப்பழத்தை வாயில் வைத்தால் குமர்களின் முகம் 'குப்' பென்று மலர்கிறதே...!

வாழைப்பழம் என்பது வெறும் பழத்தை மட்டும் குறிப்பதல்ல. கைலி உடுத்தும்போது அது அவிழ்ந்து விடாமல் இருக்க, சுருட்டி மடக்கி ஒரு சிறிய நீளமான திண்டு போல் வைத்துக் கொள்வதற்குப் பெயரும் அதுதான். இடுப்புக்கும் கைலிக்கும் இடையில் மணி பர்ஸோ, கை நேஞ்சியோ சொருகிக் கொள்ளலாம். ஏன், அந்த வாழைப்பழத்தின் உள்ளேயே காக பணத்தை வைத்து. சுருட்டிக் கொள்ளலாம்.

ஊர் பாஷைகள் எல்லாம் புத்து புதிதாக வரும் போலீஸ்காரனுக்குத் தெரியுமா? வாழைப்பழம் என்றால் ஜாதி மதம் கடந்து அவருக்கும் சிரிப்பு வரும் என்றாலும் கப்பல் தொப்பி வாப்பாக்களின் ஊரில் அது கைலி முடிச்சுக்கும் உள்ள பெயர் என்பதற்கெல்லாம் பல்கலைக் கழகத்தில்தான் படிக்க வேண்டும்.

ஒரு போலீஸ்காரன், சிவன் கோயில் தெற்குத் தெருவில் இருக்க சூதாட்ட கிளப்பில் ஒரு பாவப்பட்ட சாயபுவை பிடித்து வந்து 'காசை எடு' என்றிருக்கிறான்.

'வாலப் பளத்திலே இக்கிதுங்கய'. காமில் சாயபு கீழே குனிந்து பார்த்தபடி நிஜத்தைத்தான் சொன்னான்.

செம அடி!. போலீஸ்காரன், வேறு பழத்தை சொல்வதாக எடுத்துக் கொண்டு விட்டான்!

சிரிக்காதீர்கள். எனக்கு கோபம் வருகிறது... வாழைப்பழம் என்றால் சிரிப்பு மட்டுமா?

ஒரு குடும்பத்தையே சிதறிப் போக வைக்கும் அது...

ஒவ்வொரு குடும்பத்திற்கும் !
வரைய வேண்டுமென்றால் நான் என் குடும்பத்தின் சின்னமாக வாழைப்பழத்தையே தேர்ந்தெடுப்பேன். தனியாக காட்டுவதை விட எதிரும் புதிருமாக வந்து ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளும் இரு வாட்கள் போல அலைகளை வரைய வேண்டும்.

வரைவதற்கு முன் என் கனாமலா தெருவில் இருக்கிறேன்...

அனுமதி கேட்க வேண்டும். அவர்கள்தான் அந்த சண்டையை ஆரம்பித்தது. முக்கியமாக என் கடைசித் தம்பி ஹாஜானியும் சின்ன ஜக்கரியாவும். ஆனால் வீட்டுப் பெரியவர்களைக் கேட்டால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். 'பச்சைப் பால்வனுவ. வெளையாட்டா கேட்டதுக்கெல்லாம் இப்படியா இந்த கருமங் கொள்ளுவான் செய்வான்?' என்பார்கள் எது விளையாட்டு? அவ்வளவு பெரிய வயதான, ஹஜ்ஜுக்குப் போய் விட்டு வந்த சின்னத்தாவை, கள்ள தாடி என்று சொல்வதா விளையாட்டு?

அவர் கள்ள தாடியாகவே இருக்கட்டும்; அதற்காக இந்த பொடிப் பையன்கள், அதுவும் அவர் மனைவி வீட்டுப் பிள்ளைகள், அத்தனை பேர் முன்னிலையில் ஒளிந்து கொண்டு கத்தலாமா கள்ளத்தனமாக? அல்லாஹ் மன்னிப்பானா இந்த ஹராமிகளை?

என் சின்னம்மா ஹைஜானின் மாப்பிள்ளையான அவர், ஹஜ்ஜுக்குப் போய் வந்த பிறகும் கடைக்கு சாமான் வாங்க வரும் பொண்டுவளை மடக்கி விடுகிறார் என்று அந்த பட்டம் வந்து விட்டது. கேட்டதைத்தானே கொடுக்கிறார்? ஆனால் ஹைஜானுக்கு எப்போதும் சின்னத்தா மேல் சந்தேகம்தான். 'வெள்ளித் தட்டுலெ நாவல் பழத்தை வைச்ச மாதிரி இக்கிறா' என்று தன்னை கேலி செய்யும் தன் சிவந்த மாப்பிள்ளை எப்படி சுத்தமாக இருக்க முடியும்? இந்த ஆள் கடையிலெ எப்போவுமே பொண்டுவ கூட்டமாம்ம...

பொண்டுவளா பொண்டுவளா நண்டு கடிக்க...! .ஆம்பிளையிலுவா ஆம்பிளையிலுவா அல்லாஹ் வச்சி காப்பாத்த!

பள்ளி விடுமுறை நாட்களில் நான் சின்னத்தா கடையில் வேலை பார்த்து விட்டு (சம்பளம்: ஒரு பென்ஸில்!) சின்னம்மா வீட்டுக்கு சாப்பிட வந்தால் அது கேட்கிற கேள்வியெல்லாம் 'இன்னக்கி யார் யார் வந்தாலுவ'? என்பதுதான். 'சும்மா பேசிக்கிட்டிந்தாஹா...' என்று சொன்னால் 'போடா... நீ ஒரு மலாக்கா பேயன்'! என்று சொல்லும். என் தோளில் போட்டு வளர்த்த சின்னம்மா சொல்வது சரியாகத்தான் இருக்க வேண்டும். தவிர மலாக்காவில்தான் என் பாட்டனார் தோட்டத் தொழிலாளியாய் அந்த காலத்தில் வேலை பார்த்து இருக்கிறார். பேப்பரம்பரை.

யாருக்கு எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். எனக்கு என் சின்னத்தா உசத்திதான். பாங்கு சொன்னதுமே எல்லாவற்றையும் தூக்கிப்போட்டு விட்டு சின்ன ஹொத்துவா பள்ளிக்கு ஓடுவதால் மட்டுமல்ல. எனது நோய்வாய்ப்பட்ட உடம்பு, சங்கடங்களில் மாட்டிக் கொள்ளும் போதெல்லாம் அவர்தான் பதறி ஓடி வருகிறார்.

சென்னை புதுக் கல்லூரியில் படிக்கும் போது அப்படித்தான். கடுமையான வயிற்று வலியால் ராயப்பேட்டை மருத்துவமனையில் அவசர அவசரமாக சேர்க்கப்பட்டேன் நடு ராத்திரியில். காலையில் முழித்தால் எதிரே தெரிந்த முகம் சின்ன தாடியை எப்போதும் உருவியபடியே இருக்கும் சின்னத்தா! நண்பன் நூர் சாதிக் ஊருக்கு ஃபோன் செய்ததுமே உம்மா, சின்னம்மா, மாமி எல்லோரையும் ஒரு டாக்ஸியில் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடி வந்திருக்கிறார்.

சின்னத்தா அருகில் இருக்கும் போது எப்படி குணமடையாமல் போகும்?

மஞ்சள் காமாலை வந்திருந்த போது பரவை சோறுக்கும், காரைக்கால் மோருக்கும் கூட்டிக் கொண்டு அலைந்தது யார்?

என் மூல ஆபரேஷனுக்கு பணம் தந்தது யார்? 'உம்மா... நெருப்பை வச்ச மாதிரி எரியுதே...' என்று நான் துடித்தபோதும் ஆசன வாயில் திணிக்கப்பட்டிருந்த நீளமான மருந்துத் துணியை கம்பவுண்டர் சடாரென்று உருவியபோதும், நான் அலறியபோது அவருக்கு அழுகையல்லவா மேலோங்கியிருந்தது.

எனக்கு மட்டுல்ல. குடும்பத்தின் சுன்னத்து, கல்யாணம், மௌத்துகள் அத்தனையிலும் அவர் கை படாமல் இருந்ததுண்டா? இத்தனைக்கும் அவர் வெளி மாப்பிள்ளை...!

சின்னத்தா என்று நான் அழைத்தால் இன்றும் அவருக்கு சிரிப்புதான். அத்தா போட்டு இவரை மட்டும் நான் அழைப்பது சின்ன வயதில் வாப்பா சொல்லிக் கொடுத்தது. வாப்பாவுக்கு சொந்த ஊர் ஏம்பல். அறந்தாங்கிப் பக்கம். அங்கேயெல்லாம் அத்தா என்று அழகான தமிழ்தான். 'பித்தா பிறை சூடி' பாடலில் வரும் 'அத்தா' என் வாப்பாவின் அத்தாதான் ஆனால் தாத்தாவை அப்பா எனும் ஊரில் அத்தாவுக்கு மதிப்பிருக்குமோ? 'சின்னாப்பா என்றுதான் கூற வேண்டும். ஏனோ இவர் ஒருவரை மட்டும் அப்படியே கூப்பிட்டு பழகி விட்டது. எல்லாவற்றுக்கும் காரணம் தெரிய வேண்டுமா என்ன?

சின்னத்தா 'போடா உங்க ஊருக்கு. நீ நாகூரான் இல்லே' என்று வெடைப்பார் இப்போதும். அதற்காக ஊரை விட்டு போய் விடமுடியுமா? பெரிய எஜமானே இந்த ஊர் இல்லையே...! எஜமான். இல்லாவிட்டால் ஊர் ஏது?

சின்னத்தா பின் எங்கே பிறந்திருப்பார்? எங்கே பிறந்திருந்தாலும் நானும் அங்கேதான் இருந்திருப்பேன். சின்னத்தா இல்லாத ஊரும் ஒரு ஊரா?

குடும்பத்தின் மற்ற பெரிய ஆண்கள் அனைவருமே வெளி நாட்டில் இருக்கும்போது அவர்கள் சார்பாக ஊரில், குடும்பத்தின் துணையாக இரண்டுபேர் மட்டுமே இருந்தார்கள். சின்ன மாமா யூனூஸும்தான் ஜமால் முறையது கல்லூரியில் பெரிய படிப்பு படித்து வேலை கிடைக்காமல் இருந்தது யூனூஸ் மாமாவுக்குத்தான். முன்பெல்லாம் கலகலப்பாகப் பழகியவர்தான். அவருடைய தூண்டுதலால்தான் நான் ஓவியம் வரையவே கற்றுக் கொண்டேன். சின்ன வயதில் நான் மிக முயன்று கருணாநிதியை **Water Color** ல் வரைந்து அவரிடம் காட்டிய போது அவர் 'டேய்... என்னடா தொப்பி போடாம வுட்டுட்டா'! என்றார். இப்போது நினைத்தாலும் எனக்கு சிரிப்புவரும்.

யூனுஸ் மாமா ஊரை வெடைப்பதும் எனக்குப் பிடிக்கும். ஒருவரைப் 'பார்த்தால் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று சொல்லாமல் 'ஏங்...?' என்றுதான் இழுப்பார்கள் ஊரில். அதற்குப் பல அர்த்தம் கற்பித்துக் கொள்ளலாம் 'ஏன் உசுரோடு இக்கிறியும்?' உட்பட. அதற்கு யூனுஸ் மாமாதான் சொல்வார்: 'ஏன் என்று கேள்வி கேட்டவன் சைத்தான்தான்... ஆகவே ஊரில் முக்கால்வாசி சைத்தான்தான்' என்று.

'ஏங்..., சாக்ரடீஸாக இக்கெக் கூடாதீக...?'

'நீ ஒரு சைத்தான் உன்னட சின்னன்னத்தா மாதிரியே'! ஊரின் ஒரே ரஹ்மானியத்!

என்ன காரணமோ சின்னத்தாவுக்கும் அவருக்கும் பிடிக்காமல் இருந்தது. இருவரது வாப்பாக்களுமே அந்த காலத்தில் பனை ஓலை விசிறி வியாபாரத்தில் போட்டியாக இருந்தார்களாம். சுற்றியுள்ளவர்கள் விசிறி, இரண்டு பேருக்குமே உறவுக்காற்று

கிடைக்காமல் போய்விட்டது போலும்.

இன்னொரு முக்கியமான சம்பவம்: யூனுஸ் மாமாவுக்கு சௌதி விசா வந்திருந்தபோது சண்டைக்கார சின்னத்தாவிடமே கடைசியில் ஏஜென்டுக்கான பணத்திற்கு கெஞ்சினால் கிடைக்கவில்லை. ஆனால் யூனுஸ் மாமா அதற்காக தன் கூத்தூர் நிலத்தை விற்கப் போகும்போது வாங்க நின்றது சின்னத்தா!

யூனுஸ் மாமாதான் சின்னத்தாவுக்கு அந்த மோசமான பட்டத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

ஒரு பட்டம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், நடக்கிற காரியங்கள் நல்லதோ கெட்டதோ அதைச் சுற்றித்தான் நிகழும்.

என் மூத்த தம்பி ஜலாலை சௌதிக்கு அனுப்புகிறேன் என்று வெளி நாட்டு புரோக்கர் வேலை பார்த்து (என்ன வியாபாரம்தான் அவர் பண்ணவில்லை?!) அவனை புரைதா பேரிச்சை மரங்களில் ஏற வைத்தார் சின்னத்தா. அவன் அலறியடித்துக் கொண்டு கடிதம் போட்டதும் ஏற்பட்ட என் வாப்பாவின் கோபத்துக்கு சின்னத்தா சொன்ன காரணம்! 'நம்ம புள்ளைண்டு நான் ஐயாயிரம் ரூவாவைதானே கமிஷண்டு எடுத்துக்கிட்டேன் நானா...! பட்டம் வராமல் என்ன செய்யும்? என் வாப்பா, யூனுஸ் மாமா பரப்பிய பெயரை அங்கீகரிக்கிறேன் என்று வழி மொழிந்தார்.

அன்றிலிருந்து போக்குவரத்து குறைச்சல்தான். நான் மட்டும் போவேன். என்னால் என் சின்னம்மாவை பார்க்காமல் இருக்க முடியாது. சின்னம்மா வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த தங்கா மேல் கை வைக்காமல் இருக்க முடியாது சின்னம்மாவுக்கு தெரியாமல்தான்! ஒரே ஒரு முறை மாட்டிக் கொண்டேன். தூக்கக் கலக்கத்தில் செய்ததாக நடித்தேன். குண்ட பீங்கானாலேயே என் தலையில் போட்டது சின்னம்மா! ஆனால் யாரிடமும் சொல்லவில்லை. முக்கியமாக சின்னத்தாவிடம். சொன்னால் அந்த மனுஷனுக்கும் தூக்கக் கலக்கம் வரும்... இப்ப இருக்கிற பேரு போதும். சின்னம்மா, 'யூனுஸ் சௌதி போய்ட்டானாமே பெரிய கம்பெனிக்கி. உன்னையிலாம் எங்கே கூப்புட்டுக்கப் போறான்? நீ போனா அவர் வேலை போயிடுமே.' என்று சொல்லும். நான் போனால் அவருக்கு எப்படி போகும்?! ஆனால் அது சின்னத்தா கொடுத்த ஊசி. மருந்து எந்த அளவு என் மனதில் வேலை செய்யும் என்று தெரியாமலேயே வலிக்கால் குத்தும் சின்னம்மா. ஆனாலும் எனக்கு விட சின்னம்மாதான் உசத்தி.

தன் பிள்ளைகளுக்குக் கூடக் கொடுக்காமல் 'படிக்கிற புள்ளைக்கி உதவட்டும்' என்று மூனா தானா கடையிலிருந்து பழைய டிரான்சிஸ்டரை சின்னம்மாதான் வாங்கிக் கொடுத்தது. பாட்டு படிக்கிறதோ இல்லையோ அதன் முள்ளைத் திருகிக் கொண்டே இருக்கலாம். யூனுஸ் மாமா அப்படி ஒரு அற்புதமான பொருள் எனக்கு வாங்கிச் கொடுத்ததுண்டா? அவரா சொல்வது என் சின்னத்தாவை?

வீட்டிலிருந்த சின்னப் பையன்களையெல்லாம் எதிராகப் பேச விட்டு...! அதுவும் ஒரு வாழைப்பழத்துக்காக.

திராவியா சமயத்தில் எந்தப் பள்ளிக்கும் போங்கள் வாழைப்பழம்தான். எங்கள் தெரு முஸ்லீம் அறிஞர் சங்கத்திற்குத் தொழ வரும் பெண்களுக்குச் சீராணியாக 'பவுந்து' கொடுக்கவும் வாழைப்பழங்கள்தான் வருகின்றன. சஹர் நேரத்தில் தயிரோடு பழத்தை சேர்த்து சாப்பிடுவது ஒரு ருசிதான். ஆனால் சின்னப் பையன்கள்,

கொடுத்த மறுநிமிஷமே பெரும்பாலும் காலி பண்ணி விடுவார்கள். சுட்டாங்கி விளையாடி களைத்துப் போய் நிற்கிற பையன்களுக்குப் பசி வந்திருக்கும்தான்.

'முறை' செய்த வீடு, அன்று பழங்களின் எண்ணிக்கையை குறைச்சலாக அனுப்பி விட்டது சின்னத்தாவின் குற்றமா? அந்த வீட்டின் குற்றமும் அல்ல. இந்த 'படையிலுவ' அன்று பார்த்து இப்படி பெருத்துப் போகும் என்று தெரிய அவர்களுக்குக் காரணமா விளங்குகிறது?

'வாப்பாவு... நாளைக்கி தர்றேன்... பளம்லாம் முடிஞ்சி போச்சு'. என்று சின்னத்தா சொன்னதும் அத்தனை பையன்களும் ஏமாந்து போய் நிற்க, ஹாஜானியும் ஜக்கரியாவும்தான் கத்தியிருக்கிறார்கள்.

ஒரு கூடையை, சங்கம் ஒளித்து விட்டது என்பது பையன்களின் யூகம்.

தெருவாடியாகவே இருந்தாலும் யாருக்கும் சங்கத்தில் என்ன நடக்கிறது என்று புரியத்தான் இல்லை. மாதா மாதம் அதன் உறுப்பினர்களுக்கு சோத்துக் களறி .மட்டும் தவறாமல் நடக்கிறது என்பது தெரிகிறது. சங்கத்தின் பயன் நமக்கும் கிடைக்க வேண்டுமென்றால் நாமும் உறுப்பினராக மாறி விடவேண்டும்.

சங்கத்தின் சாதனை தெரிய வில்லை இந்தப் பொடியன்களுக்கு. செம்சட்டி வாடகைக்கு விடவா உட்கார்ந்திருக்கிறார்கள்? தான் ஆரம்பித்து லாபகரமாக நடத்தும் ஒரு நர்ஸரி ஸ்கூலுக்கு, ஒரு சொந்தக் கட்டிடம் கட்டக் கூட இன்று திணறினாலும் அந்த காலத்தில், 'தம்பல ஸ்கூல்' என்று சொல்லப்படுகிற தேசிய உயர் நிலைப் பள்ளிக்கு அதன் மாடிக்கட்டிடத்தை ஒட்டினாற்போல வலது புறம் உள்ள வகுப்பறைகளைக் கட்டிக் கொடுத்த, பேதம் பார்க்காத அறிஞர் சங்கமாக்கும்.

அந்தச் சங்கத்தின் முன்னாள் செயலாளரான சின்னத்தா இப்படி அற்பத்தனமாக நடந்து கொள்வாரா என்று சிந்திக்க வேண்டுமா, வேண்டாமா? அப்படியே பையன் களுக்குச் சீரானி தேவைப்பட்டால் அவரிடம் நேரிலேயே கேட்டி ருக்கலாம். சொந்தக் காரப் பிள்ளைகள் வேறு. இரண்டு ரூபாய்க்கு ராமு கடையிலிருந்து வாங்கிக் கொடுத்து விட்டு நாளை என் வீட்டுக்கு வந்து நான்கு ரூபாய் வாங்கிக் கொள்ளப் போகிறார். குற்றமா இது? குற்ற மென்றாலும் அதற்குப் போய் இப்படியா ஒரு ஈமான்தாரியை வசை பாடுகிறது?

'ங்கொப்பன ஒலிலுவளா...' என்று ஆக்ரோஷமாக அடுத்த நாள் காலை பாய்ந்து விட்டார் தன் மருமகன்களோடு...

மருமகன்கள் . கையில் வெட்டரிவாள், விறகுக் கட்டைகள்... எதிரில் நின்றவர்களுக்கெல்லாம் கண் மண் தெரியாமல் அடி. நத்தர், ஜலாலுக்கெல்லாம் வெட்டு. தெருவே போர்க்களம் பூண்டது போல்தான் இருந்திருக்கிறது.

முதல் நாள் இரவு, சின்னத்தாவின் ஆத்திரத்தைக் கண்டு பயந்து போய் சின்னம்மா ஹைஜான் என் வீட்டிற்கு வந்து, 'கள்ள தாடிண்டு கத்துன கழிச்சல்ல போவானுவ' சின்னத்தாவிடம் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எடுத்துத்தான் சொல்லியிருக்கிறது.

இவர்கள் மசியவில்லை. நத்தர் இப்போது தன் வாப்பா புஹாரி மாதிரியே சம்சினாகியிருந்தான். வாப்பாவைப் போல தெருவில் போகிற வருகிறவர்களிடமெல்லாம் சண்டை வளர்க்கிற ரகம் அல்ல. .ஆனால் அவரைப்போலவே அதே முரட்டுப் பிடிவாதம். தவிர சௌதியிலுள்ள யூனுஸ் மாமாவிடமிருந்து என்ன

செய்ய வேண்டுமென்ற தகவலும் பறந்து வந்துவிட்டது.

புஹாரி பெரியாப்பா இருந்திருந்தால் சின்னம்மா ஹைஜான் எச்சரிப்பதற்காகக் கூட என் வீட்டில் நுழைந்திருக்க முடியாது. அது மட்டுமல்ல அடுத்த நாள் நடந்த சண்டையிலும் சின்னத்தா தலை தெறிக்க ஓடியிருப்பார்.

பெரியாப்பா, தெற்குத்தெரு மம்மலி காக்காவிடம் மல்யுத்தம் பயின்றவர். 'குவா குவா மம்மலி காக்கா...' என்று, கூட்டின் போது ஜெதப்பான டான்ஸோடு பாடப்படும் பாடலின் மூலகர்த்தா. பயங்காட்டும் உருவம். அவரது சிஷ்யரான பெரியாப்பாவை பார்த்தாலும் எந்த குழந்தையும் பயப்படும்தான். பெரியவர்களே பயப்படுகிறார்களே...!

ஒரு முறை தொடர்ந்து மூன்று நாள் விடாமல் சுப்பு செட்டித் தெருவில் சைக்கிள் சுற்றியவனுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள் இளைஞர்கள். பெரியாப்பாதான் அவனுக்கு மாலை போட்டு பரிசு கொடுக்க வேண்டிய முக்கியமான நபர். சிறப்பு விருந்தினர் பேசவும் வேண்டுமே... அவர், 'தமிழ் நாட்டிலே... முக்கியமாக இந்தியாவிலே...' என்று தன் சமுதாய இளைஞர்களுக்குத் தேவையான வீர உரையை ஆரம்பித்தார். கம்பீரமாக எதிரே பார்த்தால் கூட்டத்தில் நூர்ஷா மரைக்காயரும் நிற்கிறார்! 23 ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூர் டன்லப் தெருவில் அவரை எதற்காகவோ இளக்காரமாகப் பேசிய வீரமில்லாத நூர்ஷா. வந்ததே கோபம் பெரியாப்பாவுக்கு...

'டேய் படுவா... ங்கக்கச்சர பன்னு...' என்று நூர்ஷாவை நோக்கி கைலியை உயர்த்திய வண்ணம் பாய்ந்தார். பெரியாப்பாவின் வலது பாதம் இப்போது வேர்த்துக் கொட்டும் நூர்ஷா மரைக்காயரின் முகத்திற்கு எதிரே... எது வேண்டுமானாலும் நடக்கலாம்... மேடைக்கு அருகே நின்று நான் பெரியாப்பாவின் முதுகைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆனால்... ஆனால்... நூர்ஷா மரைக்காயர் நடுங்கி ஓடுவதற்குப் பதிலாக இதென்ன வேடிக்கை பார்க்க வந்த பெண்கள் கூட்டமல்லவா அலறி அடித்துக் கொண்டு ஓடுகிறது... அவர்களின் கண்களில் இருப்பது கோபமாகவும் தெரியவில்லையே...

கனியாச்சி, 'ச்சீ... இது என்னா அந்திஸ~கெட்ட தனம்!' என்று மளாரென்று தன் மாப்பிள்ளையை கீழே தள்ளி விட்டதும்தான் 'விஷயம்' விளங்கிற்று.

புஹாரி பெரியாப்பாவின் 'கள்ள பறந்து,' ஜட்டி போடாமல் இருந்தது!

அன்று எல்லோருக்கும் அஞ்சு கறி சோறுதான்...!

அந்த வீரப் பெரியப்பா மௌத்தான துணிச்சலில்தான் சின்னத்தா அடிதடியில் இறங்கியிருக்க வேண்டும். எல்லாம் வெட்டித்தனமாக அலைந்து கொண்டு, குரங்கு இக்பாலிடம் கம்பு விளையாட்டு கற்றுக் கொண்டு வந்த அவரது மருமகன்கள் கொடுத்த தைரியம்.

சம்பவம் நடக்கும்போது நான் சௌதி அல்கோபாரில் அப்துல்லா அல் கால்தி என்ற காட்டரபியின் கம்பு விளையாட்டில் குற்றுயிராகக் கிடந்தேன். அவன் என்னை கம்பால் அடிக்கும்போதே அவன் சகோதரர்கள் சுருள் கத்தி, மடுவுடன் வந்து மேலும் ரணமாக்குவார்கள். கொடுமையான வாழ்வு...

ஜித்தாவில் பெரிய அமெரிக்கன் கம்பெனியில் வேலையில் சேர்ந்து இருந்த யூனுஸ் மாமாதான் ஒரு ஆள் மூலம் செய்தி அனுப்பினார் ஃபோனில் யாரும் என்னைக் கூப்பிட்டால் அரபி

என்னைக் குதறி எடுத்து விடுவான் என்பதால். அந்த இங்கிதமெல்லாம் தெரிந்தவர்தான். விபரமாகப் பேச என்னைத் துத்பாவிலுள்ள கூட்டாளி கடைக்கு வரச் சொல்லி இருந்தார். அங்கு அவரிடமிருந்து ஃபோன் வந்தது. சின்னத்தாவுக்கு அவர் கொடுத்த பட்டத்தை இப்போதாவது நான் புரிந்து கொள்ள வேண்டும் என்ற தொனி இருந்தது.

என்னால் நம்ப முடியாமல்தான் இருந்தது. சின்னத்தா இந்த அளவு போவார் என்று நான் எதிர் பார்க்கவில்லை. ஊரில் பாதுகாப்புக்கு என்று இருக்கும் குடும்பத்து பெரியவரே இப்படி என்றால் நாளை பட்டணச்சேரியிலிருந்தும். கொசத்தெருவிலிருந்தும் RSS கும்பல்கள் வந்தால்?

யூனுஸ் மாமா இட்டுக் கட்டுகிறாரோ? வசமான இரையல்லவா கிடைத்து விட்டது... ஊருக்கு ஃபோன் செய்து தெரிந்து கொள்ளுமளவு வசதியில் இல்லை நான். அப்போது ஃபோன் பேசுவதற்காக, ஐம்பது ரியாலுக்கு காசுகள் வாங்கினால் ஐந்து ரியால் கமிஷனாக 'பூத்'தில், கும்பலாக இருக்கும் ஃபிலிப்பைனியிடம் கொடுக்க வேண்டும். தவிர ஊர் ஆட்கள்தான் கடிதம் கொண்டு வந்து கொண்டேயிருக்கிறார்களே. எல்லா கடிதமும் சொல்லி வைத்தாற் போல 'பணம்... பணமறிய மனம்...' என்றுதான் ஆரம்பிக்கிறது... இல்லை. உம்மாவின் இந்த புதிய கடிதம் வேறு மாதிரி.

சுண்டிப் போயிருந்த இரத்தம் கொதிப்பது போல இருந்தது. 'பழிகாரி ஹைஜானும் கள்ள தாடியும் நம் குடும்பத்துப் பிள்ளைகளை கருவறுக்க வந்து விட்டார்கள். அல்லாஹ்தான் பிள்ளைகளைக் காப்பாற்றினான். எதிர் வீட்டு முஸ்தபா நானா மட்டும் அவரின் செல்வாக்கை வைத்து போலீஸ்காரனை கூட்டி வராதிருந்தால் பெரிய கொலை பாதகமே நடந்திருக்கும்...' என்று அலறியிருந்தது.

பினாங்கிலிருந்து வாப்பாவின் கடிதமும் வந்தது! 'இனி குடும்பத்தில் யாரும் எந்த உறவும் அந்த வீட்டோடு வைத்துக் கொள்ளக் கூடாது. உமக்கு நான் இதை Special ஆக சொல்ல வேண்டியிருக்கிறது. . உமது சின்னத்தாவின் யோக்கியதையை புரிந்து கொண்டு யூனுஸ் மாமா சொல்வது போல இனி நடக்கவும்' கூடவே, சின்னத்தாவுக்கு எழுதியிருந்த கடிதத்தின் நகலையும் இணைத் திருந்தார்கள். 'கண்ணியத்திற்குரிய கள்ள தாடி அவர்களுக்கு...' என்று கோபமான தமிழில் ஆரம்பிக்கும் ஒரு நீளமான கத்தி அது...

புரையோடிக் கிடக்கிற புண்ணில் இது வேறா! இனி நான் எப்படி என் சின்னம்மா வீட்டுக்கு போக முடியும்? என்னையும் சின்னத்தா அடிப்பாரோ? எனது புலம்பல்களுக்கெல்லாம் பொறுமையாக இருக்குமாறும், அல்லாஹ் பொறுமையாளர்களின் பக்கமே வெற்றியைத் தருவான் என்றும் எழுதும் சின்னத்தாவுக்கு எப்படி பொறுமையில்லாமல் போயிற்று?

சின்னத்தாவிடமிருந்து கடிதம் வருவது நின்று போயிற்று...

இரண்டே முக்கால் வருடத்திற்குப் பிறகு, எனது முதல் சபரின் விடுமுறையில், என் கல்யாணத்திற்காக ஊர் போவதிற்கு இடையில் இரண்டு மூன்று மௌத்துகள் குடும்பத்தில் நிகழ்ந்திருந்தன. சங்கத்திற்குப் பக்கத்தில்தான் சின்னம்மாவின் வீடு. அதே வரிசையில் பத்து வீடு தள்ளி கொய்யா மரத்தடி சந்தை ஒட்டினாற் போல் இருந்த, தன் கல்யாணம் வரை ஓடி விளையாடிய வீட்டில் நுழைய முடியவில்லை... வேராக இருந்த தன் உம்மா ஜொஹ்ராபீ மையத்தாகக்

கிடக்கும்போது கூட...!

மௌத் காரியமே இப்படியென்றால் மற்ற சுப காரியங்கள்?

யூனுஸ் மாமாவின் உத்தரவு...! இப்போது என் வாப்பாவின் உத்தரவு கூட என் உம்மாவுக்கு இரண்டாம் பட்சம்தான். ரியாதிலிருந்த தாய்மாமா ஜெஹபரே, தன் ஒன்று விட்ட தம்பி யூனுஸிடம் வாங்கிய கடனுக்குப் பயப்படும்போது வீட்டுப் பெண்கள் எந்த மூலைக்கு? அவர்களுடைய பெண்களின் திருமணங்களும் ஆண் பிள்ளைகளின் பயணமும் யூனுஸ் மாமாவின் விரலசைவில் நடந்து விடும் காலங்கள் வெகு தூரத்திலில்லை.

நான்தான் உடைத்தேன் யூனுஸ் மாமாவின் கண்ணுக்குத் தெரியாத பூட்டுகளை. இவர் கொடுக்கிற ஒரு ரூபாய் உதவிக்காக ஒரு கோடி மதிப்புள்ள என் சின்னம்மாவைத் துறப்பதா? எத்தன்ன காலம்தான் சின்னத்தாவை மன்னிக்காமல் இருப்பது? யாரொருவர் பகையுணர்ச்சியோடு மூன்று நாட்கள் அடுத்தவருடன் இருக்கிறார்களோ அவர்கள் தன்னை நேசிப்பவர்கள் அல்ல' என்று அகில உலகத்தாருக்கெல்லாம் அருட்கொடையாக அனுப்பட்ட அண்ணல் நபி (ஸல்-ம்) அருளியிருக்கின்றார்கள். மூன்று முறை சலாம் சொல்லியும் பகையாளி பேசவில்லையென்றால் ஒரு சிறு கல்லை எடுத்துக் கூட முதுகில் எறியலாம் திரும்ப வைக்க! இதை விட அழகாக ஒரு மார்க்கம் எப்படி சொல்ல முடியும்? ஆனால் ஆ...ர்களின் வழி நடப்பதாக சொல்லிக் கொள்பவர்களோ குறைந்த பட்சம் 3000 கிலோ உள்ள ஒரு பெரும் பாறையை வைத்து சின்னம்மாவையும் சின்னத்தாவை நசுக்குகிறார்கள்...

தாங்குவார்களா? நான் என் கல்யாணத்திற்கு இருவரையும் கூப்பிடத்தான் போகிறேன்...

வயிற்று வலிக்காரன் என்று என்னைப்பற்றிக் கேள்விப்பட்டு என் மாமானர், நான் நல்ல உடல் நலம் உள்ளவன்தானா என்று விசாரிக்க கூப்பிட்டது என் சின்னத்தாவை...! அவர்களை நான் எப்படி விடுவது? கூடாது? வாப்பாவும் உம்மாவும் என் தம்பியின் கழுத்தருகே இருந்த வெட்டுக்காயத்தை காண்பித்தார்கள். இது அவனது சிறுவயதில் ஏற்பட்ட விபத்தால் வந்தது அல்லவா? இல்லை, சின்னத்தாவின் மருமகன்கள் அதே இடத்திலே குறிவைத்து தாக்கினார்களாம். ஆனால் இதை விட பெரிய காயங்கள் சின்னத்தாவின் தோள் பட்டையில் ஏற்பட்டிருந்ததாக நண்பன் ரவூஃப் சொன்னானே...

யூனுஸ் மாமா ஜித்தாவிலிருந்து சிரித்த சப்தம் எனக்கு ஊரில் கேட்டது. அதே சிரிப்பு, நான் சௌதி திரும்ப சென்று அரபியுடன் ஏற்பட்ட தகறாறில் One Wayல் ஊர்திரும்பிய போதும் கேட்டது. கல்யாணத்திற்குத் தன் சின்னத்தாவைக் கூப்பிடப் போவதாகச் சொன்னவனுக்கு மறு விசா ஏற்பாட்டிற்கு பணமா? பேசாதே என்னுடன்...!

சின்னத்தாதான் உதவினார் நான் துபாய் வர. குறைந்த வட்டிக்கு என் மனைவியின் நகைகளை அடகு வைக்க உதவினார். அது ஒரு பரிசு. அவரது இளைய மகள் ஜ...பிமா கல்யாணத்திற்கு எல்லோரையும் அழைக்க வேண்டுமென்று சின்னம்மா விரும்பியபோது தன்னுடன் உறவை முறித்துக் கொண்ட உறவினர் வீடுகளுக்கெல்லாம் தைரியமாகப் போக நான் துணையாக வந்ததால் கொடுத்தது.

இருவரும் சேர்ந்து வந்து அழும்போது நான் என்னதான் செய்ய முடியும்? அவர்களோடு, பார்த்தாலே மூஞ்சியை திருப்பி வைத்துக் கொள்ளும் ஒவ்வொருவர் வீட்டிற்கும் போனேன். சின்னத்தா கண் எதிரிலேயே சின்னம்மா தன்

லாத்தாக்கள், மச்சி காலில் எல்லாம் விழுந்தது. எனக்கு எப்படியோ இருந்தது... என்ன இது?

என் கோபம் ஜ ுபிமாவின் நிக்காஹ் மஜ்லிஸில் என்னைத் தள்ளிற்று. யூனுஸ் மாமா... இன்னமே நீம்பரு சிரியும் பாக்கலாம்...

'தம்பி... சாட்சிக் கையெழுத்தெல்லாம் போடுறீங்க போலக்கிதே...' மஜ்லிஸில் அஸன்குசு மரைக்காயர் குசுகுசுத்தார். ஹஸன் குத்தூஸ்தான். அவரது வில்லங்கத்தால் பெயருக்கு ஒரு நறுமணம் பூசி விட்டது ஊர்.

'என்னா சொல்றீங்க! வாப்பா சொல்லித்தானே நான் வந்தேன்...' என்று அவரைக் குழப்பினேன். குழப்பம் தெளிய அவர் உடனே என் வாப்பாவுக்கு எழுதிப் போடுவார் என்று நான் மனாமா கண்டேன்? எழுதிப் போடாவிட்டாலும் யூனுஸ் மாமாவின் ஃபோன் மூலம் வாப்பாவுக்குத் தெரிந்து விடும்தான்.

'என் முகத்தில் கரியைப் பூசி விட்டார் உங்களின் மூத்த மகன்' என்று உம்மாவுக்கு கடிதம் வந்திருந்தது.

'பூசாமலேயே அப்படித்தானே இக்கிம் மச்சானுக்கு மூசா கடை தவ்வா மாதிரி!' பெரியம்மா கிண்டலடித்தார்கள். முதல் ஆதரவு!

'நீ பாட்டுக்கு போடா கண்ணு வாப்பா... இஹலுவல்லாம் நாளைக்கி மௌத், ஹயாத்து இல்லேண்டு நெனைச்சிக்கிட்டிக்கிறாஹா...!' என்றார்கள். சொன்னவர்கள் போகலாம் தான். ஆனால் சௌதியிலிருந்த இரண்டு மகன்களிடமிருந்தும் பணம் வராமல் போகும் ஒஹத்திரியம்தான். தவிர யூனுஸ் மாமாவின் இரண்டு மகள் களுக்கும் அவர்களை பேசி வைத் திருக்கிறார்கள்.

இரண்டாவது ஆதரவு ஜெஹபர் மாமாவிடமிருந்து வந்தது. தன்னிடம் கேட்காமல் செய்து விட்ட கோபமே தவிர உள்ளூர நான் செய்தது அவருக்கு சம்மதம்தான்... ஆனால் எனக்குப் பிறகு சின்னம்மாவின் வீட்டுக்குப் போக அவருக்கு இன்னும் இரண்டு வருடம் பிடித்தது! ஒரேயடியா அவர் ஊர் வந்த சமயத்தில், சியா மரைக்காயர் தெரு வீட்டில் நடந்த ஒரு கல்யாணத்தில், மூன்று பேர் உட்கார்ந்திருந்த சஹானில் அதை நிறைவு செய்ய நாலாவதாக உட்கார்ந்து விட்டார் அந்த மூன்றில் ஒருவர் என் சின்னத்தா என்பதை அறியாமலே. சஹானில் உட்கார்ந்தாலே சீனித் தொவைவை ஊற்றி வாழைப்பழத்தை சோற்றோடு பசை மாதிரிப் பிசைந்து தேவைப் பட்டால் அதில் ஃபிரினியையும் ஊற்றி 'சர்... சர்...' என்று உறிஞ்சி முடித்ததும்தான் தலையைத் தூக்கவே வருகிறது!

யூனுஸ் மாமாவுக்கு செய்தி கிடைத்து விட்டது...

'பன்றியுடன் சேரும் கன்று குட்டியாக மாற விரும்பவில்லை. மச்சானுடன் உறவு கொண்டு சஹானில் சேர்ந்து சாப்பிடும் நீங்கள் எங்கள் குடும்பத்திற்கு லாயக்கில்லை...' யூனுஸ் மாமாவின் கடிதம்.

'அதைத்தானே நானும் சொல்கிறேன்!' என்று முணு முணுக்கத்தான் முடிந்தது ஜெஹபர் மாமாவால். ஆனால் எனக்கு மட்டும் தைரியமாக தன் தேவையைத் தெரியப்படுத்தியிருந்தார். 'என் கூடப் பிறந்தவள் ஹைஜான். அவள் தன் மகள் கல்யாணத்திற்கு எத்தனையோ பேரை விட்டு மத்திஸம் பண்ணி என்னைக் கூப்பிட்டாள். நான் அப்போது கூட போகவில்லை. கடைக்கு வர, கோஷா மரைக்காயர் தெரு சுற்றிப் போனேன் என் மனதை மரமாக்கி விட்டு... என்னைப் போய் இப்படி இவர் கேட்கிறார்... எவனும் எனக்கு இவ்வளவு மோசமாகக் கடிதம் எழுதியது கிடையாது. நம்மை தூக்கியெறிந்ததற்கு அல்லாஹ்

கண்டிப்பாக இவருக்கு தண்டனை அளிப்பான். மச்சான் செய்தது குற்றம்தான். ஆனால் ஒரு காலம் மாறி வருவது உண்டு. அதுதான் ரத்த பாசம்...' ஜெஹபர் மாமா பாசப் பறவையாகியிருந்தார்.

யூனுஸ் மாமாவுக்கும் ரத்தம் உண்டே. அது கன்று குட்டியுடையதாகவே இருக்கட்டும். அது கொதித்த கொதிப்பில் வந்த வியாதிகளில் சரியாக வேலை செய்ய முடியாததும் ஒன்று. கம்பெனி அவரை 'யத்லா பாரா...' என்று தூக்கி வீசி விட்டது. ஆனால் Settlementஎல்லாம் சரியாகக் கொடுத்த நல்ல கம்பெனி. பெரிய காசோடு ஊரில் வந்து உட்கார்ந்து விட்டார். வந்ததும் தன் இரு பெண்களுக்கும் பெரிய செலவில் கல்யாணம் செய்தார். பன்றிக் குட்டிகளான எங்களுக்கு அழைப்பு இல்லை. எங்களை அழைக்காதது பற்றி வீட்டுப் பெண்கள் யாரும் கண்டு கொள்ளவில்லை. பன்றிக் கறி ஹராம்! ஒரே சமயத்தில் பன்றியையும் கன்று குட்டியையும் ஈன்றெடுக்கும் விநோதமான மிருகம் என் குடும்பம்தான் போலும்...

சபர் பண்ணாமல் ஊரில் இருந்தால் அப்படித்தான். யூனுஸ் மாமாவும் இப்போது பண்ணவில்லையே என்றால் அவர் சாமத்தியமும் பண்ணியவர் ஆயிற்றே! கொஞ்ச நஞ்ச சாமத்தியமா? ஐந்து பிள்ளைகளுக்கும் தனித்தனி வீடு எல்லா வசதிகளுடன். என்னால் முடியுமா? ஒரு அறை கூட கட்ட முடியவில்லையே... பின் இதையெல்லாம் படத்தான் வேண்டும்.

சின்னத்தாவிடம் அடி வாங்கிய என் பெரியம்மா மகன்கள் என்னைப் புரிந்து கொண்டார்கள். அது போதும் முட்டாள் தம்பிகள். என்னை தங்களின் கல்யாணத்திற்கு வேறு கூப்பிட்டார்கள்! டேய் தம்பிகளே. இது தெரிந்தால் தன் மகள்களை அடுத்த நிமிடமே தன் வீட்டு வேலைக்காரனுக்கு அவன் 'மாவு' ஆக இருந்தாலும் கட்டிக் கொடுத்து விடுவார் அந்த பிடிவாதக்காரர்... அவனுக்கும் ஒரு விசா எடுத்து அரபு நாட்டுக்கு அனுப்பவோ அல்லது தான் நடத்தும் பத்திருபது கடைகளில் ஒரு பங்குதாரனாக சேர்த்துக் கொள்ளவோ அவருக்கு வல்லமை உண்டு. அவனும் பேச்சை மதிக்காமல் போகிறானா? தலாக்...!

யூனுஸ் மாமாவுக்கு சின்ன வயதிலிருந்தே சிட்டிக் கலயம் விளையாட்டு ரொம்ப பிடிக்கும்...

ஒருவரை பிடிக்கவில்லை யென்றால் அவர் முகத்தில் தெரியும் வெறுப்பு...! வெறுப்பின் நிழல் அதிகமாகப் படர்ந்திருந்தால் அவருக்குத் தன்னையே பிடிக்கவில்லை என்று பொருள். அந்த மகத்தோடுதான் நான் புகுந்த வீடான என் மனைவி வீட்டை பார்க்கக் கூடாதென்று மாலிமார் தெரு வழியாக சுற்றிக் கொண்டு போகிறாரா? காரில் ஒரு வயதான கன்றுகுட்டி உட்கார்ந்திருப்பதைக் கற்பனை செய்தால் நன்றாகத்தான் இருக்கிறது.

சுற்றிப் போகும் கன்று குட்டியின் மனம் பார்க்குமே? சொல்ல முடியாது. பணத்திற்கு அது கை கட்டி பயப்படும்... ஹாஜார், இந்தக் காரையே இது AC வைத்த சைக்கிள்தான் என்கிறீர்களா? சத்தியமாக உண்மை...

எத்தனை நாள் இப்படி?

ஜஹபர் மாமா எழுதியது மாதிரி ஒரு காலம் மாறி வரப் போகிறது என்பதற்கு அறிகுறியாக, பொறையார், பொதக்குடி என்று குடும்பத்திற்கு வந்த வெளியூர் மாப்பிளைகளின் துணிச்சல்கள் இருந்தன. யார்தான் தன் வீட்டுத் தேவைகளில் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார்கள்? தவிர சின்னத்தாவிடமும்

யூனுஸ் மாமா மாதிரியே பணம் புரள்கிறது. சின்னத்தாவின் மகன்கள் இப்போது, கயிற்றில் ஆடுகிற தம்பிகளாக இல்லாமல், சிங்கப்பூரில் ஹோட்டல் வைத்திருக்கிறார்கள். பெரிய நானா என்னைக் கூட ரொட்டிபுரோட்டா போடக் கூப்பிட்டார்களே...!

காலம் மாறுகிறதுதான்... ஆனால் என் கூனாமானா தெரு வீட்டுப் பெண்களின் மீதிருந்த யூனுஸ் மாமாவின் பிடியை மட்டும் இன்னும் இறுக்கியேதான் வைத்திருந்தது என் வாப்பாவின் மௌத்திற்குப் பிறகும். ஹைஜானின் தலை, யான்ஸிலிருந்து எட்டிப் பார்க்கிறது என்றுதான் உம்மாவும் மாமியும் தர்காவுக்குப் போகும்போது சுற்றிப் போகிறார்கள் என் தம்பி ஜலால் மாதிரியே.

'நான் கடைத்தெருவில் நின்னுக்கிட்டிருக்கிறேன்...' 'எவ்வளவு ஜல்த்தனம்'ட்டு என் முதுகைத் தட்டிட்டுப் போறாஹா ஹைஜான்...!' என்று சொன்னான் என் தம்பி துபாயில். ஜல்த்தனமா? 'சின்னம்மா விட்ட கண்ணீரைப் பார்க்காத' ஜலால்தனம்'.

ஒரு வாழைப்பழம் செய்த வேலையைப் பார்த்தீர்களா? ஊரின் மூன்று ஜமாஅத்தார்களே... எது செய்தாலும் செய்யுங்கள். எந்தப் பள்ளியின் திராவியாலம் இனி 'முறை'க்கு வாழைப்பழம் கூடாது என்று உத்தரவு போடுங்கள் ஒன்றாகக் கூடி...

என் பேச்சை யாராவது கேட்கிறார்களா? அதெல்லாம் முடியாது. வழக்கம்போலவே எல்லாம் நடைபெறும் என்று காலம் சொல்லிவிட்டது. அதற்கு எப்போது யாரை மாற்ற வேண்டும் என்று தெரியும்.

14 வருட பிடிவாதத்திற்குப் பிறகு காலத்தின் பிடி தளர்ந்தது. வாதம்! வாய் கோணிக் கொண்டு உடம்பின் இடது பக்கம் மரத்துப்போன யூனுஸ் மாமா சென்னை மலர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு குணமான பிறகு அவர் முகத்தில் மாறுதல்கள் தெரிவதாக ஜலால் சொன்னான். ஜலாலில் முகம், அதைச் சொல்லும் போது மரத்துப் போன மாதிரி இருந்தது.

குழைந்த களிமண்ணை மாற்ற காலம் சின்னம்மாவுக்கு ஹஜ் செய்யும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. 'செய்தி தெரியுமா நானா?' என்று யூனுஸ் மாமாவின் பயந்த மருமகன்கள் சௌதியிலிருந்து போன் செய்தார்கள்.

சண்டையாக இருந்த எல்லா வீட்டிற்கும் சின்னத்தாவும் போனார்களாம்!

'உம்பர்ட கன்னுக்குட்டி வீடு?'

'அதுதான் நானா ஃபர்ஸ்ட்டு!. அங்கே போவாமயா போவாஹே?'

குடும்பத்தின் உறவைப் புதுப்பித்தவர்களாக, எல்லாக் குற்றங்களிலிருந்தும் நீங்கியவாறு தன் மாப்பிள்ளை மறுபடியும் 'இஹ்ராம்' கட்ட வேண்டுமென்ற சின்னமாவின் 'துஆ' 'கபுலா'கித்தான் விட்டது... அதற்கான கூலி சொர்க்கத்தைத் தவிர வேறொன்றுமில்லை. இந்த மாத இறுதியில் தஞ்சாவூர் குழு ஒன்றுடன் போகிறார்கள் இருவரும். நாகூரிலே ஏஜென்ட்கள் இருக்கிறார்கள் தான். ஆனால் கமிஷன் கொஞ்சமாக கொடுப்பார்கள். சின்னத்தாவுக்கு வியாபார நெளிவுகள் அத்துப்படியாக இருந்தது பெரிய வசதி. வழிச் செலவுக்கு வியாபாரம் செய்து கொள்ளலாம்... துபாயிலும் இந்த சமயத்தில் வியாபாரம் கொடிக் கட்டிப் பறக்கிறது. ஹரம் ஷரீஃப் அருகாமையில் தங்குமிடம் புதிய AC பஸ் குறைந்த செலவில் நிறைந்த வசதிகள் என்று விளம்பர நோட்டீஸ்கள் எங்கு பார்த்தாலும் தென்படுகின்றன 'காஷ்மீர் சால்வை' கொசுறுவுடன்... வழிகாட்டியோ

அரஃபோ தினத்தினுடைய இரவில் மினாவில் தங்குவதும் பெருநாள் தினத்தன்று முஸ்தலிஃபாவில் தங்குவதும் நபி (ஸல் - ம்) அவர்களின் சுன்னத்து என்றால் ஏற இறங்கப் பார்ப்பாராமே... இரண்டு கோடி ஜனங்களின் மத்தியில் நம் குரல் கேட்காதுதான் அவருக்கு். ஊரிலும் நல்ல வசதியாகத்தான் அழைத்துப் போகிறார்களாம் மூன்று வேளை சாப்பாட்டு வசதியுடன். ஆரோக்கியம் அவசியமாயிற்றே போய் திரும்பி வர.

வருவார்களா திரும்பி? எல்லோரும் ஒன்றுதான் என்று சொல்லும் 'இஹ்ராம்' உடை, எளிமையை மட்டுமல்ல மறுமையையும் நினைவு படுத்துகிறது... ஆனால் அந்தக் காலம் மாதிரியா சிரமம்? நடந்தும் ஒட்டகங்களிலும் பாய்மரக் கப்பலிலும் சென்றிருக்கிறார்கள் அப்பொதெல்லாம் இறை இல்லத்தைத் தரிசிக்க. இப்போதோ நவீன யுகம். அப்படியெல்லாம் மௌத்தை நினைத்து குலுங்கி அழத் தேவையில்லை. வழியனுப்ப சென்னைக்கு செல்கிறவர்கள் ஊருக்கு திரும்பி வருவதற்குள் ஜித்தாவிலிருந்து ஏப்பம் கேட்க வைக்கிற விஞ்ஞான வளர்ச்சி. ஆனால் விபத்து, நெரிசலில் மூச்சுத் திணறி சாதல் எல்லாவற்றுக்கும் மேலாகத் துப்பாக்கிக் கலாச்சாரம், தலைவெட்டு என்று பயங்கரங்கள் வேறு வேறு முகங்களில் வருகின்றனவே...

கோடி கோடியாய்க் கொட்டி இறைத்துக் கற்பனைக்கு எட்டாத வசதிகளை வாரிக் கொடுத்திருந்தாலும் ஹஜ் முடியும் வரை சௌதி அரசாங்கத்திற்கு முழி பிதுங்கி விடும்தான். இந்த சமயத்தையல்லவா இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்து விடத் துடிக்கும் நிராகரிப்பாளர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்...

சின்னம்மா, சின்னத்தாவின் புனிதப் பயணம் நல்லபடியாக நிறைவேற அல்லாஹ் உதவுவானாக. வந்ததும் ஹாஜிமா என்றும் அல்ஹாஜ் என்றும்தான் தாங்கள் அழைக்கப்பட வேண்டும் என்ற கர்வம் தலை தூக்காமல் இருக்கவும் அவன் உதவுவானாக. தொழுபவர்கள் 'நமாஸி' என்றா அடைமொழி போட்டுக் கொள்கிறார்கள்?

ஜிஹாதிலேயே மிகச் சிறந்தது பாவங்களற்ற (நிலையில்) ஹஜ் (செய்து முடிப்பது) ஆகும் என்று நபி (சல் -ம்) சொன்னதாக ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்.

ஒளிக்கதிர் ஒன்றைப் பற்றிப் பிடித்தபடி மேலேறி அதன் மூலத்தை தொடுவது போல் உள்ள கஃபாவை சேச்சியும் சின்னத்தாவும் தவாபு செய்யப் போகிறார்கள். ஒளியை மறைத்த இருட்டுப் பலகைகள் விலகிவிட்டன...

ரசூலுல்லாவின் வரலாற்றை அழகான பாடல்களால் ராகமாய் எனக்கு சிறு வயதில் சொல்லிக் கொடுத்த சின்னம்மா, வரலாற்றின் அடையாளங்களை நேரில் பார்க்கப் போகிறது கசந்த உறவுகளையெல்லாம் ஜெயித்து...

ஹஜ்ருல் அஸ்வத் கல்லைப் பார்க்கும் போது, கஃபாவை புதுப்பிக்கும்போது அல் அமீன், தங்கள் மீதிருந்த போர்வையை எடுத்து விரித்து, வாதாடிய நான்கு கோத்திரத்தாரையும் போர்வையின் நான்கு மூலைகளையும் பிடிக்கச் செய்து, புனிதக் கருங்கல்லை அதில் வைத்து தன் கைப்பட கஃபாவின் சுவற்றில் பொருத்தியது ஞாபகம் வரும்.

ஒற்றுமையை வலியுறுத்தும் மார்க்கம்...

சின்னம்மா... சைத்தானின் மீது

கல்லெறியும்போது குடும்பத்தின் தேவையற்ற வீறாப்புகள் இனி தோன்றக் கூடாது என்று நினைத்து கல்லெறி!

அனைவருக்காகவும் துஆ கேளுங்கள் சின்னத்தா... இறைத் தூதர் (ஸல்) அவர்களின் திருக் கரங்களினால் 'அந்தர் கவ்தர்' எனனும் தடாகத்தின் நீர் அருந்தக் கூடிய பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இறைவன் உங்களுக்கும் எனக்கும் வழி காட்டுவானாக...!

'சின்னம்மா 14 வருடத்திற்கு முன்பே ஹஜ் செய்திருக்கலாம். ஆனால் யூனுஸ் மாமாவுக்கு வாதம் அடிக்க வேண்டுமே' நானும் ஹஜ்ஜுக்குப் போனால் அவர் என்னைப் பார்த்துக் கூட சிரிக்கக் கூடும்.

ஃபர்ளான தொழுகை நேரங்கள் தவிர ஒரு நொடி கூட விடாமல் ஜனங்கள் சுற்றி வரும் அற்புதம் கொண்ட இடத்தைப் பார்க்க வேண்டும்தான். ஆனால் இந்த தீராத கடன்களெனும் அலை என்று ஓய்வது?

சௌதியில் இருந்து கூட கடமையை நிறைவேற்ற முடியவில்லை. 'சௌதியில் இருந்து கூடவா!? யா அல்லாஹ்...!' என்று என்னைப் பார்த்து ஏளனமாகக் கேட்டார் புரைதாவில் ஒரு பாகிஸ்தானி கிழவர். ஹாஜி. ஆனால் மூன்று வருட விசாவுக்கு பணம் வாங்கி விட்டு ஒரே வருடத்தில் அதை கேன்சல் செய்ய வைத்து வேறு ஒருவனுக்கு அதை விற்றார். அவனிடமும் 'நீ ஹஜ் செய்தாயா, இல்லையா?' என்றுதான் கேட்பார் அந்த ஹாஜி...

சென்று, வந்த சில ஹாஜிகள் கொஞ்சம் கூட தன் முந்தைய குணங்களை மாற்றிக் கொள்ளாததும் கூட என் தாமதத்திற்கு காரணமாக இருக்கலாமோ?

கம்பெனி டிரைவர் மக்பூல் பட்டாலும் 'ஏன் போகவில்லை?' என்றுதான் கேட்டான். 'இராதா கரோ' என்றான்.

'தாக்கத் நஹிஹை மக்பூல்.'

'தாக்கத்? தும்ஸே கம்ஜூர் ஆக்மி ஹாராஹை...'

உண்மைதான். அந்த மன உறுதி என்னிடம் இல்லை. விடுமுறையில் போகும் மக்பூல் பாயிடம் 'எப்போது திரும்புவாய்?' என்று முதலாளி கேட்டால் 'ஹம்கோ க்யா மாலும்?' என்றுதான் நெஞ்சை இரு கையை அகல விரிப்பான முரட்டுத் தனமாக. 'குதா!' என்று சுட்டு விரலால் மேலே சுட்டுவான். என்ன நம்பிக்கை! நான் ஏன் அப்படி வைக்க முடியவில்லை?

அரபாபிடம் கெஞ்சிக் கூத்தாடியும் கம்பெனியில் நிறைய கூலிகள் போவார்கள். 'தாக்காத் இல்லாதவர்கள் எல்லாம் ஏன் இப்படி போகிறீர்கள்?' என்று அவர் எரிந்து விழுவார். எனக்கு இப்படி மன்றாடுவதில் விருப்பமில்லை. போதும் குனிந்தது... கம்பெனி கொடுக்கும் இந்த சம்பளத்தில் 'தாக்கத்' எப்படி வரும்?. 'ஜங்கிள் மேங். பைட்டேர்... ஹாத் ஊப்பர் கரோ' முதலாளியின் தத்துவம். காட்டில் உட்கார்ந்து கைகளை மேலே தூக்கு. நன்றாகத்தான் இருக்கிறது. அதில் ஒரு பாதியை மட்டும் செய்கிறேன் போலிருக்கிறது. அதைத்தான் செய்ய முடியும் இந்த இடத்தில்.

'இன்ஷா அல்லாஹ்... அடுத்த வருடம் போகிறேன்...' என்றேன் சமாதானமாக.

அடுத்த வருடம் நீ மௌத்தாகி விட்டால்? என்று ஒரு போடு போட்டான் பட்டான்.

இந்த மரணம் என்கிற வார்த்தை படுத்தும் பாடு! அது இல்லாவிட்டால் உலகமே இயங்காதுதான். உலகம் இல்லாத போது இபாதத் எங்கு

போகும்? அந்த ஆராய்ச்சியெல்லாம் தேவையில்லை. யூனுஸ் மாமாவே ஒரு ஹாஜிதான். ஆனால் கடைசியில் வந்த பயத்தில்தானே மாறிப் போனார்? சின்னம்மாவையும் சின்னத்தாவையும் வழியனுப்ப ரயிலடிக்கு போயிருந்தாராமே...

'ஒரு குறையுமில்லாம சப்ஜாடா எல்லாரும் வந்திருந்தாஹா நானா...' என்று சொன்னான் சின்னத்தா மகன். கேட்கவே சந்தோஷமாக இருந்தது.

லப்பைக்... அல்லாஹும்மா லப்பைக்...' தல்பியா முழக்கம்... கடமையை நிறைவேற்றிவிட்டு இருவரும் அன்று பிறந்த பாலகர்களாக ஊர் திரும்பிய ஒரு மாதத்தில் நானும் ஊர் போனேன் விடுமுறையில்.

முதலில் யூனுஸ் மாமாவைத்தான் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அகழியையெல்லாம்தான் சின்னம்மா முதலிலேயே தூர்த்தெறிந்து விட்டதே. போவதற்கு முன் விசிட்டிங் கார்டு மாதிரி வாழைப்பழம் ஒன்றை அனுப்பி, தரிசனம் பெற ஒப்புதல் பெற வேண்டுமோ? வேண்டாம். இது சிரிக்கும் வேளை அல்ல. அவர் மகன் கூட சின்னப்பிள்ளையில் ஒருமுறை காரைக்கால் சினிமா தியேட்டருக்குப் போய், அங்கே டிக்கெட் முடிந்து விட்டது என்று சொன்னதும் டிக்கெட் கொடுப்பவர் முஸ்லீம் என்று தெரிந்து கொண்டு, இஸ்லாத்துக்கு இஸ்லாம் உதவக் கூடாதா நானா?' என்று கேட்டு அடி வாங்கிக் கொண்டு வந்தான். இப்போது நடப்பது சினிமா அல்ல...

நானும் மாமாவும் என்ன, தாங்கள் தொழும் பள்ளிக்குள்ளேயே நுழைந்து துப்பாக்கி சண்டை போட்டுக் கொள்பவர்களா? அல்லது அரபு நாடும் இஸ்ரேலுமா? உடம்பு சரியில்லாதவர்களைப் பார்ப்பது ரசூலுல்லாவுக்கு பிடித்தமான செயல். ஆனால் யூனுஸ் மாமா ஒரு சமயம், வீட்டுப் பெண்களையெல்லாம் கூட்டிக் கொண்டு பெரிய ஆஸ்பத்திரிக்குப் போய், வேலைக்காரனை நலம் விசாரித்தவர், பக்கத்திலிருக்கும் ஸ்ரீனிவாசன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த மருமகன் என்னை பார்க்காமல் போனது ஏன்? கேட்கக் கூடாது. சின்னத்தா, அப்போது என் பக்கத்தில் இருந்தாரே...!

மறப்பது சிரமம்தான் என்பதை மறக்க வேண்டும்.

பெரியவர்கள் தவறு செய்தால் சின்னப் பிள்ளைகள் விடுவதே அழகு! போ!

இப்போது எப்புடி என்னை அவர் எதிர் கொள்வார் என்று பயம்தான். தைரியத்திற்கு மனைவியையும் அழைத்துச் சென்றேன். பெண் என்றால் பேயும் இரங்குமாமே...!

பேசாமலேயே பேய் இருந்ததென்றால் முயற்சி செய்யாதிருந்த நானும் எப்படி மஹா மனிதர்களில் சேர முடியும்?

ஒரு முறை என் வாப்பாவிடம், நான் பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கும் போது அவர் நண்பன் ஒருத்தர் என்னிடம் பேசாமலேயே வந்ததாகக் குறை சொன்னேன். 'அப்படீண்டா நீம்பரும் அவர்கூட பேசாதானெ இந்திக்கிறியும்?' என்று மடக்கினார்கள். அது ஞாபகம் வந்தது.

யூனுஸ் மாமாவின் முகத்தில் தெரிந்த உணர்ச்சியை வார்த்தையால் வர்ணிக்க இயலாது. 'ஏங்...?' என்று நான் நுழைந்ததும், இன்னும் கோணல் முற்றிலும் நேராகமலிருந்த அவருடைய உதடுகள் துடித்தன. 'வாப்பா...' என்றார். எனக்கு மனதை என்னமோ செய்தது... இந்த ஒரு வார்த்தைக்கு இத்தனை வருடங்களா மாமா? அவர் மனைவியின் விசும்பல் கூடத்திலிருந்து கேட்டது... அதற்கடுத்த

நிமிடத்தில் பெண்கள் போன் பார்த்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். சிடுக்கும் அக்கமாகத்தான் இருக்கும்...! அவர்களை விட்டு விட்டு நானும் யூனுஸ் மாமாவும் சின்னத்தா வீட்டுக்குப் போனோம். உறவென்றால் அப்படித்தான். இப்போது யார் எந்த குட்டி என்றெல்லாம் கேட்கக்கூடாது...

சின்னம்மா வீடு இப்போதும் கல கலப்பாகத்தான் இருந்தது. வழியனுப்பப் போனவர்களெல்லாம் நேராக ரயிலடியிலிருந்து வந்து இங்கேயே 'டேரா'அடித்து விட்டார்கள் போலிருக்கிறது. பேச நிறைய இருக்கிறதுதான்... எங்கள் இருவரையும் சேர்ந்து பார்த்ததும் கலகலப்பு இன்னும் கூடிப் போயிற்று. இதைத்தானே சின்னம்மா எதிர்ப்பார்த்தது...!

சின்னம்மா எனக்கு ஜம் ஜம் தண்ணீரைக் கொடுத்தது. எந்த நோக்கத்திற்காக அருந்தப்படுகிறதோ அதற்குரிய பலன் தரும் புனித நீர்... அப்புறம் பேரீச்சை, தொப்பி, தஸ்பீஹ் மாலை... சந்தோசத்தில் நிறையத்தான் வாங்கி வந்திருக்கிறது சின்னம்மா...

சின்னத்தா எங்கே என்று கேட்டேன், ஜூஸ் கடையில் என்றார்கள். ஜூஸ் கடையா? சிக்கலார் கடைக்குப் பக்கத்தில் திறந்திருக்கிறாராம். சொல்ல முடியாது. யூனுஸ் மாமா கூட அதில் பங்குதாரராக இருக்கலாம். வியாபார ரகசியம்! ஒன்னு பாக்கி இல்லே சின்னத்தாவுக்கு... என்று சொன்னபடி யூனுஸ் மாமாவைக் கூப்பிட்டேன். பூனைக்குட்டி போல என்னைப் பின் தொடர்ந்தார், நல்ல ஹாஜியார் பழக்கடைக்கு. பெயர் நன்றாகத்தான் இருக்கிறது என்றும் சொன்னார்..

பெரிய கடைதான். எல்லா வகை பழங்களும் திறந்த கண்ணாடிப் பெட்டியில் இருந்ததுதான். ஆனால் கடையின் முன்பு, திருஷ்டிக்கு படிகாரக் கல் தொங்க விடுவது போல ஒரு பெரிய வாழைப்பழக் குலை. அன்றைய ஸ்பெஷலாக இருக்கும்! '100 கிராம் வாழைப்பழத்தில் என்னென்ன சத்துக்கள் உள்ளன என்று ஒரு சிறிய கறுப்பு போர்டு வேறு! வெள்ளை சாக்பீஸ், சின்னத்தாவின் அழுக்கான கிறுக்கல் எழுத்தில் மாவாகக் கொட்டியிருந்தது. 103.0 கலோரி சக்தியாம். புரோட்டின் 1. 3 கிராம்!'

எங்களை ஒன்றாகப் பார்த்த சந்தோஷத்தில் கடைப் பையனுக்கு வேகமான குரலில் ஆர்டர் கொடுத்தார் சின்னத்தா: 'ரெண்டு பேயன்...!' வாழைப்பழம்.

அருஞ்சொற் பொருள்:

நஜீஸ் - நாகல்
ஒசுபு - ஒழுங்கு
பாரபலா - அட வேதனையே
ஹராம் - (மார்க்கத்தில் விலக்கப்பட்டது)
தவ்பா - மன்னிப்பு
நேஞ்சி - கைக்குட்டை
ஹராமி - துஷ்டன்
பொண்டுவ - பெண்கள்
பெரிய எஜமான் - இறை நேசர் ஷாஹுல் ஹமீது
சீராணி - நிவேதனமாகக் கொடுக்கும் இனிப்பு
சஹர் - நோன்பின் நள்ளிரவு
செம்சட்டி - பெரியசட்டி
ஈமான்தூரி - (மார்க்கத்தைப் பேணும்) நம்பிக்கையானவர்.
அந்திஸூ - அந்தஸ்து
லாத்தா - அக்கா
மஜ்லிஸ் - கூட்டம்
மனாம் - கனவு
மாவு - ஹிந்துக்களைக் கிண்டலாக சொல்வது
யான்ஸூ - வாசல் பக்க அறை
ஒஹத்திரியம் - சங்கடம்
கபுல் - நிறைவேறுதல்
அாபாப் - முதலாளி.

தாமரைபாரதி
கவிதைகள்

பஞ்சமுகியின் பாதாள லோகக் கூந்தல்

எரியூட்டப் பெற்ற பெருங்
கானகமொன்றின் எஞ்சிய
சாம்பலில் தகித்த பஞ்சமுகப்
நாகங்களின் வாசனையோடு
நாசி தடவ சுவாசம் திணற
மெல்ல அணைத்தாய்
நிர்வாணத்துடன்.
வெளிறிய என் முகங்கண்டு
வெளியில் உதடுகளால் சுழித்தாய்
எனது ஆலயத்தை.
இருள் சூழ்ந்த சுழல் வெளியில்
வீழ்ந்தழிந்து பாதாள லோகத்து
செல்கையிலும்
அகண்ட ஐம்முகமும்
விரிந்த கூந்தலுமாய்
ஏந்துவாய்
நீ

. . . கொஞ்சம் நினைத்துக் கொண்டிருக்கிறேன்

நட்சத்திரங்களும் நிறைமதியும்
எதிர்த் திசையில் நகர
காரணியாகும்
முகிற் கூட்டங்களைப் போல
வெற்றுத்தாளில் ஊர்கிற
மைத்[illegible]லாய் என் மேனிமுழுதும்
பார்வைப் பட்சிகள்
ஆத்ம கூடகத்துள்
ஊசலாடும் உடலாய் உன்
நினைவுகளை வாழ்த்திய
வெற்றுச் சொல்
ஆலவிழுதாய் நீயெறிந்த
நினைவலைகளை நேற்றைய
வாழ்வின்
சகல அனுபவங்களை
கலைத்தெடுத்து முடிவில்
தேர்ந்தெடுக்கிறேன்
உன்னதம் பொருந்திய உன்
புகைப்படமொன்றை.
சீரழிவிற்குப் பின்பும்
செல்லரிக்காத திருவுருவை
யாரோ சிதைக்கக்
காரணமாயிருந்த பிரிவின்
கடவுளர்களை
சபித்த மனத்தில்
சந்திரமதியின்★ துயர்போல்
ஒருபோதும் என் துயரை
வெளிக்காட்ட இயலாத நான்
இப்போது எனவே
கொஞ்சம். . .

★சந்திரமதி அரிச்சந்திரனின்
மனைவி

காகவொலி

இப்படியே நிகழ்ந்து விடுவதில்லை
எல்லா பிரிவுகளும்
அன்பின்மையைச் சொல்லி
நடிப்பை உருவகிக்கும்
அபிநயங்களில் நீந்தித்
தவழும் வாழ்வில்

இணையைக் கரைந்தழைக்கும்
மாலை நேர காகங்களால்
உச்சிபெறும் பிரிவின்
ஏகாந்தவொலி
ஏகோபித்த பாராட்டுகளை
விழுங்கிய அவ்வொலியை
பத்திரப்படுத்தியிருக்கலாம்
உன்னை பத்திரப்படுத்தியது
போல.
இவ்வாறாக உன் பொழுதுகளில்
நானும் ஒரு பொழுதாய்
பலபொழுதுகளில் இருக்கவோ
நிகழ்கிறது இப்பிரிவு
0

ரங்கநாயகி கவிதைகள்

சித்ராங்கி

எந்த முகத்துடன் ஒட்ட வைக்க
இந்த தேகம்?
நீயும்
முகமும்
நேர்த்திக்கடனில்
என்றால்
நானும்
முகமும்
நடுக்கடல் பாறையாய்
வில்வக்
கனியாக
வா?

கழைக்கூத்தாடியின் அரங்கேற்றம்

என்
பாதரேகைகளினுடனான பரிச்சயம்
பூமிக்கு
என் தரைக்கு
நடந்து செல்லும் தடங்களுக்
கெல்லாம்.
தட்டு
மெட்டு
தட்டி, தட்டி மெட்டு
லாகிரியில் நிலை கொள்ளாது
நீட்டியும்
வெட்டியும்
என் லாஸ்ய [1] சஞ்சாரங்கள்
ஒன்று சேர நின்ற
தன்று
தான் (ஸ்தானம்
மாறி
அர்த்த ரச பாவங்களில் இப்போது
ஆபுக்னம்[2]
திருஷ்டியும் சமம் என்று
என் சின்முத்திரை
சிகரமாக[3]
டோலோத்சவ ஸ்வீயா[4] என்று
அடையாளத்தோடும்)
அரங்கம் நுழைந்த
பின்

---

1 லாஸ்யம் : லலிதமாயும், மிருதுவாயும் பெண்கள் ஆடும் நடனத்திற்கு லாஸ்யம் என்று பெயர். பார்வதி தேவி அதை உருவாக்கினார் என்று புராணங்கள் கூறுகின்றன. அழகு, அருள், நளினம், அங்க சுத்தம் முதலியவை அந்த நடனத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன.

2 அபுக்னம் : முதுகு சரிந்து, தோள்கள் இயற்கையாகக் கூனப்பட்டு, மார்பும் இறங்கியிருக்கும். அந்த நிலை மயக்கம், வருத்தம், பிணி, வெட்கம், பயம், அவசரம் போன்றவற்றில் வினியோகம் செய்யப்படும் அங்கிகாபிநயம்.

3 சிகரம் : ஹஸ்த முத்திரை. முஷ்டி விரலில் கட்டை விரல் நீட்டல்.கணவன், மன்மதன், வில், நுழைவு, ஆலிங்கனம், அதரம், பழைய ஞாபகம், வரம்பு, அலகு, லிங்கம், பூஜை மணி அட்டுதல், வேல், எழுத்தாணி, பெண்கள் கால்களில் செம்பஞ்சு வரைதல் முதலிவற்றிற்கு வினியோகிக்கப்படும்

4 ஸ்வீயா : சிருங்கார ரஸம் அனுபவிக்கக் கூடிய நாயகிகள் ஸ்வீயா, பரகீயா, ஸாமாந்யா என மூவராவர். ஸ்வீயா, தனக்குத் தானே தாலி கட்டின புருஷனையே ஆத்ம சாட்சியாக வரித்துக் கொண்டு ஆனந்தமடைகிறவள்.

இது எனக்கு

சுபோத்

மார்பு பூசும் சந்தனம்
மெய் வழியும் மஞ்சள்
கால் மண்
மெழுகும்
பூச்சுப் போல
ஸ்புடமாய் ஒட்டாது உன்
நெற்றி பற்றி.
வெள்ளைக் குறியீட்டுக் கோட்டுக்குள்
கேசாதிபாதம் புரிந்து (கொள்ள)
மறை
ஞானி
நீ
மருகாதே வெறும்
மனுஷியாய்(க)

அகம்பாவம்

முகம் மீறி
அகம்
பாவம்
சுகம்
புறம் ஒதுக்கிய
பரம் (சுயம்)
பொருள்
(சுயம்) வரம்
மார்க்கம்
வேண்டு
வே(ா)ரின்
புரம்
திரும்
 பும் மனம்
(ஆ) மாயிரம்
பூ (ம்) பொழிந்து
இடம்
தரும்
இடம் வலம்
தரும்
புருவம் கண்
என்

உற்சவருக்கு

பாம்பு நெருப்புப் புற்று
பட்டு
எரிந்து நீறு
கூவிய கூற்றின் போது தலை
விரித்து
ஆடிக் கூத்திட்டு
சேர்ந்தாச்சு. ஒண்ணாச்சு.
நீங்கி நீங்கி
சேர்ந்தாச்சு. சோர்ந்தாச்சு.
என்னின் அத்தனையும் சேறாச்சு.
இனியும் பேசாதே சேரும் பேச்சு.
சேரும் பேச்சு சேறு
சேறு மீறி வேறு சேரும் போது
சோறு வேண்டிக் கேளு.
சோறு வென்று தின்றுவிட்டால்
சேறு நீங்கிப் போகு(ம்)உம்
போது சேர
சேரக் கோரு
சேவடி பசும்புல்.

மண்.

தொழுகைக்கு முன்னும் பின்னும்

எழு
ஈந்து
எழுந்து நி
(நி)ல்
கால்
அடி
இல்
கல்(ஆ)
(ர)கி
சொல்
ன்றி
மண்ணி
இல்
முட்டிமோ
தி
தீ
பற்றி
புழுதி
(தீ)
பூசி
நெற்றி
பற்றி
எழு
(எழு)உம்
(உன்) கண்
தாமரை
ஈந்த
இறை
அதை

விதை
யுந்தி
எழுந்து
(எழு
ஈந்து)
உரை
உரை வரை
உறைக்கு
வெளியே
றும் வரை

மறை.
மறை.

எச்சரிக்கை

மாலை 4 மணியானதும் வீட்டின்
எல்லா ஜன்னல்களையும்
மூடுகிறாள்
கதவு
கதவு இடுக்கு என்று
எல்லா வழிகளையும்
சாத்திவிடுகிறாள்
விளக்குகள் எரியாது
இவள் ஆணைகளுக்குக் கட்டுப்
பட்டு
இருட்டுச் சுவர்களில்
இஷ்ட தெய்வங்களைக் கண்டு
கொண்டு
ஒரு மணிநேரம் நிர்மால்ய
தரிசனம்தான் நித்தமும்

சட்டென்று ஒரு வினாடிப்
புள்ளியில்
விளக்குகள் எரியும்
சுற்றும் முற்றும் கண் அகலப்
பார்த்துவிட்டு
திருப்தியுடன் செல்கிறாள்.

சற்று நேரத்தில்
மெதுவாய் என் புத்தகம்
வந்தமர்ந்த
கொசு
கண் சிமிட்டியது
ஸ்நேகமாய் விரல் தீண்டி
இத்தனை நேரம் இருட்டாய்
சோபாவுக்கடியில்தான்
என்றது.
0

வாக்சந்தி விவகாரம்

அந்தப்புறம் இருக்கும்
கல்லுளிமங்கன் நீ
என்று தெரியும் எனக்கு

இந்தப்புறம்.
ஆடைகள் வண்ணம் அறியாது
தொண்டை மிடறு விழுங்கும் சிவப்பு
நோக்காது.
நெற்றி வியர்வை கலைந்த தலை
வாரிக் கொள்ளுதல் காணாது
நாசூக்காய் ஸ்பூன் கொண்டு
சாப்பிடும்
தக்காளி பிரியாணி யோடு சிரிக்கும்
உன்
பற்கள்
அன்றி
வெறும் மேடுபள்ளங்களாய்
நிழலுருவாய் நின்றுவிட்டதென
பேச்சு.
ஏதோ ஒரு வாக்சந்தி திரை.
மற்ற ஹேஷ்யங்கள் தாண்டிப்
புரியும் உனக்கும்
எனக்கும்
திரை சம்பிரதாய
நிமித்தங்கள் வேண்டி
திரையூடாடித் தெறிக்கும்
உன் செவிக்குள் எச்சில் சொற்கள்.
தலையை சிலுப்பிக் கொண்டு
(அல்லது சிலிர்த்துக் கொண்டு)
திரும்பிவரும் பிரயோகங்கள்
என் செவிக்குள்ளும்
ஈரமாய்.
□

பிக்காசோ

பொது அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்

குமுதம் தீராத வியாதி

வகையறாக்களுக்கு நாங்களோ எங்களைச் சார்ந்தவரோ,
சக பயணியோ, சுற்றம் நட்பு உடையவர்களோ அல்லர்
என்பதை புத்தி சுவாதீனத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
அறியவும்.

புது எழுத்து

வெம்மை

ஜீ. முருகன்

தொலைவிலிருந்தே அவனை கவனித்தாள். கனகாம்பர பாத்திக்கு பக்கத்திலிருந்த புழுதியைக் கீரை விதைப்பதற்காகச் சரிபடுத்திக் கொண்டிருந்தான். வரப்பின் விளிம்பில் மண்வெட்டி பாயும் சப்தம் வெப்பவெளியில் கரைந்தது.

பொழுது ஏறிக்கொண்டிருந்தது. அடர்ந்து நீண்டு செல்லும் பனஞ்சாலைகள், நீர் காணாமல் காய்ந்து சூடேறிய கரம்பு நிலங்கள், அகற்ற முடியாமல் மண்ணில் ஆழமாக பாய்ந்து நிற்கும் பாறைகள்; எங்கோ சில இடங்களில் தனித்து நிற்கும் வீட்டை ஒட்டியோ, பம்பு செட்டுக்குப் பக்கத்திலோதான் கொஞ்சம் பச்சைத் தெரிந்தது. கிணறுகளில் ஏதோ ஒரு மூலையில் மெல்லக் கசிந்த வந்த ஊற்று நீரைத்தான் சொட்டி சொட்டி இறைத்துக் கொண்டிருந்தார்கள்.

பம்பு செட் கட்டிடத்தின் முன் நிழலில் போய் நின்று அவனைப் பார்த்தாள்.

“இந்த வெய்யில்ல, ஏன் அப்புறமா செய்ஞ்சுக்கலாமே என்ன அவசரம்” என்றாள்.

அப்போதுதான் அவள் அங்கே வந்து நின்றிருப்பதை நிமிர்ந்து பார்த்தான்.

“இன்னும் கொஞ்சம் தான் இருக்கு”

மண்வெட்டியின் உட்பகுதியில் பிடித்திருந்த மண்ணை விரல்களால் சுரண்டிக்கொண்டே புன்னகைத்தான்.

சற்று மெலிந்து கருத்த சரீரம் அவனுக்கு. முட்டிவரை தொங்கும் நீண்ட ரெடிமேட் ட்ராயர் போட்டிருந்தான். அவர்கள்

தோட்டத்திற்கு ஆளாக வந்து ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகிறது. வரும்போது சிறுவனாக இருந்தான். இப்போது அவனுக்கு வாலிபக்கலை வந்துவிட்டது. மீசை அரும்பிவிட்டது.

திரும்பவும் குனிந்து வரப்பைக் கொத்த ஆரம்பித்தான்.

"உங்க அண்ணன் ஒருத்தன் இருந்தானே அவனுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?"

"போன மாசம்தான் ஆச்சி" கொத்திக்கொண்டே சொன்னான்.

"இப்ப எங்க இருக்கான்?"

"கல்யாணம் பண்ணிக்கிட்டு பெங்களூருக்கே போயிட்டான்"

சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

காய்ந்து போன கனகாம்பரச் செடிகளையும், பார்த்தீனியச் செடிகளையும் பிடுங்கி இரண்டு இடங்களில் கும்பலாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

தொலைவில் பனஞ்சாலைக்கு கீழே காதர் பாயுடைய கரும்புத் தோட்டம் தெரிந்தது. அதற்குச் சற்று தள்ளி முனுசாமி கவுண்டருடைய பருத்தித் தோட்டம். அவர்களைப்போல கடன் வாங்கி தோட்டா வைத்து கிணற்றைத் தோண்டும் தைரியம் அவளுடைய அப்பாவுக்கு இல்லை. நிலத்தில் வரும் வரும்படி வட்டிக்குத்தான் கட்டும்; கெடக்கட்டும் என்று விட்டுவிட்டார். மழை பெய்து என்று தண்ணீர் ஊறுகிறதோ அன்றைக்குப் பயிர் வைத்துக்கொள்ளலாம். இருந்த ஒரு ஜோடி உழவு மாடுகளும் போய் இப்போது இருப்பது ஒரு பசு மட்டும்தான். இது ஒன்றுக்கே தீனி போடமுடியவில்லை அவர்களால்; காசு கொடுத்து வைக்கோல் வாங்க வேண்டியிருக்கிறது. மேல்நிலை வகுப்பில் பெயிலாகிவிட்டிருந்த அவளுடைய தம்பி இப்போது டவுனுக்கு வேலைக்குப்போகிறான். ஒயின் ஷாப்பில் வேலை. அவனும் அவளுடைய அப்பாவைப்போல குடிக்கிறான் போல தெரிகிறது. அவனுடைய போக்குவரத்து எதுவுமே சரியில்லை என அவளுக்குப் பட்டது.

சேட்டு இன்னும் கொத்திக் கொண்டிருந்தான். சிறுவயதிலிருந்தே வேலை செய்து வந்ததாலோ என்னவோ அவனுடைய தசைகள் இறுகிக் கடினமாகிவிட்டிருந்தன. அவனுடைய நீண்ட கால்களில் நரம்புகள் புடைத்துக் காணப்பட்டன.

"சரி உனக்கெப்ப கல்யாணம்?"

வெட்கத்துடன் சிரித்தான்.

"சொந்தத்தில பொண்ணு இல்லே?"

"ஏன், எங்க அக்கா பொண்ணு இருக்கே..."

"தரமாட்டாங்களா?"

"டவுன்ல இருக்கிற மாப்பிள்ளையா வேணுமாம் அவுங்களுக்கு. இந்த மாதிரி வெயில்ல நடப்பேபாறது, கொத்தப்போறதெல்லாம் அவுங்க பொண்ணால முடியாதாம்..."

"படிச்சிருக்கா?"

"ஊம், பத்தாவதோ என்னமோ படிச்சிருக்கா"

கொத்தி முடித்தவன் மண்வெட்டியை வரப்பில் காய்ந்து கிடந்த புல்லில் தேய்த்து சுத்தப்படுத்தினான்.

"ஊர் உலகத்திலே வேற பொண்ணா இல்லே வேலையப்பாரு" என்றவள், "பொண்ணுக்கு உன்மேல இஷ்டமா?" என்று கேட்டாள்

"அவளுக்கு இஷ்டம்தான், எங்கக்காதான் பிடிவாதமா இருக்கு"

மண்வெட்டியை வரப்பின் மேல் வைத்துவிட்டு ஜோபிக்குள் கை விட்டு தீப்பெட்டி ஒன்றை எடுத்தான். கும்பலாகக் குவித்து போட்டிருந்த செடிகளுக்கருகில் உட்கார்ந்து தீக்குச்சியைக் கொளுத்திக் கைகளால் அண்டக்கொடுத்தவாறு பற்றவைத்தான். உள்ளே காய்ந்துபோன கனகாம்பரச்செடிகளும், புற்களும் இருந்ததால் சட்டென்று தீப்பிடித்துக்கொண்டது. புகையின் அடர்த்திப் பெருகி வதங்கிக்கிடந்த பார்த்தீனியச் செடிகள் தீக்குள் அடங்கிக் கொண்டிருந்தன.

எவ்வளவுதான் பிடிங்கிப் போட்டாலும் இந்த செடிகள் மட்டும் ஏன் மாளவே மாட்டேன் என்கிறதோ என்று சலிப்பு தோன்றும் அவளுக்கு. ஒரு துளி ரத்தத்தில் ஓராயிரம் அரக்கர்கள் எழுந்து வருவதுபோல இந்தப்பூண்டுகளும் முளைவிட்டு எழுந்துவிடுகின்றன.

சற்று தள்ளி விழுந்து கிடந்த ஒரு பனை ஓலையைக் கொண்டு வந்து பற்ற வைத்து இன்னொரு கும்பலுக்குக் கொண்டுபோய் தீ வைத்தான். கும்பலின் மேல் நீரலைபோல தீ உக்கிரமாக ஆடிக்கொண்டிருந்தது. எரியாமல் ஒதுங்கி நின்ற செடிகளை எடுத்துத் தீக்குள் போட்டான்.

ஏனென்று விளங்காத ஒரு ஈர்ப்பில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கசிந்து வடிந்த வியர்வையில் அவன் உடல் பிரகாசத்துடன் தெரிந்தது. கானல் அலையும் வெளியில், விரைத்து நிற்கும் பனைமரங்களின் பின்னணியில் தீயை ஆலிங்கனம் செய்தபடி அவன் நின்றிருக்கக் கண்டாள். தீயுடன் சேர்ந்து அவனது சரீரம் எரிந்து கொண்டிருந்தது. உடல், மனம் எல்லாம் அந்தக்கனலில் இளகி வடிந்து கொண்டிருப்பதான அச்சம் தோன்ற எழுந்து நின்றுகொண்டாள். தலை சுற்றுவது போல இருந்தது. அங்கிருந்து நடந்தாள்.

புழுக்கம் தாளாமல் அவள் விழித்துக் கொண்டாள். உடல் வியர்த்து விட்டிருந்தது. மின் விசிறி சுற்றவில்லை. அவளது வயிற்றின் மேல் மகனின் கசகசத்த கை விழுந்திருந்தது. திண்ணையிலேயே படுத்திருக்கலாம். இந்த மின் விசிறியை நம்பி அறைக்குள் படுத்ததுதான் பிசகு. ஒரு அட்டையை கொண்டு வந்து மகனுக்கு விசிறிவிட்டாள்.

ஜன்னல் திறந்திருந்தும் கூட காற்று உள்ளே வரவில்லை. வெளியே சுழன்று சுழன்று காற்று வீசினாலும் இந்த அறைக்கு மட்டும் ஏன் காற்று வரமாட்டேன் என்கிறதோ என்ற சலிப்புடன், ஜன்னலில் தெரிந்த வானத்தைப் பார்த்தாள். இன்று வெய்யில் உடைந்து காய்கிறது. சாய்ந்திரமோ, இரவோ மழை வரலாம்; நிச்சயமில்லை. இரண்டு மூன்று நாட்கள்ாகவே வானம் இப்படித்தான் பூச்சாண்டி காட்டுகிறது.

முந்தானையைத் தளர்த்தி மடிமேல் நழுவவிட்டாள். மகனுக்கு விசிறிவிட்டுக்கொண்டே தன் மார்பிலும் விசிறிக்கொண்டாள். காற்று போதவில்லை. ஜாக்கட்டின் மேல் கொக்கியை மட்டும் கழட்டி விட்டுக்கொண்டாள். உள்ளே இறுகிக்கிடந்த உடம்பு வியர்வையில் கசகசத்து வெளிர்ந்த நிறத்தில் பிதுங்கித்தெரிந்தது. அவளுக்கு சற்று பெரிய முலைகள்தான். முன்பெல்லாம் இது பற்றி வெட்கமும், பெருமிதமும் அவளுக்கு இருந்ததுண்டு. இப்போது அதுவே சுமையென தோன்றியது. அவளுடைய மகன் பால் குடிப்பதை மறந்து இரண்டு வருஷத்திற்கு மேல் ஆகிறது. இதன் மேல் பெரும் மோகம் கொண்டிருந்த அவளுடைய கணவனோ இனிமேலும் வரப்போவதில்லை.

அம்பை உச்ச பட்ச வேகத்தில் செலுத்தக்கூடிய வில்லாக அவளுடைய

உடலை வளைத்து நாணேற்றியிருந்தான் அவன். கூச்சமற்ற வெளியில் அவளுடைய உடலை மலரச் செய்திருந்தான். அவனுக்கு திகட்டுவதே இல்லை. அந்தக் கடைசி இரவிலும் கூட விடியற்காலை இரண்டு மணிக்கு விழித்துக்கொண்டு அவளை எழுப்பினான் "செல்வி, செல்வி"

அவள் விழித்துக்கொண்டாள். அவளைத் தன்பக்கம் இழுத்து மேலே போட்டுக்கொண்டான்.

"நேரங்காலமே கிடையாதா"

"ஊருக்கு போயிவர இரண்டு மூணு நாளு ஆகும்"

"அதுக்கு..."

"செல்வி.." அவன் கெஞ்சினான்.

"வேனும்ன்னா நானும் கூட வரட்டுமா"

"முடிஞ்சா கூட்டிகிட்டு போகமாட்டேனா"

அவளுடைய இதழ்களைக் கவ்வி கீழே புரட்டினான். "பக்கத்தில கொழந்தங்க" என்றாள் அவனுடைய ஆவேசத்தை நிதானப்படுத்தும் விதமாக.

அதுதான் கடைசி. விடியற்காலை நான்கு மணிக்கு புறப்பட்டுப் போனான். ஏழுமணிக்கெல்லாம் விபத்தில் இறந்த செய்தி அவளுக்கு எட்டியது.

கொஞ்சம் காலம்தான் அவனோடு வாழ்ந்தது; அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. தூங்கி விழித்தது போல, ஒரு இன்ப சொப்பனம் கண்டது போல. படுக்கையறையிலிருந்து வெளியே வருகிறாள். அவளது உறவினர்களெல்லாம் நின்றுகொண்டிருக்கிறார்கள். திருமணத்திற்காக வந்தவர்களல்லவா இவர்கள்? வெட்கமில்லாமல் இன்னும் ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறார்கள்? முன்பு மகிழ்ச்சியாகத் தெரிந்தவர்கள் இப்போது துக்கத்துடனல்லவா இருக்கிறார்கள்! இது என்ன நாடகம்! நேற்றுத்தான், நேற்று போலத்தான் அவனை மணந்தது. முன்னிரவில் அவனுடன் படுக்கையில் புரண்டேன்; பின்னிரவில் அவனை அணைத்துக்கொள்ள நீட்டிய கை வெறுமையை உணர்கிறது. எழுந்து போய்விட்டிருக்கிறான்; திரும்ப இயலாத இடத்திற்கு. முன் வாசலில் புகுந்து பின் வாசலைத் திறந்து கொண்டு அவன் வெளியே போய்விட்டான். எல்லாம் அத்துடன் முடிந்து விட்டது; முடிந்துதான் விட்டதா? இன்னும் எத்தனை வருஷங்கள் வாழவேண்டியிருக்கும்? ஒவ்வொரு நாளும் இப்படி ஒரு யுகமென கழிந்தால் எப்போது முதுமை வருவது, அடிவயிற்றின் தகிப்பு எப்போது அடங்குவது?

பாழான வீடு ஒன்றில் கைவிடப்பட்டு, ஆணியடித்து தொங்க விட்டது போல, சுட்டெரிக்கும் வெய்யிலில் அவள் தொங்கிக்கொண்டிருக்கிறாள். தலையில் அன்றயப்பட்டிருக்கும் ஆணியை உருவிவிட்டு கீழிறங்கும் வலுவற்று அவள் மனம் சோர்வுற்றிருக்கிறது. வலி, வெப்பம், புழுக்கம், உடலின் கனம், தகிப்பு; இப்படியே எரிந்து சாம்பலாகி உதிர்ந்து விடுவோமானால் எவ்வளவு பெரிய விடுதலை! எங்கிருந்தோ தொடங்கி தேகம் முழுமைக்கும் பரவி தனது இரக்கமற்ற நாவினால் ருசிபார்த்தது அந்தத் 'தீ'. எனது கேவலின் ஒலிகூட பிறருக்கு கேட்காமல், கைகால்களைக்கூட அசைக்க முடியாமல்; நான் என்ன கல்லறைக்குள் படுத்திருக்கிறேனா? மண் என்னை விழுங்கிக்கொண்டு விட்டதா?

முன்பு அறுபட்ட உறக்கத்தின்

இழையும், புழுக்கத்தின் மயக்கமும் அவளை மீண்டும் உறக்கத்திற்குக் கொண்டு போனது.

அம்மாவை வெளியே காணவில்லை. பையனை எடுத்துக்கொண்டு பொறை வாங்கிக்கொடுக்கக் கடைக்குப் போயிருப்பாள். கரும்பு தோட்டதைப் பார்த்து நடந்தாள் அவள். ஒதுங்கப்போவதென்றால் இங்கே பிரச்சனைதான். இரவியென்றால் பரவாயில்லை; பக்கத்திலேயே எங்காவது போய்க்கொள்ளலாம். இந்தக் கருப்பந்தோட்டம் இல்லையென்றால் வெகுதூரம் நடந்து ஆற்றுப் பள்ளத்திற்குத்தான் போகவேண்டும். ஆற்றிலும் நீர் வற்றி ஒரு வருஷத்திற்கு மேலாகிறது; தண்ணீருக்கு வீட்டுக்கு வரவேண்டும்.

இன்னும் வெப்பம் தணியவில்லை. தொலைவில் தெரிந்த மலைச் சரிவு மஞ்சம் புற்கள் எரிந்து போய் கருத்துத்தெரிந்தது.

பனஞ்சாலையிலிருந்து தோட்டத்து வரப்பில் இறங்கினாள். கரும்பு முற்றி வெகு நாட்களாகிவிட்டது. இன்னமும் கட்டிங் ஆர்டர் கிடைக்கவில்லை. இப்படியே விட்டால் ஒரு மாசத்தில் கரும்புகள் காய்ந்து விறகாகிவிடும்போல தெரிந்தது. மேலே பூக்களுடன் காணப்பட்ட நான்கைந்து சோகைகள் தவிர கீழே எல்லாம் காய்ந்து போயிருந்தன. ஒரு தீப்பொறியில் சட்டென்று எரிந்து எல்லாம் சாம்பலாகிவிடும் போல் ஒரு அனல் அதற்குள்ளிருந்து வீசியது.

தோட்டத்தின் மையப்பகுதியில் குறுக்கிட்ட ஒரு வரப்பில் திரும்பி அக்கம்பக்கம் பார்த்தபடி சாய்ந்திருந்த கரும்புகளைத் தாண்டித்தாண்டிப் போனாள். சோகைகள் கால்களை அறுத்து விடாதமாதிரி பார்த்து நடந்தாள். ஒரு இடத்தில் குகைபோன்ற ஒரு வழி தெரிந்தது. அதன் வழியே உள்ளே போனால் ஒதுங்குவதற்குச் சௌகர்யமான இடம் கிடைக்கும்.

உள்ளே நுழைந்து கரும்புகளின் அடர்த்தி குறைந்த ஒரு இடத்தை தேடினாள். அந்த இடத்தில் கரும்புகளை எலிகள் நாசம் செய்துவிட்டிருந்தன.

மேலும் போகமுடியாமல் திகைத்து நின்றுவிட்டாள். நடுக்கால்வாயில் அவளுக்கு முதுகு காண்பித்தவாக்கில் கறுத்த தேகத்துடன் அவன் உட்கார்ந்திருந்தான்.

சட்டென்று திரும்பி வந்த வழியே வேகமாக நடந்தாள். இவளுக்கு பின்னால் சோக்கைகள் மிதிபடும் சத்தம் அவசரமாக விலகிப்போய்கொண்டிருந்தது. அவனும் பார்த்துவிட்டிருக்க வேண்டும்.

தோட்டத்தை விட்டு வெளியே வந்தாள். அந்த வெப்ப வெளி மீண்டும் அவளுக்கு முன் பீதியுடன் விரிந்தது. அதில் சலனமில்லாமல் விரைத்து நின்று கொண்டிருந்தன பனை மரங்கள். அதற்குமேல் நகர முடியாதவளாக வரப்பிலேயே உட்கார்ந்தாள். வெளியே எதையும் காண அஞ்சியவளாக மடியில் முகம் புதைத்துக்கொண்டாள். தனியே... ரகசியமாக... தனது கைகளால் தன்னையே ருசித்தபடி... அவனேதான்... நம்ப முடியவில்லை அவனுக்கு. சோர்பமா, ஆத்திரமா, துக்கமா எதனால் பீடிக்கப்பட்டிருக்கிறோம் என்பதுகூட விளங்காமல் அழத் தொடங்கினாள்.



ரமேஷ் - பிரேம்

கவிதைகள்

தனபால்

கப்பல்

எனது கனவில் கப்பல் வந்தது
மேல்கூரையில் தாமதமாகத் தோன்றும்
தேய்ந்த நிலா
மங்கிய ஒளியில் அலை அசைவுகள்
இமைகளில் நடந்து கன்னங்க்ளில்
ஓய்ந்து சரிகின்றன

கப்பல் என்னை நோக்கி வருகிறது
அதன் உலோகக் குழாயிலிருந்து
தீப்பந்துகள்
பறந்து வந்து என்மீது வெடிக்கின்றன

ஆயிரமாயிரம் அலறல்கள் வெவ்வேறு
ஒலியமைவுகளில்
சிதறும் கூட்டங்களில் அடைந்திருந்த
பறவைகளின்
எரியும் சிறகுகள் கருகும் உடல்கள்

கப்பல் தரை தட்டுகிறது
பிறகு எட்டுக்கால்களோடு எழுந்து
என் முகத்தில் நடந்து போகிறது
இடது பக்கத்தின் மூன்றாவது காலை
ஒரு நண்டு
கவ்விக்கொண்டு தொங்குகிறது
உலோக உடல் தெருக்களின் இரு
பக்கச் சுவர்களிலும்
உராயும் கொடூர சப்தம்
நடந்து சென்ற கப்பல் என்

பார்வையை விட்டு மறைந்ததும்
பயம் விலகி படுக்கைவிட்டு எழுந்து
தெருவுக்கு வந்தேன்
ஊரில் யாருமில்லை
இடிபாடுகளில் சில பிணங்களைத்
தவிர
கப்பலின் காலடித் தடங்களில் சில
கபாலங்கள் நசுங்கிக் கிடந்தன
அது வந்து சென்ற கனவு
என்னுடையது என்பதால்
எனக்கு வலியுமில்லை
வதையுமில்லை
ஆனால் கப்பல் என்னுள்தான் எங்கோ
பதுங்கி இருக்க வேண்டும் என்ற
உண்மையை
நான் யாரிடமும் சொல்லவில்லை
ஊர் கொஞ்சம் கொஞ்சமாகத்
தன்னை உயிர்ப்பித்துக் கொண்ட
பிறகும்

கடல் இருக்கும் திசைக்குச்
சுவரெழுப்ப
எனது இமைகளை
தைத்துக்கொண்டேன்
0

அர்பிதா

கிளை தடுக்கும் காற்றும் காத்திருக்கும் கழுகும்

பாறைமீது வந்தமர்ந்த கழுகுகள்
அத்தனை திசைகளையும் பார்த்தன
சற்றே கலைந்து மீண்டும் அமர்ந்தன
வீசிய காற்றில் இறக்கை உலர்த்தின
சூரியக் கதிர்களை அலகால் சீய்த்தன
அங்கும் இங்கும் மாறிமாறி அமர்ந்து
ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன
தூரத்தே தனித்து பறக்கும்
அந்நியக் கழுகு ஒன்றைக் கண்டு
ஓசையெழுப்பி மண்ணைச் சீய்த்தன
பச்சை மாமிச வாடையைக்
கற்பனையில் கண்ட சில
விருட்டென இடம்விட்டுப் பறந்து
மறைந்தன
தூரத்தே அசையும் சில புள்ளிகளை
எதிர்ப்பார்த்திருந்து கழுத்துச் சோர்ந்தன
சிங்கங்கள் காட்டெருமைகளைத்
துரத்திப் பிடித்துக் கழுத்தைக் கவ்வும்
காட்சியைத் தேடி
பாறையின் மீது வந்தமரும் கழுகுகள்
வேறு எந்தத் திசையையும்
பார்ப்பதில்லை
அலகுகளில் ரத்த நிறம் தோய
அவை இசையெழுப்புகின்றன
பாழடைந்த கோட்டை ஒன்றின்
மணிக்கோபுரத்தைச் சுற்றி
பறந்துவிட்டு
இரும்புக் கதவுகள் மீது அமர்கின்றன
குதிரைகள் மேயும் பள்ளத்தாக்கில்
கண்மூடித் தியானம் செய்கின்றன
கிளைத் தடுக்கும் காற்றை மீட்டுக்
கொண்டுவர
சில மரத்தைப் பிளக்கின்றன
தூரத்தே உருவாகும் புயலின்
மௌனத்தைத் தமது
கால் நகங்களில் கவ்விக் கிழித்துப்
பார்க்கின்றன
இரவு முழுக்கத் தலை தொங்க ஓய்வு

எடுக்கின்றன
மீண்டும் அக்கழுகுகள் பாறையின் மீது
வந்தமர்ந்து
அத்தனை திசைகளையும் பார்த்தன
தூரத்தில் புழுதிக் கோளம்
முதல் படை வீரன் கண்ணில்
பட்டதும்
அத்தனை கழுகுகளும் தரையோடு
படுத்துப்
பிரார்த்தனை செய்தன
பிறகு காற்றைத் தடுக்கும் கிளைகள்
முறிந்து விழும் ஓசைகள்
இனி இத்தீவில் பாறைகள் மீது
கழுகுகள் அமர இடமில்லை
0

வாசனை

மனிதர்கள் காட்டிலிருந்து
பிரிந்துவிட்டதாக
அவள் சொன்னாள்
காட்டின் வாசனையற்ற இந்த ஊரில்
எப்படி வாழ்வது என்று கேட்டாள்

அப்படி எனக்குத் தோன்றவில்லையே
என்றேன்

அவள் என் கண்களிலிருந்து
பார்வையை விடுத்துக்
கடலை நோக்கித்
திருப்பிக் கொண்டாள்

கதவு திறந்து விளக்கை போட்டதும்
வெளிச்சத்தை நோக்கி இரண்டு
பல்லிகள்
எதிரெதிர் திசைகளிலிருந்து நகர்ந்தன

ஜன்னலை அடைக்க மறந்ததால்
கொசுக்கள் உள்ளே நுழைந்துவிட்டன
அடுப்பங்கரையில் கரப்பான்கள்
பால்கனிச் செடிகொடிகளிலிருந்து
ஏதோ உயிர் அசைவதின் சிறு
சலசலப்பு
தோட்டத்து விளக்கைப் போட்டதும்
தலைநிமிர்த்திக் கண்கூசிச் சிமிட்டும்
புறமதில் பூனை எப்பொழுதும் போல
மியாவ் என்று பேசியது
அவள் ஆடையை மாற்றிக்கொண்டு
வெளியே கட்டிப்போட்டிருந்த நாயை
அவிழ்த்துவிட்டு
அதற்கான உணவை இட்டாள்
குட்டைத் தென்னையிலிருந்து ஒரு
குருவி
பட்டெனக் கீழே விழ நாய் பாய்ந்து
நகர்ந்தது
பிறகு அதை முகர்ந்து பார்த்தது
அதிகாலையில் மல்லிகை கொடிக்கு
சிட்டுக் குருவிகள் வந்து போகும்
நோக்குமிடமெல்லாம் காகங்கள்
கண்டேன
ஊர்வன பறப்பன பூச்சிகள்
விலங்குகள்
செடி கொடி மரங்கள் என எல்லாமே
இந்த வீட்டுக்கு உள்ளும் வெளியும்
இருக்கின்றனவே
காட்டின் வாசனை உன் நாசியை
வருடவில்லையா
என்று கேட்டேன்

அவள் புன்னகைத்தபடியே விளக்கை
அணைத்துவிட்டு
படுக்கையில் சரிந்தாள்
அவளுடம்பிலிருந்து கதகதப்பாக
மெல்ல எழுவது
காட்டின் தாவர வாசனையா
மிருக வாசனையா
முகர நெருங்குகிறேன்
0

உறங்கும் ஒரு சொல்

பசி தணிந்து உறங்கும் உதடுகளுக்கும்
பால் கனிந்து உலர்ந்த காம்புக்கும்
இடைப்பட்ட வெளியின் சாம்
என்சொல்லும்

உறக்கத்தில் கலைக்கும் கனிந்த
உதடுகளின் உள் குழியில்
தேங்கித் துளிர்க்கும் ஒலிக்குமிழ்
புன்னகையாய் விரியும் பொழுதொட்டில்
அசைவில்
கலைந்து பறந்து மீண்டும் அமரும்
கிளிக்கூட்டம்

மூடிய இமைக்குள் உருளும் பூமியின்
சுருக்கோளம்
விடியலின் சிறுஇழை போர்த்தித்
திரும்பும்
சொட்டாமல் தயங்கும் இலைநுனி
வெளிச்சம் வீழ
விரியும் முகங்களையும் நீவட்டும்

இழையும் சிறுமூச்சில் புல்வெளி
நெளிவுகள்
பரப்பும் மலை விளிம்புகளின் நூல்
நடிப்பு.
நெற்றியின் கரையில் பாசிகள் செழும்ப
மேலே மிதக்கும் ஆழம்
சற்றே தயங்கிய நொடியில்
சடக்கென உள்ளிழுத்து மறைக்கும்
மீண்டு வருதல் சாத்தியம்
இல்லையேல்
மீனாய் உருக்கொள் மனமே
எப்பொழுதாவது ஒருகணம்
மேற்பரப்பில் மூச்சுவிட்டு
மீண்டும் திரும்பலாம் ஆழம்
தடையற்ற தொலைதலில் எல்லாம்
ஒரே திசை
பசிதணிந்து உறங்கும் உதடுகளுக்கும்
பால் தணிந்து உலர்ந்த காம்புக்கும்
இடைப்பட்ட வெளியின் சாம்
என்சொல்லும்
எப்புறமும் திறந்து கிடக்கும் ஆழம்
எனவும்

இக்கணம் பிளக்கும் நேரம் எனவும்

எப்பொழுதாவது கடந்து செல்லும்
பறவைக் கூட்டம்
மின்னலின் நிமிஷத்தைக் கலைக்கும்
அப்பொழுது வழக்கம் போல்
அவளது
இமைப்பொழுதும் மற்றும் உறைதல்
()

மும்மெய்மை

என் மீது கால்களால் நடந்தான்
கால் தான் முக்கியமில்லை
உதறித் தள்ளிவிடவும் மனமில்லை

வேறு பல்லக்களால் அலைந்த எனது
நிலத்தை
அவன் தாண்டிக் கடந்தபோது
என மேனி இளகித் திரவமாகி விட
அலைகளில் மூழ்கி தத்தளித்தபடி
என்னை விட்டு வெளியேறினான்

என் திரவ நிலையையும் ஆவியாக்கி
அவன் கண்ணாடியைக் கொண்டும்
கொண்டவாக
என்னை அற்றுப் போகச் செய்து தான்
நிறுத்திக் காட்டிய அதிசயத்தில்
வாயடைத்து நின்றவன்
இமைப்பொழுதென பெருந்தகுவிலக்கித்து
தத்தித்தொண்டே ஓடினான்

ஓடி நின்ற இடத்தில்
இறுகிச் சொல்லாகி விழுந்தவன்
வழி நெடுகிலும் வார்த்தைகளாக
இறைந்து கிடந்தான்

அவனை வாரி அள்ளிப் பிசைந்து
ஒன்றாக்கி வைக்கவோ
என்னை எரித்துவிட்டு அடைப்பிலாகும்
சேகரிக்கவோ வழியேதுமின்றி
காமம் உலர்ந்த வன்னவன்
கவிதை எழுதுவதாகக் கைவிட்டான்
()

ஞானக்கூத்தன் கவிதைகள்

ஒரு பார்வை

ஓவியர்கள்

சுமார் முப்பது ஆண்டுகளாக எழுதும் ஞானக்கூத்தனின் அனைத்துக் கவிதைகளும் [illegible] முழுதாக அழகியசிங்கர் சிறுகதையால் தொகுக்கப்பட்டு இரண்டாம் பதிப்பும் கண்டிருக்கின்றன. ந. பிச்சமூர்த்தி, க.நா.சு. என இரு புதுக்கவிதைப் போக்குகளுமே தன்னில் அடங்கியுள்ளதாக ஞானக் கூத்தனுடைய கருதுவதாயுள்ளது. கவிஞராகிய பிரதிபலன் பருதிபொன்றும் நடிப்போக்கு தப்பட்டுள்ளது. ஒரு தமிழ்த் தேசிய இயக்கத்தின் கருத்துகளை ஒத்தகாலத்திலுள்ளன. தமிழ் மொழி, தமிழ் நடைமுறைகளைப் பற்றியும் கூட கறாரான அபிப்ராயங்கள் ஞா.கூ.வுக்கு இருக்கின்றன. மேலும், எதிர்வினைகள் மீது அவருக்கு நீங்காமிகுதல் எனலாம் நினைக்கலாம்.

பொதுவாக, அனுபவங்களைப் பதிவாக்கும் ஒப்பந்த ஒலி வகைமதியேயுள்ள தமிழ்ப் புதுக்கவிதையில், புதுவகைப் பார்வையோடு, கறுத்த தன்மையோடும் எழுதியவர் ஞா.கூ. நாட்டார், செவ்வியல் மரபுகளின் தாக்கங்களோடு இன்றுவரையிலும் சில தொன்மங்களை உள்வாங்கிக்கொண்டவர். பண்ணையின் மேல் நிலையும் எள்ளல் விஷயங்களையும் பாடுபொருளாக்கிக் கொண்டவர். மரபுக் புதுக்கவிதையின் பொதுப்போக்கு இவ்வாறு விரிந்த கவனம் [illegible] எனிறேக் தெரிகிறது. எழுத அக்கறை கொண்டு, தமிழ் சமுதாயத்தின் மேல் ஓயாது இருத்துவாய்ப்புகளை ஏற்படுத்துபவர். அதன் போலித்தனத்தையும் கீழ்நிலைமையையும் கசந்து எளகயாடுபவர் காதல் போன்ற உணர்வுகளை அர்தாவேக் கொள்கிறார்.

கூடுதல் அலாதப்பிக்கை தொனிப்பது போல் தோன்றும் புதுமையதுள்ள பிரச்னையில் தலைமை ஒரு பொருளாக் மிடுக்கிறது மொழி. நடைத்து உறுதி நிலை அதில் கலைப்பிரகசனத்தோடு இருக்கிலன பல வாய்ப்புகளும் கிடக்கின்றன பிறகு. தொடக்க கால பல கவிதைகள், புலவர், பேச்சாளர், அரசியல்வாதிகளை பேச்சுக்கும் செயலுக்குமான வேறுபாட்டை நாடக பாணியோடு கூறுகின்றன. கேலிச்சித்திர மொழியையும் கைக்கொள்கிறார். ஞா.கூ.வின் அரசியல் கவிதைகள் பெரிதும் விவாதத்திற்குள்ளானவை. இவரின் அரசியல் திராவிடக் கழகங்களின் மீதான எதிர்ப்புத்தன்மை கொண்டவை போலுள்ளன. இவ்வகை அரசியல், பேச்சை முதலாகக் கொண்டதால் அதை திரையிலே சித்தரிக்கிறார். மாற்று அரசியல் எதையும் முன் வைத்து அதிகாரம் புரியாத தேர்வையின் பாலான சாமானியக்குரல். வெங்காயம், சினிமாச் சோழர், இரட்டை நிஜங்கள், மஹாமகம் காந்தி, கால வழுவமைதி போன்றவை மேற்கும் பேச்சாளரை பல

தளங்களில் நையாண்டி புரிவது. பொதுவாக, பழம் பெருமைகளை, முடியரசுப் பன்பாட்டைப் பேசுவதால் மக்கள் மனதில் கால மயக்கை உண்டாக்கி சமகாலம் பற்றிய பிரக்ஞையற்றுப் போகவிக்கும், மொழியுணர்வைத் தூண்டிக் குழு மனோபாவத்தை உருவாக்கும் அரசியலை ஞா. கூ. சாதாரணமாக சொல்லியபடி வருகிறார். 'தமிழ் மூச்சை பிறர்மேல் விடாத' நாகரீகத்தையும் கூறுகிறார். இது சிலகாலம் முன்பு தமிழ்த்தேசிய விதிகளால் கடுமையாக சாடப்பட்டது. 'கீழ் வெண்மணி,' சாதீயப் பிரச்னையில் கூட வழக்கம் போல் நிலப் பிரபுத்துவ மேலாதிக்க சாதியை எதிர்க்காமல், ஒட்டுமொத்தத மனிதகுல துக்கமாகக் காண்கிறது. மற்றுமொரு நாளில் போல 'நுகத்தடியில்' தன்னை மறுபடி பூட்டிக்கொள்ளும் ஒணசல் மனிதனைப் பற்றியும் (ஆகஸ்டு 15), கட்டுக்கதை மெய்யாகுமா என்றும் யோசிக்கத் தலைப்படுகிறார். அப்பால், சமூகத்தின் மீதான பாதிப்பாயின்றி சொந்த அனுபவத்தில் நேரடி அரசியலைப் பங்கேற்கும் அரசியல் என்று விமரிசனத்தை கூரியதாக்குகிறது. ரத்தக்கறையோடு மையக்கறையை ஒப்பிடுமளவும் எழுதப்பட்டுள்ளது (திணை உலகம்).

சிற்றிதழ்களில் அரசியல் கவிதைகள் நிறைய எழுதப்படுவதில்லை. சமகாலத்தன்மை கொண்ட, தாற்காலிக விஷயங்களுக்கு கவிதை மதிப்பில்லை என்று கருதுவதாயிருக்கலாம். பொருளியல் சார்புள்ளவைகளுக்கு எப்போதும் நீடித்த நிலைப்பில்லை. அவைகளுக்கு எவ்வகையிலாவது ஒரு தீர்வு காணப்பட்டால் அக்கவிதைகளின் ஆயுளும் அவ்வளவே. பொருளாதார வாழ்வு எளியோர்க்கும் பெரும் பொருட்டல்ல, எவ்விதத்திலாவது அவை தீர்க்கப்பட்டு விடுகின்றன. சிக்கலான, முடிவற்ற விஷயமுமல்ல. அதே போல் அரசியலை அணுகுகிறவர்களும் அங்கத்துடன்தான் பார்க்கிறார்கள். (ஆத்மா நாம் மனுஷ்ய புத்திரன்) இதுதான் தீர்வளிக்கத் தேவையற்ற, பெருநிறுவனத்தை எதிர்கொள்கிற வழிமுறை போலும். வாய்ப்புரட்சிக் கவிதைகளுக்கு இங்கு இடமில்லை.

பிறர் இயற்றத் தயங்குவதையும் ஞா. கூ. கவிதைகள் ஏந்திக் கொள்பவை. அவை வித்தியாசமாக இருப்பதினாலேயே. வேறு தன்மையளிப்பதிலும், அசாதாரணமாக எண்ணுவதிலும், சாத்தியப்பாடுகளற்றதைப் பொருத்துவதையும் கவிதைகள் வலுக்கட்டாயமாக்குகின்றன. அதனாலேயே பலவிதப் பொருட்களை நாடுகிறார். அவற்றின் ஜடத்தன்மையைக் குறைத்து உயிரூட்டிட முயல்கிறார். கருத்தியல் ரீதியான எண்ணங்கள் என்பதின்று திடப்பொருட்களும், ஜந்துக்களும் அவற்றின் கால, இடத்தோடு நீந்தும் பேருலகம் ஞா. கூ. வினுடையது. உறுத்தால் பொருளான 'தலையணை', உலகில் எல்லா இடங்களும் அடைபட்டு கிடைத்தால் போதுமான பாதுகாப்பான 'மூலைகள்', மனிதன் மேல் பட்டு ரத்தம் ஒழுகும் 'தேங்காய்', இடம் மாற்றினால் கடிக்கும் பேர்ருப்பு 'பீரோ', கவிதையை ஒரு வஸ்துவாக்கும் 'கோயில் வடை', தூரம் காட்டும் சப்பட்டை லிங்கம் 'தொலைகாட்டிக் கல்', ரேஷன் கடைப்பொருகளுக்கு உருளுகிறது 'தகர டப்பா', உட்கார்ந்தால் துன்புறும் 'நாற்காலி' அதே போல். 'கொள்ளிடத்து முதலைகள்' மர்மமாகக் கூடி ஏதோ தீர்மானம் போடுகின்றன. 'நாய்' வேறிடமின்றி பாடைக்குக் கீழே நிழல் தேடுகிறது. கரப்பானுக்கு பல்லி வாழ்வுண்மையைப் போதிக்கிறது. பசுமை கிடைக்காத 'கம்பளிப் பூச்சி' இரட்டை இலை பிம்பத்தின் மேல் ஊர்கிறது. அழகு பற்றிய எண்ணத்தை 'ஒட்டகம்' மாற்றுகிறது. உடம்பு காலாகி நகரும் திவச நாள் 'நத்தை', நவீன உலகம் பழகின 'காக்கைகள்?' 'மீன் கொத்தி' ஏழு வர்ணத்தில் மேனகையுடன் தோன்றி மறைந்து

வெறும் வானை நிரப்புகிறது. உள்ளுணர்வு மிக்கலை இந்த 'இரண்டு பல்லிகள்'. வாழ்க்கைத் தேவையை இயற்கை உயிர்கள் அழகியல் சம்பந்தமுடன் நிறைவேற்றிக் கொள்கின்றன (குயிலின் பாட்டு). அவற்றின் உலகில் நுழைந்து அறிவால் சுரண்டுபவன் மனிதன் (அணிற்பிள்ளை). உலகில் நுழைந்து அறிவால் சுரண்டுபவன் மனிதன் என்னவாயிருக்குமென ஓவியத்திலிருப்பதாக 'குதிரை', அதன் மனம் வாழ்க்கையின் சகல முகபாவங்களையும் கொண்டது. சுந்தரேய்யர், தர்மக்கண்ணி, பாண்டுர் மாமி, சைக்கிள் கமலம், அங்காம்மாள் போன்றவர்களெல்லாம் கதை வழியே குணாம்சரீதியாக உருவாக்கப்பட்டன போல், இவை பொருண்மையிலிருந்து விடுபட்டு, இருப்பாகக் காட்டிக் கொள்ள விரும்புகின்றன.

சில கவிதைகள் நுன்மையான அளவில் புராணங்களை, காப்பியங்களை மறுவாசிப்பு செய்து பார்க்கின்றன. 'தோழர் மோசிகீரனார்'ல் அரசு அமைப்பின் உயர் மதிப்பீடுகள் பகடியாக்கப்படுகின்றன. ஊழிக்குப் பிறகு வரும் தொல்காப்பியரின் சுவடி பட்டிமன்றப் புலவர்களிடம் போக, குடித்த பால்கலம் கல்லாதவனோடு தாழியில் புதைக்கப்படுகிறது. விழிபதும் வேளையில் 'ரேணியன் மற்ற தூண்கள் நிசப்தமாயிருக்க ஒரு தூணில் மட்டும் நாராயணன் எப்படி நுழைந்தான் எனத்தான் நினைக்கிறேன்.

உயிர் தரிக்க வேலை செய்யவேண்டுமென்கிற சமூக நியதியை எதிர்க்க விநோத நிலைக்குச் செல்கிறார் (எட்டு கவிதைகள்). மற்றொரு நிலை அதிலேயே உழன்று சலுகைகளை எதிர்பார்ப்பது (விடுமுறை தரும் பூதம்).

இவ்வளவு விரிவாகக் கதை கூறும் பாணி ஞா. கூ.விடம் மட்டும் உள்ளது போல் தெரிகிறது. காப்பிய, தேவதைக் கதை, நவீன சிறுகதை ஆகிய கூறுமுறைகளின் மேற்கட்டுமானத்தை மட்டும் கொள்வதால் கவிதைத் தொனி மாறாமல் காக்கப்படுகிறது. வசனத்திற்கு அருகே வந்து, சிறுகதைத் தன்மையை எழுத்துக் கொண்டாலும் அதில் ஒருமையைக் கூட்டுவது போலன்றி கவிதைக்கேற்ப சிதறடிக்கிறார். கவிதையின் பாய்ச்சலின் போது பல திசைகள் நோக்கிய பன்முகத் தன்மைகள் உருவாகின்றன. இவற்றை சிறு காவியங்கள் என்றும் கூறலாம். சிறகுகளிருப்பின் தப்பிக்க முடியாத 'ஓடிப்போன வெண் புறா' யதார்த்த பாணியின் உதாரணச் சிறுகதை. 'தர்மக் கண்ணி' ஒரு முதிர்கன்னியை பல விதமாக பார்க்க வைக்கும், இறக்கும் கதை. 'கண் குழிகளில் திணித்த வெள்ளைப் பஞ்சு பார்த்தாரைத் தானும் பொருளின்றிப் பார்க்க' என்ற முடிவு கவிதைக்கே உரியது. இயந்திரத் தன்மை புகுவதால் ஏற்படும் மாற்றங்களாகவும், சாதாரணர்களின் உயிரிழப்பு பொருட்படுத்தப்படாமல் போவதாகவும் 'லாறி' என்று உருவாக்கப்படும் பேரமைப்பு முன்னால் மௌனமாக நசுக்கப்பட்ட கேள்வியாக உள்ளது. மற்றொன்றில், திலீப்குமாரின் 'தீர்வு' சிறுகதையில் போல், ஆனால் புறவயமாக பெருச்சாளிக்கு தானாக ஒரு தீர்வு உண்டாகி விடுகிறது. (அது என்ன நியாயம்?) கதையம்சமான, உளவியல் பூர்வமாக உள்ள 'திருட்டுக் கொடுத்த வீட்டின்' உடைந்த கண்ணாடி. பொருளாதார உறவாய், உண்டாகாமல் போன தாயுறவைப் பற்றி எவ்வித ஆசிரிய அபிப்ராயமும் படியாமல் 'அங்கம்மாளின் கவலை', கதைச் சித்தரிப்புகளையும் தகவல்களையும் தவிர்த்து ஒரு பாவனை போல் வேறு சில குறிப்புகளைத் தருகிறது. பிறவற்றிலுள்ளன போலவுமில்லாமல் உரையாடல்கள் புறக்கூறலாக அடுக்கப்பட்டுள்ள உத்தியுடன் உள்ளது.

வாழ்க்கையின் இழப்புகள் மறுபடியும் ஈடாவது பேனாவை

மட்டும் வைத்துக் காண்பிக்கிறது இழந்த பேனாவும் இருக்கும் பேனாவும் நாயர் ஓய்வு பெற்றார் போன்றவை அங்கே ஆரம்பித்து இங்கே முடிகிற, தொடக்கம், நடு, முடிவு என்ற இலக்கண வடிவம். துறந்த சற்று முந்தைய காலத்து சிற்றிதழ் பாலைக் கதை. கமல், அடூர் என்று நேரடியாக வரும் உண்மைக் கதையாயும், எழுத்து/சினிமாத் துறையை ஆழ்ந்து கேலி புரிவது போலும் செல்வி மாலாவின் ஆய்வுக் கட்டுரை? குடை, தவளை, பாம்பு முதலியவை பேசும் விநோதக் கதையில், தான் விரும்பும் ஒன்றுக்கு மாறாக வேறாகி நெருங்குவதும் பின் விலகுவதுமான மாயத்தோற்றத்தை உருவாக்குவது டஃபேடாக் குடையும் தாமரைப் பூக்களும். முற்றிலும் புனைவு சார்ந்து இயங்கும் தொகுப்பின் கடைசிக் கவிதை.

. கவிதை எனும் மொழிச் செயல்பாடு பெரும்பாலும் வாசிப்பில் தொகுத்துக் கொள்ளல் எனும் நம்பகத்தன்மை கொண்டு உணர்வுகளையெழுப்புவது. சில நேரங்களில் கலைத்துப் போடுமளவு வெளிப்படையாக சொற்களை அடுக்கிக் கொண்டிருப்பதுமுண்டு. 'லாறி'யில் இறந்த பெருச்சாளியை அகற்றுவதை கவிதை இந்த இடத்தில் முடிகிறது என்று அதுவே செய்து விடுகிறது. 'நெடுங்காது ரெங்காட்டி' இருப்பது கவிதைக்கு வலதுபக்கத்தில். சற்றும் விரும்பாத 'பூனை'யைப் பற்றிக் கவிதை எழுதப்போவது ஏனென்றால் குறவனால் பிடித்துச் செல்லப்பட்டதால் உண்டாகும் இன்மையால்தான்.

வளர்ந்த மனிதான பின் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பதில் சிக்கலாகிக் கொள்கிற காலத்தை சிறுபருவத்தோடு ஏற்படும் ஒரு பாவனையில் அதைப் பொருமுகிற தொனியிலும், எதிரான நிலையில் நின்றும் கவிதைகள் எழுதப்படுகின்றன. உதை வாங்கி அழும் குழந்தைக்கு, அம்மாவின் பொய்களும். என்று ஒரு குழந்தை வாசகருக்கே எழுதப்பட்டுள்ளது. தேடலைக் குறிப்பதாக பெரியவர்களுக்குமானது (மரவட்டை). வெள்ளைக்காரக் குழந்தை கருப்பரைக் கண்டு புக்ககச் சந்தையில் அழுகிறதெனில் கவிப்புப் கவிதையிலிருந்து விலகிக் கொள்கிறார் (வர்ணம்). வளர்ந்த அறுபதில் அக்குழந்தை அம்மாவை முழுதும் நெகிழ்வுடன் நினைத்துப் பார்க்கிறது (நான் அறுபது).

கனவில் . தோன்றி சூரியனையே உண்ணும் ராட்சதர்களை நேரில் பார்க்கும் ஆசை வருகிறது (சூரியனுக்குப் பின் பக்கம்). பறக்கும் நினைப்பில் தரிசனமாகிக் கொண்டேயிருக்கிறது சூரியன். அதை மீண்டும் அவர்கள் சுட்டு வீழ்த்தியதாய் நினைத்துக் கதைத்திருக்கையில் அது மேலுமுயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. கூட்டில் சிறையுண்ட போதும், தன் எல்லையின் வரை வரும் சில உயிர்களோடு கொள்ளும் தொடர்புகளும் இல்லாத போது சூரியின் ஓர் ஆழ் மனமாக, அதற்குக் திரும்பியதும் உலகம் மறந்து விடுவதும் விடுதலையும். அதுதான் என் உலகம். தண்ணீர்த் தொட்டி மீன்களுக்கு உணவும் பாதுகாப்பாக இடமும் இருப்பினும் விடுதலையும் மகிழ்ச்சியும் காணவில்லை. எனவே அவை முள்ளுச் சூரியன்களைத் தேடிக் கொண்டுள்ளன. வழக்கம் போலக் கவிதை வானத்தில் ஆரியனை இருத்தலியல் அம்சம் என்கிறதை மீறி லட்சியப் பொருளாய்தான் தோன்கிறது. முற்போக்கு, நவீன கவிஞர், ஓவியர் எவருக்குமே சூரியன் லட்சியக் குறியீடாய்த்தான் தொடர்ந்து இருக்கிறது.

பெரும்பாலும் கவிதைகள் ஒரு நாடகர்பாணியை மேற்கொள்வது. சொல்லப்படுகிறது வேறெதோ ஒன்றைக் குறித்துதான் நிற்கிறது என்கிற பாவனையால் எனலாம். அதே போல், ஒன்றைப் போலி செய்யும் பொருட்டே செய்யுள் நடையைக் கைக் கொள்ளும் அதே மூச்சில் பேச்சு வழக்குக்கு

வருகிறது. பல சமயங்களில் நாட்டுப்புறப்பாடல்கள், விளையாட்டுப்பாடல் எனவும். தொழுநோயாளிகள், சக மாமி, பொது ஜனம், பாரதி, குழந்தைகள், அம்மா, பூச்சி, கதைகேட்போன், கல் என எதையாவது முன்னிறுத்திப் பேசுகிற உரையாடல் தன்மை. கொண்டு கவிதைகள் இயங்குகின்றன. தன்னுள் நினைத்துப் பார்த்துக் கொண்டு அதைத் தொடர்ந்து சென்று வழுக்கிற கவிதைகள் ஏறக்குறைய இல்லை. எனவே, தொகுப்பு வடிவிலான அதற்கு கூரிய படிமங்களை அமைத்துக் கொள்வதுமில்லை. ஒரு முன்னிலைக்கு மொழிகிற கவிதைகளாதலால் இறுக்கம் குறைந்தும், ஒரே மையப்படிமத்தை சுற்றி வருதல், சொற்கள் தன்னை மீறி விழுதல் ஆகியவை இல்லாமலாக் கச்சிதமாக கூற வருவதில் ஓரளவு சொல்லி முடிந்து எல்லையுணர்ந்து நின்று கொள்கின்றன. எனவே, நடுவில் எடுத்துத் தொகுப்பது, முற்றும் வித்தியாசமான தலைகீழ்ப்பார்வை. கூறாமல் நின்று விடுவது ஆகியவை வாசிப்பைக் கவர உள்ளன. அதிர்ச்சி மதிப்புகளால் உள்ளேப் புகுந்து புறப்படலையும் கோருகின்றன. ஆகவே. அனைத்து விஷயங்களினதும், எல்லோர் தலைப்பின் கீழும் எழுத [illegible]

தொழு நோயாளிகள் உறுப்புகளை தவறவிடுவதாக அவர்களைக் கவிதை பின் தொடர்கையில் காண்பது, நம்பிக்கையுணர்வுச் சூழலில் மனித விநோதமாகக் கருதப்படினும் அது அதிர் [illegible] த்தமரணத்தையே வேண்டி நிற்கும். காற்கரையின் சில பரங்களில் வாக்கியங்கள், பொருள்கள் கூடாத இடங்களில் துண்டித்துக் கொள்கின்றன. சுதந்திரமுடன் வெட்டப்பட்டுள்ள இக பிகாசோவின் போர் ஓவியமாகக் கவிதைத் தோற்றமளிக்கிறது. அடியும் முடியுமென்ற தேடலின்றி பக்கவாட்டில் நகரும் கோமாளித்தனம் (உள்ளும் புறமும்), ஏதோ கேட்பதாக, கேட்காத அபத்தம் (என்ன மாதிரி), விபத்திலிறக்கும் பசுவை உடனே அறுத்துப் பங்கிடும் குரூரம் (திணை உலகம்), பூதக் கண்ணாடியிலிருந்து கண் கவிதைத் தாளுக்கு ஒட்டையிட்டு மாறும் விநோதம் (தாளில் வட்டக் கறை), தாளமிடுகையில் மேஜை ஆயிரம் மைல் கடக்கிற இடம் (தாளம் ரூபகம்), குருவிகள் நுழைந்தால் வாசலாகும் உடைசல் (இரண்டாம் சுற்று பகுதான்ய வருஷம்), ஒரு மாளிகையைக் கட்டியெழுப்புவதில் விருப்பங்கள் கொண்டாலும் கொள்கிற நம்பிக்கை மறுப்பு (சில கோரிக்கைகள்), தன் தொப்புளில் ஊசி குத்த இருக்கையிலும் பெண் தொப்புளில் மூழ்கிய நாய் கடித்த மன இழப்பு (நாய் ஊசி), தாலி அறுக்கும் கூலியில் மளிகைச் செலவு வாங்கும் எதிர் நிலை (க. எண்ணெய் நூறு கிராம்) என்று வாழ்வு நிலையை சிதைத்தும் உருமாற்றிப் போட்டும் எண்ணற்ற துண்டுதுணுக்காகி பன்முகத் தன்மை போடுதான் பார்க்கின்றன. ஞா. கூ. கவிதைகள்.

காவிரியாற்றில் இருளில் தீபங்கள் செல்வதைக் கண்டு கம்பரின் மாளிகை எனும் சொல் திரும்ப எழுவதும், மகிழ்ச்சியிலும் அழுகை வருவதும் கவிஞனுக்கும் எதனாலெனத் தெரிவதில்லை. அழிவுப்பாதை, பாம்பும் பிடாரனும், ஈபாலை, காகித வாழ்க்கை, மீண்டும் அவர்கள், எண்ணி எண்ணி போன்ற நன்கு உருவான கவிதைகள் மத்திம காலங்களில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்போது காட்சி போல் பரிசோதனைகளும் நிறைவேறியுள்ளன. இக்காலமே ஆத்மாநாமின் வாழ்வுடன் தொடர்புற்றிருந்த காலம் எனத் தெரிகிறது. ஆரம்பப் பகுதிகளிலோ அரசியல். கடைசி கட்டங்களில் மிருத்யும் கதை மனம். வழக்கமான முத்திரைகள் ஓங்கிப் பதிக்கப்படாத அபூர்வ வரிகளோடும் 'ப்ரதி பாஷி'யும் பிற்பாடு சாத்தியப்பட்டுள்ளது.

ஒரு என்னத்திற்கு பதிலீடாக

தன் அனுபவ உலகிலிருந்து விரிந்து பெறுகிற மொத்தத்தையும் காட்டுகிற அருபமான ஓட்டமாக படிமம் வைக்கப்படுகிறது. ஒரு பொருளுக்கு மாறாக மேலும் விளக்கமென மற்றொரு பொருட்தன்மைகள் இக்கவிதைகளில் வரிசையாக வருகின்றன. 'சமித்துப் போல் சேமித்து' 'மத்துக் கயிற்றின் துண்டம் போல் விரல்' 'சிலுவையேறிய யூதப் பைத்தியம் போல் இலவ மரம்' 'கோபுரச் சிலை மேல் சிக்கிய பட்டம்' 'வெண் புறா' 'புளியன் விதை போல் தொப்புள்' ஒரு விஷயத்தைக் குறிக்கவென படிமங்கள் அதை விகசிக்கவுறாமல் தன் பார்வையின் எண்ணமிட்டு உவமைப்படுத்தப்படுகின்றன. கவிதைக்கு வெளி உண்டாக்காமல் தன்னளவில் குறுக்கப்படுவனவாக தோற்றமளிக்கின்றன. எழுதும் காலம் முழுதும் உவமையணிகளை தொடர்ந்து வித்தியாசமாகவும், சில நேரம் நகர மயப் பார்வையிலும், பாரதிதாசன்லிலி சுரதா தொடர்ச்சியாக வந்தாரைப் போலவும் உருவாக்கி வருகிறார் ஞா. கூ. பொருண்மையற்ற 'காற்றின்லிலிதீராத பக்கங்களில்' லிலிமுடிவேயில்லாமல் வெளியில் எனும் போதே வாசிப்பு அங்கே மட்டும் நின்று விடாமல் தொடர்ந்து இயக்கமுடிகிறது.

எதைக் கூறுவது, விடுவது என்ற தெளிவான பிரக்ஞை ஞா. கூ.வுன் தொடர்ந்து வருவது. தட்டி ஓட விட்டு பின் தொடர்ந்து பதிவு செய்கிற பிரவாக முறை இல்லை. எனவே, சிராய்ப்புகளின்றியும் தாவலும் நிகழாமலாகி விடுகிறது. 'ப்ரதி ப்ராஷி' போன்றவற்றிலேயே அபூர்வ ஓடல் நேர்கிறது. ஒரு பேராளுமையாக உருவாகி எல்லாவற்றின் மீதும் பார்வையை வீழச் செய்து கட்டுப்பாட்டோடும், கோணல் பார்வையை அணிந்தும் இயற்றுகிறார். கவிதைகளின் போக்கில் பித்துப் பிடித்த நிலைகள் உண்டாகாமல் உச்சநிலைகள் சாத்தியமில்லாமல் ஆகின்றன. யதார்த்த பாதையில் ஓடாமல் திரிபுற்ற நிலை கொண்டு விஷயங்களை ஆள்வதால் அதுவே பிரதானமாகிவிடுகின்றன. உணர்ச்சிகரப்பாடு கொள்கையிலும் அவர் கிண்டல் பார்வை நீங்குவதேயில்லை. பெரும்பாலும் இந்த அங்கதமும் கசப்புணர்ச்சி முற்றி விளைந்த எதிர்மறையான என்னமல்ல. அசோகமித்திரனின் அடங்கிய கரிந்த ஹாஸ்யம் போலன்றி புலமையின் மேட்டுக்குடித்தனம் வெளிப்படுத்தும் சுவாரசியத் தன்மையின் பாற்பட்டதே. 'கறுப்பு நகைச்சுவை' தன்னிலை கொண்ட சுய எள்ளலும், இயலாமையின் இகழ்ச்சியுமாகும். அந்த லேசான கேலி என்பது வாழ்வதின் அர்த்தமான ஆழ்ந்த வருத்தத்தின் மேலே தேங்கிப் படிந்து கிடப்பது.

தன் கோணல் புத்தி மூலமும், முக்கியத்துவமற்ற சாதாரண பொருளை எடுத்தியம்புவதிலும், வருவித்துக் கொண்ட செயற்கையான செய்யுள் நடையாலும், திடீரென நடுவில் கொச்சையை பேச்சைமைதியற்று உபயோகிப்பதாலும், சற்றே ஆபாசப் எனப்படுபவற்றைக் கொண்டு வருவதன் வாயிலாகவும் (பீயாய், குசுப்போல், தூக்கிக் காட்டுறேன், புட்டம், ஓட்டை) அங்கத்தை ஏற்படுத்துகிறார். அதே போல் தமிழ் சமூகத்தை அதன் போலி மொழியுணர்வு காரணமாகக் கிண்டலடிக்கிறார். இவை முற்றிலும் புலமை சார்ந்தே இயங்குகிறது. ஒரு சுவையாக எஞ்சி நிற்கிறது. 'ஒன்றுக்கிருக்கத் தடை' என்கையிலோ ஆழ்ந்த கேலி தொனிக்க கூரிய சினமும், சாமான்யனின் எற்றலும், தொடுத்த ஒரு போராகவும் எழுப்பப்படுகிறது. சமகாலத்தில் ஆத்மாநாமும், இவரும் ஒரே நிலப்பரப்பில் இயங்கினாலும் (அரசியல், வேலை, குழந்தை, பொருட்கள், ஒரே தலைப்பிலும் கூட). இருவரும் சொற்களை பூரணமாக நம்பி இறங்கினாலும் உள்ளே கொள்கிற தேடல்கள், ஞா. கூ.விடம் மேற்புறத்தில் நிற்க, விஷயத்தை அகவயமாய் புரிந்து கொள்கிற ஆத்மாநாம் அடுத்த தளத்திற்கு நகர்கிறார்.

மேலான கவிதைகள், சுயவோட்டத்தாலும், திடீரென்றும் பீறிட்டெழுகிற அபூர்வ வார்த்தைச் சேர்க்கைகளாலும், உன்மத்த நிலையாலும், தன்னில் தன் மயங்கி எழுப்பிவிடுகிற லயப் பிரவாகத்தாலுமே சாத்தியப்படுகின்றன. திட்டவட்ட தன்மையாலும், கருத்துப்படிகிற தொனியாலும், தொழிற்படுதலாலும், அதிர்ச்சி மதிப்பு போன்றவற்றை எதிர்பார்த்தாலும் சமதளத்தில் நடப்பதாலும் உடன் மிகு ஓசையோட்டத்தாலும் சாதாரணங்களாகவே வாய்க்கின்றன. ஞா.கூ. புறவாழ்வின் பொருண்மையான பிரச்னைகள் அணைத்தும் தம்மை பாதிக்க விடுபவர். எனவே, ஒரு பௌதிகத் தன்மை கவிதைக்கு வந்து விடுகிறது. ஆன்மிகம் என்கிற மனம் சம்பந்தமான விஷயம் குறித்த தீராத கேள்விகள் பெரிதாக எழுவதில்லை. ஜடம் பற்றிய வியாக்கியானங்களாகவே நின்று விடுகின்ற தோற்றமளிக்கின்றன. நெடும் காலத்தின் மறதியில் வாழ்க்கைப் போக்கில் திரும்பவுமென மேலெழும் மனப்பதிவுகள் எதையும் உண்டாக்க மறுக்கின்றன. அப்படி அவை எழுந்திடினும் அதற்கான காரணங்கள் ஞா. கூ. கவிதைகள் உத்தேசித்துள்ள தன்மைகள்தான்.

ஞானக்கூத்தன் கவிதைகள்: விருட்சம் வெளியீடு விலை ரூ 125

இன்னும் வரவில்லை உன் நத்தை ரயில்

லாவண்யா

வெளியீடு:

விருட்சம்

7, ராகவன் காலனி, மே.மாம்பலம், சென்னை- 33

தமிழ்க் கவிதையானது இன்று கிட்டத்தட்ட நூற்றாண்டைக் கடந்துவிட்டது. நீர்க்குமிழிபோல் ஆயிரம் கவிஞர்கள் தோன்றி மறைந்துவிட்டார்கள். காலத்திற்கேற்ப இன்றைய கவிதை தனக்கான உள்ளடக்கத்தையும், வடிவத்தையும் பெற்றிருக்கிறது.

இன்றைய நவீன கவிதையானது, இன்றைய வாழ்க்கையின் துயரத்தையும், சலிப்பையும் அப்படியே பதிவு செய்யாமல், சுயப்பச்சாதாபத்தை உருவாக்காமல், கலையை, ஓவியத்தை உருவாக்கும் மனோபாவத்தைக் கொண்டதாக வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதன் அகமனம் சிறுபத்திரிகைகளிலும் உள்ள மறைமுக சட்டத்தை

மீறுவதாக இருக்கிறது. வலியும், மகிழ்ச்சியும் கலைத் தன்மைக்கு மாறுகிறது. அகமனத்தின் மொழி, வல்லமையாகிறது. உரையாடல் கலாபூர்வமாகிறது. இன்றைய சமூகப்பிரச்னை, சமூகத்தினால் தனிமனிதப் பிரச்சனை யாவும் பொழுதுபோக்கு அம்ச இதழ்களுக்குத் தாவிட்டன. கவிதை எந்திரத் தன்மை சிறுபத்திரிகைகளிடம் இருப்பதில்லை. சிறுபத்திரிகையில் கவிதை எழுத பயின்று வரும் கவிஞர்கள் (?) பலர் பொழுதுபோக்கு இதழ்களில் எந்திரர்களாகி வருகின்றனர்.

ஆக, லாவண்யாவின் கவிதைகள் மதில்மேல் பூனையாக நின்றுகொண்டிருக்கின்றன. பொழுதுபோக்கு அம்ச இதழ்களில் வரக்கூடிய கவிதை என்ற பெயரில் வெளியாகும் மாதிரி பதிவுகள் அதிகமாக உள்ளன. சிறுபத்திரிகைகளில் வரும் கவிதைகளின் மாதிரி வடிவமாகவே இவருடைய கவிதைகள் நிலவுகின்றன. பழகிய மனோபாவத்திலிருந்து, மன அவசத்திலிருந்து விடுபட்டு வேறுவிதமான புனைவு உலகத்தை அடைவது இன்றைய நவீன கவிதைக்கு வழியாகிறது. (குட்டி ரேவதி, மாலதி மைத்ரி போன்றும்) அவ்வகையில்.

42 கவிதைகளில் மரம், உள்ளே நின்றிருந்த என் எலும்புக்கூடு, நருமுகம் தெரிந்தது, உமையோடு பாகன்கை நகர்த்தும் காய், வீடு ஆகியவை மட்டுமே கவிதைகளாகத் தோன்றுகின்றன. ஒரு இடத்தில்கவிதைதான் கவிஞன் வழியாக வெளிப்படுகிறது என்று யாரோ ஒரு கவி சொன்னது லாவண்யா என்கிற சத்தியநாதன் அவர்களுக்குப் பொருந்தும் என்றே தோன்றுகிறது.

ஸங்க்ராந்த்

எட்டிப் பார்க்கும் கடவுள்

(கவிதைகள்)

பா. வெங்கடேசன்

பக்கம்: 112 விலை: 40 வெளியீடு: விருட்சம்
7, ராகவன் காலனி, மே.மாம்பலம், சென்னை-33

'புதுக்கவிதை' எனப் பெயரிட்டதோடு மட்டுமின்றி ஒரு இயக்கமாக அதன் நிலைபேற்றிற்கும், வளர்ச்சிக்கும் உழைத்ததில் சி.சு. செல்லப்பா, ந. பிச்சமூர்த்தி ஆகியோருடன் க.நா.சு விற்கும் கணிசமான பங்குண்டு. குறிப்பாக நவீன கவிதையின் துவக்க காலத்தில் அதன் உருவம், அடைய வேண்டிய லட்சியங்கள், முக்கொடுக்க வேண்டிய சிக்கல்கள், மற்றும் அதுசெல்லக் கூடிய திசை ஆகியவை பற்றி ஆழ்ந்த அக்கறையோடும், அவதானத்தோடும் அவர் எழுதிய கட்டுரைகள் இன்றளவும் அவற்றின் முக்கியத்துவத்தை இழக்காமலிருப்பவை. புதிய தமிழ்க்

கவிதை சங்ககால போக்குகளைப்பின்பற்றி, வசனத்தின் முக்கிய அம்சங்களான தெளிவு, வேகம், நேர்மை இவற்றுடன் கவிதையின் லட்சியத்தையும் உள்ளடக்கிய ஒன்றாக வளரவேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் நவீன கவிதை அவருக்கு அவ்வளவாக உவப்பில்லாத ந.பி. யின் கவிதைகளைப் பின்னொட்டியே தனது உருவம், படிமத்தன்மை, தத்துவார்த்த சார்பு ஆகியவற்றை பெற்று பரிணமித்திருக்கிறது எனலாம்.

க.நா.சு. வின் மதிப்பீட்டின் படி அவருக்கு முக்கியமான கவிஞர்களாகப் பட்டவர்கள் ஷண்முக சுப்பையா, நகுலன், பசுவய்யா, ஞானக்கூத்தன், மயன் ஆகியோரே. இப்பட்டியலில் முன்னவரின் கவிதைகளை படிக்கும் வாய்ப்பே அநேகமாக இத் தலை முறையினருக்குக் கிட்டுவதில்லை. பின்னவர்களில் நகுலனுக்கு அவரை சூழ்ந்திருக்கும் தனிமையின் அந்தகாரமும், பசுவய்யாவிற்கு தனதேயான அழகியலின் முடிவற்ற தேடலும், ஞானக்கூத்தனிடம் அப்த்தமும், அங்கதமும் முயங்கி பெற்றதொரு மெல்லிய வக்கிரமும், அவர்களின் கவிதைகளுக்கேயுரிய பிரத்தேயகத் தொனியை உருவாக்கியிருக்கிறது. பிறகு வந்த தலைமுறையிலும், விக்கிரமாதித்யன் சுகுமாரன், சமயவேல், மனுஷ்ய புத்திரன் என சிலரை, வசனத்தின் சாதகமான வலிமைகலோடு, தங்களின் தனித்துவமும் கூடிய கவிதைகளை எழுதுபவர்களாக கூறலாம். ஆனால் இவர்களில் எவருமே க.நா.சு மாதிரியான கற்பனாவாத அம்சமேதும் கலவாத தெளிந்த சிந்தனையின் பாற்பட்டதொரு மொழியைப் பயன்படுத்தி எழுதுபவர்களில்லை. அவ்விதத்தில் பலவருடங்கள் கழித்து பா. வெங்கடேசனிடத்தில் மயன் கவிதைகளின் மொழிரீதியான தொடர்ச்சியை காணலாம்.

இலக்கியத்தை பொருத்தவரையிலும் வடிவம் பற்றிய எந்த வரையறைகளுமே ஒரு வகையில் தற்காலிகமானதே. தேவைகளையும், காலத்தையும் யொட்டி பழைய வடிவங்களைச் சிதைத்து தனக்கான வெளிப்பாட்டு முறையை ஒருவர் உருவாக்கிக்கொள்வது இயல்பான ஒன்றே. பல சமயங்களில் இத்தேடல் முன்னைப் பழமையின் மறுசுழற்சியாகவே தன்னைப் புதுப்பித்துக் கொள்வது முண்டு. நவீனத்துவத்தின் தத்துவத்தையும், இருண்மையையும், படிமச் சுமைகளையும் உதறமுயலும் இன்றைய கவிதையுடன் பா. வெங்கடேசனின் மொழி காலரீதியான ஒரு அணுக்கத்தை கொண்டதாக இருப்பதைக் காணலாம்.

பெரிதும் நேரடியான விவரணைகளும், காட்சித்தன்மையும் கூடிய சங்கக் கவிதைகளுக்கு அதன் தொனியை, இறைச்சித் தன்மையை குறிப்புணர்த்துவதற்கான சட்டகங்களாக அக்கவிதைகளுக்கு வெளியே அதன் திணை, துறை வகைகளும் அது சார்ந்த கரு, உரி, முதற் பொருட்கள் போன்ற நிர்ணயங்கள் அமைந்திருந்தன. நவீன கவிதைகளுக்கு அத்தகைய புறவசதிகள் ஏதுமில்லையாதலால், வசனத்தை கவித்துவமாக மாற்றுவதற்கு மொழியுடன் நுட்பமும், தேர்ச்சியும், பிரயாசையும் கொண்டதொரு உறவை வளர்த்து கொள்ளவேண்டியவனாக இருக்கிறான் இன்றைய கவிஞன். மொழியின் இயல்பான சந்தம், எதுகை மோனை முதலியவைகளையும் தவிர்த்துவிட்டு சிந்தனையின் ஒரு லேசான சுழிப்பு, தூர வைத்துப் பார்ப்பதால் உண்டாகும் சார்பற்றத்தன்மை ஆகியவற்றால் தனது கவித்துவத்தை ஸ்தாபிக்க முயல்கிற வெங்கடேசனின் எத்தனம் கண்ணாடித் தடுப்பிற்கு அப்புறமிருந்து

பேசமுயற்சிப்பது போன்ற ஒன்றே. இத்தகைய கவிதைகளின் வெற்றி தோல்விகள் அதன் தணிவான குரலின் காரணமாக கவனத்தை ஈர்க்காமல் போவதற்கான சாத்தியங்களே அதிகமுண்டு.

விதி (பக் 18) என்றொரு கவிதை 90 ல் எழுதியது.

யார்மீதும் மோதிக்
கொள்ளாதிருக்கும் கவனத்துடன்
யாரும் நடப்பதாகத் தெரியவில்லை
ஆனாலும்
யாரும் யார் மீதும் பெரும்பாலும்
மோதிக் கொள்வதில்லை.

சாலையை வேடிக்கைப் பார்ப்பதிலிருந்தும் பெறப்பட்ட இக்கூற்றை வாழ்வின் போக்கு வரத்துகளுடனும் இலகுவாகப் பொருத்திப் பார்க்கிறது என்பதைத்தவிர்த்து இது நமது வாசகப் பிரக்ஞையில் அதிகப்படியான குறுக்கீடு எதனையும் நிகழ்த்துவதில்லை. ஒரு தனிக் கவிதையின் வரிகளைவிடவும் அவை எழுப்பும் எதிரொலிகள் வாசகனுக்கு முக்கியமானவை. இதற்கு நேர்மாறாக இன்னொரு கவிதையை இங்கே பார்க்கலாம். தலைப்பு் திரும்பல் (பக் 72)

விடுமுறைக்கு வேற்றூர்
சென்றிருந்தவர்க ளெல்லோரும்
திரும்பி விட்டார்கள் கெஞ்சிக் கூத்தாடி
விடுப்பு எடுத்துக் கொண்டு
கூடச் சென்றிருந்தவர்களும்
திரும்பி விட்டார்கள்
விடுமுறைக்குக் காத்திருக்கத
தேவையென்னவெனும் இலக்கிய
அறிவு ஜீவிகளுக்குங் கூட
ஊர்திரும்பும் நேரம் வந்து விட்டது
விடுமுறையும்
போக்கிடமும் இல்லாத என்
தினசரிகளின்
நீரோட்டத்தில் வெள்ளம் பாய்ந்து
விட்டது.

இக்கவிதையில் விவரணைகளாக அடுக்கப்படும் முன்வரிகள் அனைத்தையும் படிமத்தன்மையுடைய கடைசி வரி கலைத்து கவித்துமுடைய ஒன்றாக மாற்றிவைத்துவிடுகிறது. இறுதியில் இங்கும் கவிதை சொல்லி சொலற்று வேடிக்கை பார்ப்பவனாகவே நிற்கிறான் ஆனால் முன்காட்டிய கவிதையில் பார்த்திருப்பதற்கும் இதற்குமான தூரத்தை நாம் உணரமுடிகிறது.

ஒரு வசதி கருதி வெங்கடேசனின் மொத்த கவிதைகளையுமே இவ்விரண்டு வகைமாதிரிகளுக்குமான ஊடாட்டமாக வகுத்துவிடலாம் என்றே தோன்றுகிறது. உரைநடை, கவிதை இரண்டும் ஒரே மொழியைப் பயன்படுத்தினாலும் அவற்றில் இயங்கும் தர்க்கங்கள் வேறு. முன்னது துல்லியமானதும், திட்டவட்டமானதுமான ஒன்றை சுட்ட தன் மொழியை உருவாக்குகையில், பின்னதோ தெளிவற்றதும், நிச்சயமில்லாததுமான தன்மைகளையுடைய தனது மொழியை தேடுகிறது. வெங்கடேசனின் அண்மைக்கால கதைகளின் அதீதமான புனைவுத் தன்மையுடனும், அதன் மொழியில் தென்படும் தீவிரத்துடனும் ஒப்பிடுகையில் அவரது கவிதைகளுக்கு அடுத்த இடமே கிடைக்கும் எனப்படுகிறது. இத்தொகுப்பின் குறிப்பிடும் படியான கவிதைகள் 'திசைகளற்ற கழுகு' இத்தொகுப்பின் தலைப்பிடப்பட்ட இதன் கடைசிப் பகுதியில் உள்ளன. இக் கவிதைகள் இதன் முற்பகுதியிலுள்ள கவிதைகளுக்கு மாறாக லேசான கற்பனாவாத அம்சத்தையும், புனைவுத் தன்மையையும் தம் மொழியில் கொண்டிருப்பவையாகும்.

க. மோகனரங்கன்

குட்டியாப்பா

நாகூர் ரூமி

மரணமடைந்துவிட்ட ஒருவன் உயிரற்று இருக்கும் போது பெறும் மரியாதை என்ன? அவன் எவ்விதமாகவெல்லாம் நினைவு கூறப்படுகிறான்? அப்படி ஒன்றும் பெரியதாக இல்லை. ஒருவனின் பிணத்தை உடன் வைத்திருக்கும் போதே வீட்டில் விட்டு வந்திருக்கும் தோசை மாவும் சிலருக்கு நினைவுக்கு வருகிறது. (குட்டியப்பா. பக் 13) என் உறவினர் பெண்ணொருத்தி தன் நெருக்கமான உறவுச் சாவின்போது, ஓயாத புலம்பலின் இடையில் 'களுக்' என்று சிரித்துவிட்டதை நினைக்கத் தோன்றுகிறது. ரூமியின் கதைகள் பலவும் மரணம் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி நிற்கின்றன. இந்தத் தொகுப்பில் உள்ள இருபத்திரண்டு கதைகளில் எட்டு கதைகள் மரணம் குறித்தவை.

மரணத்தை சந்திக்கும்போது மனிதன் சமநிலை குலைகிறான். அழவேண்டியதாயும், சிரிக்க வேண்டியதாயும் என எல்லா உணர்வு நிலைகளுக்கும் அவன் போய்வர வேண்டியுள்ளது. சில போதுகளில் இறப்புக்குப் பிந்திய சடங்குகள் வெறும் பாவனைகளாகவும்கூட மிஞ்சும் அவலம் நேர்கிறது. அவரின் உணர்வு ஏறகனவே சாகடிக்கப்பட்டுவிட்டது. அவரின் நிஜமான இறப்பு நேரிடும்போது வேதனையுடனும், விரக்தியுடனும் அவரின் வாழ்க்கை சம்பவங்களை அசைபோட தூண்டுகிறது. ரூமி அதை அழகாக செய்கிறார். அசைபோடலினூடே பரிகாசமும், எள்ளலும் சேர்ந்துக்கொள்ள அந்தச் சிரிப்பொலிகள் நம்மை நோக்கியே திரும்பிக் கொள்ளும் சுழற்சி நிகழ்ந்துவிடுகிறது. தமிழின் நல்ல கதைகளில் ஒன்றாக இந்தத் தன்மையினாலேயே குட்டியப்பா இடம் பிடித்துக் கொண்டு விடுகிறது. கன்னடத்தில் இன்றும் சிறந்த நாவலாக கருதப்படும் சிவராம காரந்தின் அழிந்த பிறகு நாவல் ஒரு விரிவான பரப்பிலே இறந்த ஒருவனின் பின்னோக்கிய எதிர்வினைகளை காட்டிச் செல்வதை, ரூமி ஒரு சிறுகதையிலேயே செய்கிறார். கொஞ்சம் நீண்ட குறுநாவல் வடிவம் கொண்ட சிறுகதையில்.

இந்தக் கதையை போலல்லாது பிற கதைகளில் ரூமிக்கு பிறப்பு : இறப்பு, இம்மை : மறுமை, சொர்க்கம் : நரகம் போன்ற கவலைகள் பிடித்துக்கொள்கின்றன. அதனால் அவர் அக்கதைகளில் தீவிர மதப் பிரச்சாரகராக மாறிவிடுகிறார். உரிப்பு, விசாரணை, மரண விருட்சம், மன்னிப்பு, வெளிச்சம் போன்ற கதைகளை இதற்கு சான்றாகக் கூறலாம்.

இசுலாம் பின்னியுடைய எழுத்தாளர்களில் ரூமியை தனித்துக்காட்டுவது அவரின் இந்த மதக் குரலாகவே தெரிகிறது. மணிவிளக்கு, மணிச்சுடர், முஸ்லீம் முரசு ஆகியவைகளில் வெளிவந்துள்ள சுமார் ஒன்பது கதைகளும், இதழ்களில் வெளிவராத சிலவும் அத்தன்மையை கொண்டவனவாகவே இருக்கின்றன. இசுலாமின் நம்பிக்கைகளை, குரானின் வசனங்களை, நீதியை வலியுறுத்துவதாகவே இக்கதைகள் அமைந்திருந்தாலும், இசுலாம் வாழ்முறையை உயிரோட்டமாக சித்தரிப்பதில் சில இடங்களில் வெற்றி பெற்றுவிடுகின்றன. காரணம் கடன், நிறங்கள், ஹத்திம் தாஈ, சுன்னத்து, எச்சில்படாத நோன்பு போன்ற கதைகள் இப்படியானவையே.

இந்தத் தொகுப்பின் கதைகளை இசுலாம் பிரச்சாரக் கதைகள் பிரச்சாரம் அல்லாதவை என்றும் கூட வகைபிரிக்கலாம். சில இடங்களில் கதைகளின் வர்ணனைகள் கூட மதப் பிரசாரத்துடனே இருக்கின்றன... தலையை நீட்டு கையில் பச்சை பச்சையாக வயல்கள் - இளங்கதிர்கள் - இப்படியும் அப்படியுமாக தலையாட்டிக் கொண்டிருக்கின்றன..

இசுலாமிய தியாலஜிபடி பச்சையாக இருக்கின்றன எதுவுமே - அதாவது Vegetations சதா நேரமும் இறைவனை தியானித்துக் கொண்டிருக்குமாம். (பக் 38). ... அவன் பார்த்துக் கொண்டிருந்தது ஒரு மலர் ரிபு நேரத்து வானம் (பக் 84) ...மறுமைநாளின் இன்பங்களில் ஏதோ ஒன்றின் குறியீடாகத்தான் தேநீர் இப்புவியில் பவனி வருகிறது என்பதில் சந்தேகமில்லை (பக் 104). சில இடங்களில் இந்த மனோ நிலையின் பார்பட்ட உந்துதலில் ரூமி இப்படியும் எழுதிவிடுகிறார்:

'வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற, அன்பையும் ஆதரவையும் போதிக்கின்ற கர்த்தரைக் கடவுளாகக் கொண்ட அந்த கிரிஸ்டியன் ஆஸ்பத்திரியில் ஆக்ஸிஜனோ வேனோ தருவதில்லையாம்...'(பக் 32) 'ஏசுநாதர் அல்லது ஆதாம் பாணியில் தோள்பட்டை வரை தொங்கி புஜங்களுக்கும் கீழே வழிந்த முடிகள் பல மாதங்களாக எண்ணெய் காட்டப்படாமல் ஒரு அநாகரிகமான பழுப்பேறியிருந்தன சொறிந்துகொண்டான்.' (பக் 41) ரூமியின் நடை கேலியும், துள்ளலும் நிறைந்த சுஜாதா பாணியை நினைவூட்டும் நடை.

மிகச் சின்ன நிகழ்வையும் நல்ல கதைகளாக்கியிருக்கிறார் ரூமி. ஒரு மாலைப் பொழுதில், பேருந்து பணன அனுபவமும், சாளரம் கதையில் முடிவெட்டிக்கொள்ளும் சம்பவமும், காய்ச்சல் அவஸ்தையும் இவ்வகை கதைகளாக இருக்கின்றன. காய்ச்சல் செறிவான, மிகப்புதிய விவரணம் கொண்ட சிறுகதையாகும்.

ஒவ்வொரு படைப்பாளியும் தன் சுயத்தையே முன்வைக்கிறான். எல்லாருக்கும் பொருந்தும்படி. சுயசரிதை கதை இரண்டுக்கும் இடையே உள்ள புள்ளி வெகு நுட்பமான ஆனால் கரார் தன்மையது. ரூமியின் கதைகள் பெரும்பாலானவற்றில் உள்ள பாத்திரங்கள் வாப்பா, குட்டியப்பா, மனைவி நஜீம், ரூமி, மகள் யாஸ்மீன், மாமா, ஊர்மமரைக்காயர் ஆகியோர் மிக நேரடியான அடையாளத்துடன் வருகின்றனர். ஈடுபாடுடனான வாசிப்பின் ஊடே இது ரூமியின் விசயம் என் மின்னல் வெட்டுகின்றன இவை. பிரம்மராஜன், ஆத்மாநாம், எமிலி டிக்கின்சன் என பேசும் பாத்திரங்களால் இந்த மின்னல் வெட்டு மேலும் ஆழமாகிறது. தாகூல்பானா பற்றிய விவரிப்புகள் மரண விருட்சம், ஹாத்தீம் தாயி ஆகிய கதைகளிலும், ஊர்மரைக்காயர் பற்றிய குறிப்புகள் அவரோகனம், சுன்னத்து ஆகிய கதைகளிலும் திரும்ப வந்து ஏற்கனவே படித்த உணர்வைத் தருகின்றன.

எல்லாவற்றையும் தாண்டி இத்தொகுப்பு நேர்மையான விவரணைகள், எள்ளல், முதிர்ந்த பார்வையுடைய தொனி ஆகியவற்றைக் கொண்டு இசுலாம் வாழ்வின் வேறு சில பக்கங்களை திறந்துவிடுகிறது.

எல்லா எழுத்துக்களும் அரசியலையும், ஆன்மீகத்தையும் தம் தளங்களாகக் கொண்டே எழுகின்றன. ஆன்மீகம் மதத்திலிருந்து முற்றாக தன்னை விலக்கிய கருத்துருவாக பிரிந்து கலையின் படைப்புக்கூறுகளுடன் பிணையும் போது படைப்பின் பூரணத்துவம் நேர்கிறது. நவீன எழுத்தின் வகைமைகளுக்குள் ரூமியின் சில கதைகளை தவிர்த்து பெரும்பான்மை யானவற்றை கொண்டுவர முடியவில்லை. அதற்கு அவரின் வெளிப்படையான மதப்பிரச்சாரமே காரணமாகிவிடுகிறது. ரூமி இந்த அம்சத்தை தன் அடுத்தடுத்த தொகுதிகளில் குறைத்துக்கொள்ளவே, முற்றாக துறக்கவோ செய்யலாம்.

இந்தத் தொகுப்பை பொறுத்தவரை குறிப்பிட்டச் சொல்ல வேண்டிய ஒரு அம்சம் சரளமான நடை. ரூமி எங்குமே சிரமப்படவில்லை. மிக இயல்பாக அவரின் எழுத்து ஓடுகிறது தனது எல்லைகளை நோக்கி. வாசிப்புக்குச் சிரமம் தந்து வாசகனை புத்தகத்துடன் மாரடிக்கவைக்கிறபடியான தொகுப்பாக ரூமியுடையது இல்லாதது சந்தோஷமளிக்கிறது. 'தேள்' - சிறுவர் கதை போல் இருக்கிறது. இதை தொகுப்பிலிருந்து தவிர்த்திருக்கலாம்.

சில முழுமைபெற்ற கதைகளின் நிமித்தமாக குட்டியப்பா ஒரு தவிர்க்க முடியாத தொகுப்பாகிறது.

அழகிய பெரியவன்

சங்கராபரணி

மாலதிமைத்ரி

இது நடந்து ஏறக்குறைய இரண்டு வருடங்கள் ஆகிவிட்டிருக்கும். அப்போது கதைச் சொல்லியில் ஒரு கவிதை வெளியானது - அதில் இருந்த - பல மலைகள் கடந்து பயண முடியில் எனக்குள் பாயும் ஆறு - என்ற வரிகளின் வழியான உணர்வு வெளிப்பாடு என்னைப் பிரமிக்க வைத்தது. இதைப் பற்றி - எனது நண்பரும் நவீனகவியுமான ஸ்ரீநேசன் அவர்களும் தெரிவித்தார். இதன் பின் மாலதி மைத்ரி கவிதைகளைத் தொடர்ந்து வாசிக்க - சுகிக்கத் தொடங்கியது. இதற்குப் பின்னான காலத்தில் - நவீன விருட்சத்தில் - வெளியான யானைக் கதை கவிதையும் எங்களை - என்னை ஈர்க்கச் செய்தது. அது வெளியாக காலத்தில் தமிழ்க் கவிதையின் உலகத்தில் தன்மையான கவிதைகள் வெளிவரவில்லை. இத்துடன் ரமேஷ் - பிரேமின் இருபது கவிதைகளும் இரண்டாயிரம் ஆண்டுகளும் என்னும் கவிதைத் தொகுதியிலும், பெருந்தேவியின் - தீயுறைத்தூக்கம் என்ற கவிதைத் தொகுதியிலும் இதைப் போன்ற அம்சங்கள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விரு தொகுதிகளையும் வைத்து நண்பர்களுடன் பேசமுடிந்தது. இப்போது மாலதி மைத்ரியின் கவிதைத் தொகுப்பான சங்கராபரணி என்ற கவிதைத் தொகுதியை - ஒட்டுமொத்தமாக - வாசிக்க முடிந்தது.

சமீபகாலமாகப் பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் மற்றும் பெண்ணியக் கவிதைகள் சார்ந்த உலகம் பேசப்பட்டுக்கொண்டே வருகிறது. என்னால் ஒரு வாசகன் என்ற அளவில் வைத்துப் பார்க்கும்போது பெண்ணியக் கவிதைகள் என்றோ ஆணியக் கவிதைகள் என்றோ பிரித்துப் பார்க்க முடியவில்லை. பிரதி மட்டுமே என் வாசிப்பில் எப்போதும் இருக்கிறது. பெண்ணியம் மற்றும் ஆணியம் வலியுறுத்தும் உடல் - மனம் சார்ந்த அபிப்ராயங்கள் என்னை எந்த விதத்திலும் சலனம் ஏற்படுத்தவில்லை. ஒரு வேளை அவை கருத்தியலுடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதால் இருக்குமோ என்று எண்ணுகிறேன். இதற்கு இணையான வலிகள் ஆண்களுக்கும் உள்ளதை நாம் காண இயலும். என்னளவில் வலி எனப் பொதுவாகக் கூறப்படுவன யாவும் லௌகீக வலிகளைப் பற்றியதாகவே இருக்கின்றன. எனவே, ஆண் அல்லது பெண்ணின் வலிகளை நான் பொருட்படுத்துவதில்லை. ஆனால் வலியிலிருந்து பெறப்படும் கலையைத் தான் விரும்புகிறேன். எந்தவொரு தொகுதியின் முன்னுரையிலும் - பின் அட்டையிலும் சொல்லப்படும் கருத்தியலை நான் முற்றிலுமாக விலக்கிவிடுகிறேன். எந்த - கருத்தையும் - வலியுறுத்திக் கொள்ளாமல் வாசித்தும் வருகிறேன். அந்த அளவில் இத்தொகுப்பின் முன்னுரை - பின்னுரை சலனப்படுத்தாமலே உள்ளது. மாறாக அவரின் கவிதைகள் சலனம் செய்கின்றன. இப்போது மாலதி மைத்ரியின் கவிதைகளைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

இன்றைய நவீனக் கவிதையில் யதார்த்தத்தை, நினைவுக் குறிப்புகளை, தன் வாழ்ந்த நிலப்பரப்பை, வலிகளை அப்படியே பதிவு செய்தல் - (யதார்த்தம் என்ற பெயர்ப் பூச்சில்) என்பது இப்போதும் இருக்கின்றது என்று தோன்றுகிறது. அப்படியான கவிதைகள் பெரிதும்

சலனப்படுத்தவில்லை என்றே நினைக்கிறேன். வெறும் பதிவு என்ற அளவிலான இவை யாவும் கவித்வத்தைக் கொண்டிருக்கவில்லை - கவிதைக்கான உரைநடையில் எழுதப்பட்டவையாகவே எனக்குத் தோன்றுகிறது. சமீபகால இதழ்களில் வெளியான - அதாவது - ஸ்ரீ நேசன் கவிதைகள் (புது எழுத்து), பாலை நிலவன் கவிதைகள் (பன்முகம்), சங்கர ராமசுப்பிரமணியன் (அகம் - புறம்), மகாதேவன் கவிதைகள் (அட்சரம்), குட்டி ரேவதி கவிதைகள் (புனைகளம்)ஆகியவற்றின் கவிதை உலகம் முழுக்க முழுக்கக் கற்பனையும் - கனவுத் தன்மையும் பெற்று - நிலப்பரப்பையும் தழுவி - வந்ததைக் காண முடிகிறது. இப்படியான உரு - தன்மை தெரிந்தோ தெரியாமலோ நிகழ்ந்துள்ளது. இதைதான் நான் கால - கலைத்தன்மை என்று கூற விரும்புகிறேன்.

இவ்வகையில் - மாலதி மைத்ரியின் கவிதைகள் கலையின் வெளிப்பாடாகவே தோன்றுகிறது. இவரின் கவிதைகளின் உரு - மையம் 1. கவித்வம், 2. உடல் - மனம் விவரணையைக் கொண்ட நிலப்பரப்பு, 3. கன்வு மற்றும் கற்பனை என்று அமைகிறது.

இத்தன்மை பெரும்பாலான கவிதைகளில் நிகழ்வதை வாசிப்பில் அறியலாம். மேலும், மாலதி மைத்ரியிடம் - கவிதைச் செல்லியில் - வெளிப்படுவது உடல் சார்ந்த நிலப்பரப்பு என்பது விவரணையில் தொடர்ந்து நிகழ்கிறது. மேலும் Perfectable Craft என்ற தன்மையும் இவரிடம் பிரமாதமாக அமைந்துள்ளது. அதற்கு அடுத்ததாகப் புனைவுத் தன்மையையும் குறிப்பிட வேண்டியுள்ளது. பெரும் பான்மையான கவிதைகள் புனைகதைத் தன்மையைப் பெற்றிருக்கின்றன. அப் புனைவியல் சார்ந்த கவிதைகளில் உள்ள பல வரிகள் கவித்வத்தைக் கொண்டி ருக்கின்றன.

இவைதான் புனைவுத் தன்மையைக் கவிதைகளாக உருவாக்குகின்றன. இப்படியான வரிகளைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

பழத்தில் ஒளிந்திருந்த காற்று ஆராவாரத்துடன் சுழற்றியடிக்கிறது (பக் 14) காலத்தின் ஏழு முகங்களுடன் ஆடிக் கொண்டிருந்தோம் (பக் 19) ஓர் இலையைக் கூட கிள்ளாமல் (பக் 21) பாதத்தடத்தில் துளிர்க்கும் பசும் தளிர் கண்டு அதிசயித்து நிற்கிறேன் (பக் 22) தென்னைகளுக்கிடையில் ஒளித் தூளிகள் அசைந்து கொண்டிருக்கின்றன (பக் 37) சூரியன் சிரிக்கும் வானம் (பக் 39) மண்ணில் பதியும் பாதச் சுவடுகள் வாய்களாகி என்னை ஊத, குடுவைக்குள் மீன் குஞ்சென வாலடித்து மோதி மோதி நீந்தினாள், எனக்குள் இருந்த குமிழ் இன்று எல்லாம் நிறைந்த பிரபஞ்சம் (பக் 40) என் மனசுக்குள் மட்டும் சப்தமில்லாமல் சுழன்று ஓடிக்கொண்டிருந்தாள் (பக் 47) வெல்வெட் பூச்சிகள் தம்முதுகில் மழைத்துளியைச் சுமந்து திரிகின்றன (பக் 53) பல மலைகள் கடந்து பயண முடிவில் எனக்குள் பாயும் ஆறு (பக் 54) மீனை கடக்கும் நிழல் கொக்கா மேகமாக தெரியவில்லை யாருக்கும் (பக் 58) குழந்தைகளின் புன்னகை போல எங்கும் நிறைந்த கதிரொளி (பக் 70).

இவற்றை - நான் கவிதையில் அல்லது எழுதுதல் முன்பாகக் காணும் - பார்வையின் நுண்மை - என்றே கருதுகிறேன். இவைதான் கவித்வத்தை ஏற்படுத்துகின்றன என்றும் எண்ணுகிறேன். இந்த வகையில் மாலதி மைத்ரியின் கவிதைகள் புனைவுத் தன்மையை மட்டும் பெற்றிருக்காமல் - கவித்வத்தைப் பெற்றிருப்பதாக நினைக்கிறேன். அடுத்ததாக - விவரணையின் மையமாக இருக்கும் உடல் - மனம் சார்ந்தவற்றின் வரிகளைப் பார்க்கலாம் என்று கருதுகிறேன்.

மணலென நொறுங்கும் மனம் (பக் 12) ஆற்றின் ஏற்ற இறக்கத்தோடு மனமும் உடலும் (பக் 16) அறைக்குள் கரையுடைந்த நான் (பக் 13) கசங்கிய துணி குவியல் போல நடந்து

கொண்டிருக்கிறேன் (பக் 14) எதிர்த்திசை மலை அடிவானம் பிரசவித்த பெண்ணெனச் சரிந்து கிடந்தது (பக் 37) முலைகளாய்ப் பிதுங்கும் மரத்தினடியில் (பக் 53) இலைச் சருகாய் மிதக்கும் உள்ளம் (பக் 54) என் ஆன்மாவைப் போன்ற கருத்த கசந்த தேனீரைக் குடித்துக் கொண்டிருக்கிறேன் (பக் 59)

இவ் விவரணை வரிகளில் வெளிப்படுவன்வாக உடல் மற்றும மனம் சார்ந்த புனைவு உள்ளன. உடல் சார்ந்த அடையாளப்படுத்துதல் என்பது தவிர்க்க வேண்டியதாக மாலதி மைத்ரி கூறுவதை நான் ஏற்கிறேன். இதை நான் கவிதையின் குரலாக - உணர்வின் வெளிப்பாடாகவே கொள்கிறேன். உடல் மற்றும் மனம் சார்ந்த விவரணைகளில் கவிதை மேலும் வலுவடைவதாகவே இருப்பதைக் கூற விரும்புகிறேன். மேலும் நாடகீயமாகக் கட்டமைக்கப்படுதல், பால் இல்லாமல் இருத்தல் என்பன கவிதையில் அம்நகமாக பயில்வதில்லை என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். உதாரணமாக, சங்கராபரணி: நான் வளர்ந்த ஆறு, அம்மாவும் மகளும், அம்மா ஆடு ஆகிய கவிதைகளை வாசிக்கும்போது இவ்வாறான அடையாளப்படுத்துதல் வெளிப்படையாகக் கவிதை சொல்லலில் நிகழ்த்தப்படுவதைக் காணமுடிகிறது. இதன் பின் -

பெரும்பான்மையான கவிதைகள் கனவு மற்றும் கற்பனை சார்ந்த புனைவியல் அம்சத்தைப் பெற்றிருப்பதை முன்னரே கூறி இருந்தேன். இப்புனைவியல் அம்சம் தமிழில் புதிய முயற்சியாகவே கருதுகிறேன். அவ்வகையான கவிதைகளாக, கொக்கைக் கவனித்துக்கொண்டேயிரு, அம்மா ஆடு, யானைக் கதை, என் விழிப்பில் பச்சை சூரியன், வார்த்தையின் வாடை, பிரபஞ்ச தியானம், நீருக்கடியில் ஒரு வீடு, பச்சை நகரம், குழந்தையின் கண்ணீர் ஆகிய கவிதைகளைச் சொல்லலாம். இக்கவிதைகளிலும் செய்நேர்த்தி பிரமாதமாக உள்ளதையும் காணலாம். கதைத் தன்மைகொண்ட புனைவியல் கவிதைகள் மாலதிமைத்ரியிடம் பலமாக, நவீனத்துவத்துடன் - கலைத்தன்மையுடன் அமைந்துள்ளதைக் கூறிக் கொள்கிறேன். இந்த Craft இல் அமைகின்ற கவிதைகள் எந்த உறுத்தலையும் அளிப்பதில்லை என்பதையும் நாம் வாசிப்பில் அறியலாம். கவிதைகளை எழுதுவதில் - இந்த Craftness எந்தளவுக்கு முக்கியமானது என்பதை - மௌனப் பாதை என்ற கவிதையில் வரும் - சக்கரம் வேகம் தூரம் காலம் பிரமிப்பு - என்ற வரியில் அறிந்து கொள்ளலாம். இந்த முழுமையானத் தன்மையினைத் தான் நவீன கவிதையில் கண்டடைய வேண்டியதாகிறது.

மேலும் சில - கவிதையாக அமையவில்லை அல்லது எல்லா தொகுப்பிலும் அமையும் பலவீனமாக அல்லது கவித்வம் அற்ற கவிதைகளென்று வேறுமழை, சங்கராபரணி, மீன்காரி, மழைபோகும் பாதை, மறைமுக அரங்கம், வார்த்தைகளால் என்ன செய்வீர், அகதி, பாம்புகளுடன் சில பொழுதுகள், கதவு தட்டும் வேதாளம, குருட்டு வலி, கருப்பாயி, காதல் கடிதம், இருளும் ஒளியும், மந்திர கணம், கல்யாணமும் கட்டு மரமும் ஆகியவற்றைச் சொல்லலாம். ஒருவேளை இக்கவிதைகளில் உள்ள செய்நேர்த்தியின்மை, கவித்வமின்மை, பூர்த்தியின்மை ஏற்கனவே உள்ள முன்மாதிரிகள் ஆகியவை காரணமாக அமையலாம் என்று நினைக்கிறேன். இதை மறுப்பவர்கள் - இதை என் சொந்த அபிப்ராயமாகவே கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ராணிதிலக்

ராமச்சந்திரன்

நதியின் அலையுடலை மிதந்து கடக்கும்
விழி நேரா பறவையொன்றின் நிழல்-என்
செவி நேரா சிறகசைப்பின் ஒலி

அறிதல் துறத்தலில்
பெருநிறை தேடி
அணுக்களாய் இறும் புலன்கள்

முடிவின்மையின் அச்சம்படர்ந்த வெளியில்
தொடர்ந்து எஞ்சியபடி
நானாய் ஒரு கருந்துளை

ப்ரவீண்

மிதக்கும் இருக்கைகளின் நகரம்

சங்கர ராமசுப்பிரமணியன்

சங்கர ராமசுப்பிரமணியனின் அறிமுகம் · கவிதை வாசிப்பில் -. புதிய பார்வையில் வெளியான நம்பிக்கையூட்டும் கவிஞர்கள் என்ற தலைப்பில் வெளியான கவிதைகள் வழியாக நிகழ்ந்தது. அவை யாவும் எந்த சலனத்தையும் எனக்கு ஏற்படுத்தவில்லை. சொற்ப ஆண்டுகள் கழித்து அவருடைய கவிதைகள் அகம் - புறம் மற்றும் அட்சரம் இதழில் வெளியாகின. அக்கவிதைகள்தான் நிறைவையும் நம்பிக்கையுமளித்தன. (தொகுப்பிற்குப் பின்பான இப்போதைய கவிதைகளும் நிறைவை அளிக்கவில்லை)அக் காலத்தில் நான் போர்ஹேயின் கவிதைகளைப் படித்துக் கொண்டிருந்தேன். தீராக் காதல் என்ற தலைப்பிலான இவரின் கவிதைகளின் வரிகளாக கண்ணாடி நீலச் சொரூபமாய்த் தளும்ப ஆரம்பித்தது என்ற வரி போர்ஹேயின் **The Violin errect into the Blue** என்ற வரியை நினைவுப்படுத்தியது. இவ்வரியில் அடைந்த உணர்வைச் சங்கரின் வரியிலும் அடைந்தேன். இவ்வரியை போர்ஹேயின் வரிக்கு இணையானதாகவே கருதுகிறேன். இதே போன்று நம் நந்தவனங்கள் கடலில் அமிழ்ந்துவிட்டன. ஒரு பறவையின் முணுமுணுப்புக்கும் நான் உதிர்க்கும் சாம்பலும்

விழுந்துகொண்டிருக்கிறது ஒரு மாபெரும் ஆஷ்ட்ரேக்குள் என்ற வரிகள் என்னை உற்சாகப்படுத்தின.(காஃப்கா உலகத்தை ஆஸ்ட்ரேவாகக் கண்டிருக்கிறார்) இதைத் தொடர்ந்து இவரின் கவிதைகள் மீது தனிக் கவனம் செலுத்தி வாசித்து வரும் வேளையில் - இவருடைய கவிதைத் தொகுப்பு வெளியாகியுள்ளது.

இவருடைய தொகுப்பை வாசித்தபோது சில விஷயங்கள் தெரியவந்தன. தனக்கான பிரத்யோக மொழியையும், வடிவத்தையும், ஆளுமையையும், சொல்லல் முறையையும் அவர் பெற்றிருப்பதை - அவரின் கவிதைகள் வழியாக வெளிப்படுகின்றன. சங்கரின் கவிதைகளை வாசிக்கும்போது ஒருவித போதைத் தன்மையும் வசீகரமும் தொடர்ந்து இயங்குவதை உணர்கிறேன்.

இவரின் கவிதைகளில் இப்பொழுது எழுதப்பட்டு வரும் மற்றவர்களின் கவிதைகளின் தன்மைகளுக்கு மாறான - வேறான குணாம்சத்தைக் காண்கிறேன். இதைக் கவிதையின்மை என்றோ, அ - கவிதை என்றோ சொல்லலாம். இவர் கவிதைகளின் மையம் - அதில் வெளிப்படும் அவரின் அல்லது கவிதைச் சொல்லியின் பதட்டமான - விலகலான மனோபாவத்தின் சிறப்பம்சமாக தோன்றுகிறது. அதற்கான சாட்சிகள் இருவரின் கவிதைகளில் உள்ளன. மேலும் பதட்டமான மனோநிலையைப் பற்றிய பல்வேறு வரிகளை நான் அட்டவணையிடப் போவதில்லை. வாசிப்பவர்கள் அதை சிகரெட் துணையுடன் ஒரு குளிர் இரவு, விருட்சங்களை உன்னுடன் அழைத்துச் செல், இன்னும், சாபம், பிராயம் போன்றவற்றில் வாசித்தே உணரலாம். இவற்றில் மன அதிர்வு - சலனம் உள்ளதையும் வாசிப்பில் அறியலாம்.

இத்தொகுதிக் கவிதைகளில் பால்யம் பற்றிய நினைவுகள், நினைவுக் குறிப்புகளில் ஒளிந்துள்ள சூட்சுமம், கனவு மீதான வசீகரம், பெண்களின் மீதான தீராத காதல், சின்னஞ்சிறு குழந்தைகளின் மீதான பரிவும் காதலும் என்று உள்ளதைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இதேபோன்று - நகரத்தின் மீது மேகத்திற்குச் சற்றுக் கீழே முளைத்திருக்கும் நீண்ட அழகிய சவப்பெட்டியை இன்று நான் பார்த்தேன், இந்த அந்தியின் துக்கத்தை எடுத்து நகர்கிறேன், நினைவின் குறிப்பிலிருந்து வயலின் ஒன்று துடிக்க நெடுஞ்சாலை மரம் சூழந்த வனமாகும், படகு இப்போது தனியாக நின்று கொண்டிருக்கிறது, அவள் நிழல் இரவெங்கும் நடனமிட்டது கடலின் மேற்பரப்பில், அவர்களின் நினைவிற்கு நடுவில் ஒரு சிறிய நாய் குட்டி ஸ்தூலமாய் ஓடிக்கொண்டிருக்கிறது, நரை படர்ந்து சாய்வு நாற்காலியில் உடல் சாய்ந்திருந்தான் அவன், வெளியில் சத்தங்கள் கூடிக்கொண்டே வருகின்றன, குரல்களையும் முகங்களையும் பொருத்தவே இயலாமல் ஏமாற்றமடைகிறீர்கள், மஞ்சள் ஒலியில் இலைகள் அதிர்கின்றன, இரண்டு ஆயுளுக்கான நூலை ஊசிகளில் கோர்க்கிறாள், அவள் கொலுசுகள் உதிர்கின்றன பின்மாலைப் பொழுதின் காலியான முற்றங்களை, சாயங்காலம் உன் மீது படரப் பேசிக் கொண்டிருக்கிறாய், காது மடலின் மேல் நெளிந்து ஊர்ந்து அவன் விரல்கள் நகர ஆரம்பித்தன போன்ற வரிகள் கவிதைகளைச் செழுமைப்படுத்தக் கூடியவையாக விளங்குகின்றன. இவை யாவும் பார்வை நுணுக்கத்தின் வெளிப்பாடாக உள்ளன.

கவிதையின்மை என்ற செயல்பாட்டில் உள்ள மாலதி; மரணம் பற்றிய மூன்று குறிப்புகள் (இரண்டு குறிப்புகள் கொண்ட கவிதையாக உள்ளது. மூன்றாவது இல்லை) போன்ற கவிதைகள் நிறைவின்மையைக் கொண்டிருக்கின்றன. செய்நேர்த்தியை மட்டும் நம்பி இருக்கும் ஒரு சிறுமியும் மூன்று சிறுவர்களும் என்ற கவிதையும் இதற்குச்சேர்த்தி. அபூர்த்தியான புனைவுச் சாயலைக் கொண்டுள்ளன. விரியும் நகரின் வரைப்படம், கார்ட்டூன், அம்மா நீங்கிய அறையில், கடலும் கடல்

சார்ந்த இடமும், அதிரும் வனம், உறைய வைத்தல், வரைபடத்தில் விட்டுச்சென்ற சிறகு போன்ற பல கவிதைகளை இவற்றிற்கு உதாரணமாகக் காட்டலாம்.

சமீபகாலக் கவிதைகள் புனைகதைத் தன்மையுடன் இருக்கின்றன. உரைநடைக்கும் கவிதைக்குமான பெருத்த வேறுபாடு கவித்வம் என்ற குணாம்சத்தில் நிகழ்கிறது - நிகழ்த்தப்படுகிறது. இக் கவிதைகளை உரைநடைச் சிதறல் களாகவே கொள்ளத் தோன்றுகிறது. இதை வாசிப்பில் உள்ள வசீகரத்திலும், போதைத் தன்மையிலும் இருந்து - விடுபட்டபோது - உணரமுடிகிறது. புனைகதைகளின் கதைச்சுருக்கச் சாயல் - இவரின் பெரும்பாலான கவிதைகளில் பலமெனக் கருதப்பட்டு இயங்குவதாகத் தெரிகிறது.

இத்தகைய கதைச் சொல்லல் விவரணை தொடக்கத்திலிருந்தே அலுப்பூட்டலாகத் தொடர்கிறது. இதைப் பலம் - பலவீனம் என்று நான் சொல்ல வரவில்லை. இத்தன்மை இவரிடம் இருந்து விடுபட வேண்டியது அவசியமாகிறது. இது என் தனிப்பட்ட அபிப்ராயம்தான். இவற்றைத் தவிர்த்துப் பார்க்கும்போது - சங்கர ராமசுப்பிரமணியன் புனைகதைச் சாயல் எழுத்தில் உள்ள உரைநடை கவிதை வடிவத்தின் சில வரிகள் மட்டுமே சலனத்தை அளித்துக் கொண்டிருப்பதை - இங்கு மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவு அழகிய நேர்த்தியோடு தொகுதியை மருதா வெளியிட்டுள்ளது என்பது, கவிஞனை, கவிதைகளை உற்சாகப்படுத்தும் செயலாகும். மருதாவுக்குப் பாராட்டுகள்!

ராணிதிலக்

காலச்சுவடு பதிப்பகம்

ஆகஸ்ட் 2002 வெளியீடு

புதுமைப்பித்தன் கட்டுரைகள்

பதிப்பாசிரியர்: ஆ.இரா. வேங்கடாசலபதி

இடம் பெறும் படைப்புகள்

கட்டுரைகள், மதிப்புரைகள்
அதிகாரம் யாருக்கு?, பேஸிஸ்ட் ஜடாமுனி,
கப்சிப் தர்பார், ஸ்டாலினுக்குத் தெரியும்

- இதுவரை வெளிவராத பல கட்டுரைகள்
- நம்பகமான பாடங்கள்
- காலக்குறிப்புகள், புனைபெயர்கள் போன்ற பதிப்புக் குறிப்புகள்
- தகவல்கள் நிறைந்த விரிவான பதிப்பு முன்னுரை
- இதுவரை வெளிவராத புதிய புகைப்படங்கள்

“வலிகளின் கதையாக நீளுகிறது வாழ்வு”

“சொல் என்றொரு சொல்”

பிரதியை முன்வைத்து
க. பஞ்சாங்கம்

இது யாதார்த்த எழுத்து; இது பின்-நவீனத்துவ எழுத்து; இல்லை; இல்லை; யதார்த்த எழுத்து அழிந்து விட்டது; தமிழில் பின்-நவீனத்துவ எழுத்து ஒன்று கூடத்தோன்றவில்லை; என்றெல்லாம் பெயர் சூட்டுவதன் மூலமாகவும் அபிப்ராயங்களை அள்ளித் தெளிப்பதன் மூலமாகவும் மட்டுமே விமர்சன வெளியை திரப்பிக்கொண்டிருக்கும் தமிழ்ச்சூழலில் வந்துள்ள ரமேஷ்-பிரேமின் சொல் என்றொரு சொல் என்ற பிரதி, தன்னுள் ஒற்றை மனிதராக நுழையும் வாசகரை கூடப் பல்வேறுபட்ட மனிதராகச் சிதைத்து உருவாக்கக்கூடிய நுட்பமான எழுத்துமுறை கொண்டதாக விளங்குகிறது. இந்தப் பிரதிக்குள் நுழையும் வாசகர், தனக்கான கதையைத் தானே எழுதிக்கொள்ள வேண்டிய பிரசவ வேதனைகளையும் வலிகளையும் எதிர்கொள்வதிலிருந்து தப்பித்துவிட முடியாதபடி வார்த்தைகள் பின்னங்களாகவும் வலைகளாகவும் வார்க்கப்பட்டிருக்கின்றன; கதை சொல்லி என்ற ஒற்றை மனிதர் இறந்து போகிறார்; ஒவ்வொரு வார்த்தையும் கதைகளாகின்றன. ஒவ்வொரு கதையும் வார்த்தையாகின்றன.

கழுமரத்திலிருந்து தப்பிவந்த 'அதீதன்' எனப்படும் 'ஆதிச் சமணனின்' கதையைச் சொல்வது போலவும், அவன் எழுதியதாகக் கருதப்படும் “உடலில் வலியும் உணர்வில் இசையும்” என்ற பிரதி குறித்த உரையாடல் போலவும் ஒரு சரடை அமைத்துக் கொண்டு பூமிப்பரப்பெங்கும் சிதறிக்கிடக்கும், விளிம்புநிலை மரபுகளையும் இன்னும் தக்கவைத்துக்கொண்டு மூச்சுமுட்ட மல்லாடிக் கொண்டு கிடக்கும், தொன்மையான தமிழினத்தின் வரலாற்றிற்குள் புதைந்து கிடக்கும் புனைவுகளையும், அவ்வினத்தின் புனைவுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் வரலாற்றினையும், கையில் சிக்கிய சிட்டுக் குருவியின் உயிர்த்துடிப்புடன் பிடித்துத் தருகிறது இந்தப் பிரதி.

அ-பூர்விகம் உணர்ந்த காதை; ஆ-நூல் பொருள் உணர்ந்த காதை என ஔவரைக்குமான ஒரு வரிசையிலும்; அடிக்குறிப்பு என்கிற முறையில் ஒரு வரிசையிலும், 1-உடலில் வலியும் உணர்வில் இசையும் என்ற படைப்புக்கு அரூபதர்சினி எழுதிய ஆய்வுரையின் ஒரு பகுதி; 2-அரூபதர்சினி தனது

நண்பனிடம் சொன்னது என்ற முறையில் 12-வரைக்குமென ஒரு வரிசையிலுமாக மூன்று பாதைகளைப் புதிர் வட்டமாக அமைத்துக் கொண்டு பிரதி நகர்கிறது; முதல் வாசிப்பில் மிரட்டுகின்ற பிரதி, இரண்டாவது வாசிப்பில் நேர்கோட்டுக் கதைகளை மட்டுமே வாசித்துப் பழகிய வாசகனுக்கும்கூட, அவனுக்கேற்ப வளைந்து கொடுக்கக் கூடியதாக மாறுகிறது.

வரலாறு புனைவு; நடப்பு கனவு; யதார்த்தம் புராணம்; படைப்பாளி வாசகன்; அறியாமை அறிவியல் என்றெல்லாம் மொழிவழி இயங்கும் மனத்தின் பாகுபாடுகள் அழிக்கப்பட்டு ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்துமாகப் பிரதி நகர்கிறது; தனது நகர்விற்கு வரலாறு எழுதும் நடை, பிரசங்க நடை, ஆராய்ச்சி நடை, உடுக்கை அடிப்பவன் நடை, சித்தர்கள் நடை, வாசகரே விடை எழுதிக் கொள்ளும்படியான வினா விடைநடை, உருவக நடை, விமர்சன நடை, புள்ளிவிவர நடை, கவிதை நடை, தத்துவார்த்த விசாரணை நடை என மொழியின் அனைத்தயச் சாத்தியப்பாடுகளையும் பயன்படுத்திக் கொள்ளுகிற பிரதியானது, மூவிடம், முக்காலம், இருதிணை, ஐம்பால் முதலிய மொழிப் பிரிவினைகள் எல்லாவற்றையும் கலைத்துப் போட்டு விளையாடும் ஆடுகளமாகத் தன்னளவில் இயற்கைபோல "சிவனேனு" இருக்கின்ற ஒரு பாவ நிலையில் தன் இருப்பை மேற்கொண்டுள்ளது; ஆனால் தன்னைத் தீண்டுகிறவர் மேல் தீயாய்ப் பற்றிக் கொள்ளும் 'கங்குகளோடும்' விளங்குகிறது.

''பார்வையாளர்களாக இருப்பதும் ஒரு கட்டத்தில், பார்வையாளர்களாக நடிப்பது போலத்தான் ஆகிவிடுகிறது" (பக்மூ65) என்ற வாசிப்பு மனத்திற்குள்விழுகிறது; விழுந்தவுடன், ஆசிரியனாக இருப்பதும் ஒரு கட்டத்தில் ஆசிரியனாக நடிப்பது போலத்தான் ஆகிவிடுகிறது; வாழ்வதாக இருப்பதும் ஒரு கட்டத்தில் வாழ்வதாக நடிப்பதுபோலத்தான் ஆகிவிடுகிறது... இப்படித் தொடர்ந்து வாக்கியங்களை வாசகனுக்குள் உற்பத்தி செய்யும் "மூலப்பொருளாக" அத்தொடர் அமைர்ழ விடுகிறது; இவ்வாறுபிரதி முழுவதும், வாசகனையும் வார்த்தை உற்பத்தியாளனாக உருமாற்றும் வாசகங்கள் ஏராளம் வடிவமெடுத்துள்ளன. ரமேஷ்-பிரேம் எழுத்து முறையின் மாபெரும் சாதனையென இந்தத்தன்மையைத்தான் முதலில் சுட்டிக் காட்டத் தோன்றுகிறது.

பிரதி ஓரிடத்தில் கூறுவது போல. பூமியின் 95 மனிதர்கள் குறித்துச் சரித்திரத்தில் பதிவுகளே இல்லை (ப-261) என்பது எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்கு ஆதிக்க சக்திகளின் மொழியாடலில், மொழியின் 95 வார்த்தைகள்-பெருவாரி மக்களின் வாயில் சர்வசாதாரணமாக விளையாடும் வார்த்தைகள்-கெட்ட வார்த்தைகள், கொச்சை வார்த்தைகளென முத்திரை குத்துப்பட்டு விலக்கப்பட்டு வருவதும் உண்மை. பிணம், புணர்ச்சி, குறி, யோனி, சிறுநீர் எனவரும் தடை செய்யப்பட்ட வார்த்தைகள், பிரதியில் தாராளமாகக் கையாளப்படுகின்றன. ஆனால் அந்த வார்த்தைகள் பல்வேறு குறியீடுகளாய், பல்வேறு அர்த்தத் தளங்களை அடர்த்தியாய் எடுத்துரைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பிரதியோடு அணுக்கமாய் நகர்கிற வாசகனால் உணராமல் இருக்க முடியாது. இது போலவே "இருள் நகரத்தின்" ஓரத்தில் வாழும் உடலை விற்பவர்கள், மனநோயாளிகள், கொலை செய்பவர்கள், ஊனமுறுத்துபவர்கள, நகரத்துப் பொருட்கள்ள அடித்து நொறுக்குபவர்கள் முதலியோர் வாழ்வு எவ்வளவு உயிர்த்தன்மை ததும்பியதாக நகர்கிறது என்பதையும், அதிகாரக் கட்டளைகள் தள்ளிவைத்தவைகளை எல்லாம் இவர்கள் எப்படி இயல்பாகக் கடைப்பிடித்துப் பாட்டுப்பாடி

மகிழ்கிறார்கள் என்பதையும் பிரதி பதிவு செய்துள்ளது...

"ஆபாசங்களை அழகென்றார்கள், அழகுகளை அழுகிப்போனவை என்கிறார்கள்.

தேவதைகளின் சிலைகளின் மீது சிறுநீர் கழித்தார்கள். நாற்சந்திகளில்

கம்பீரமாக எழுந்து நிற்கும் தேவதூதர்களின் சிலைகளைத் தகர்த்தார்கள். வேத

கன்னிகளைப் புணர்ந்து உங்கள் உடலை இதன் மூலம் விடுதலை செய்கிறோம்

என்கிறார்கள். நகர இனத்தவர்கள் அனைவரும் ரத்தம் பருகுகிறார்கள், நாங்கள்

சீழைப் பருகுகிறோம் என்கிறார்கள்.... பதுக்கப்பட்ட செய்திகளைச்

சுவரொட்டிகளாக ஒட்டினார்கள்; தடுக்கப்பட்ட வார்த்தைகளை உரக்கக்

கூவினார்கள்." - (ப-189)

இவ்வாறு கலகக்குரலாக வெளிப்படும் பிரதி, மையத்தில் வாழ்பவர்களின் வாழ்க்கையைப் பல கோணங்களில் கேலி செய்கிறது; அடிமைகள் என முகத்தில் அறைகிறது; நகரம் இந்த அடிமைகளால் நெரிசலுண்டு கிடக்கிறது; இந்த அடிமைகள் இறந்த காலத்தில் வாழ்கிறார்கள் என்பதைப் பிணங்களோடு புணர்ந்து வாழ்வதாக உருவகம் செய்கிறது; "ஒவ்வொரு மனச் ...த்திற்குள்ளும் எத்தனையோ பிணங்கள்" (ப-83) அவை மட்டுமா, சேர, சோழ, பாண்டிய, பக்தி, கோயில் எனப் புராதன ஆவிகளோடு ஆவிகளாய் வாழ்ந்து மடியும் நிகழ்கால வாழ்வும் வலியும் பக்கக்கிளைகள் முளைத்து வளரும்படியான ஒரு தளத்தில் பிரதிக்குள் புதைதது வைக்கப்பட்டிருக்கின்றன; விலங்கு நிலையைவிடக் கேவலமாகிப் போன இந்த மனிதநிலை பிதிக்குள் மிக நுட்பமாக எடுத்துரைக்கப்படுகின்றது:-

மிருகமாக இருந்தபோது செயல்கள் நிகழ்காலம் சார்ந்தனவாக இருந்தன; பசிக்காக மட்டுமே கொலைகள் நடந்தன ; அனைத்துச் செயர்களுக்கும் உடனடிக் காரணங்கள் இருந்தன; ஆனால் மனித நிலையில், செயல்கள் எல்லாம் இறந்தகாலம் சார்ந்தனவாகவும் இல்லாத எதிர்காலம் சார்ந்தனவாகவும் மாறிவிட்டன. கொலை நடக்கிறது, ஆனால் காரணமில்லை. லட்சக்கணக்கான மனிதர்களை உலகப்பரப்பில் கொன்று குவிப்பதன் மூரமாகத்தான் தன்னைச் சுதந்திரமுடையவனாக உணர வேண்டிய கட்டாயம் மனிதநிலைக்கு நேர்ந்திருக்கிறது; வெறுப்பால் அச்சத்தால் வெறியால் நிரப்பப்பட்ட உயிராய்ப் போனான் மனிதன் என்பது மனிதனால் உருவானதாக இல்லை: அவனால் அறியப்படாத வேறு வெளியினால் வேறுகாலத்தினால் வேறு மொழியால் அவன் சமைக்கப்படுகிறான்; இவன் நீண்ட நெடும் சரித்திரத்தின் ஒரு துடிப்பு மட்டுமே; மொழியின் திரண்ட ஒரு அதிர்வு மட்டுமே- இப்படியாக மனிதர்களின் பல நிலைகள் பிரதிக்குள் பதிவாகியுள்ளன.

மனித வாழ்வை இந்த அளவிற்குச் சிறுமைப்படுத்தியதில் பெரும்பங்கு வகித்த வைதீக மரபைப் பிரதி அறிபுதமான ஒரு முறையில் கேலியும் கிண்டலும் செய்து தகர்த்தெறிகிறது; வைதீக மரவு ஒழுங்கமைக்கும் குரு-சிஷ்யன் பரம்பரை மரபு, பூஜை, மந்திரம் சடங்கு, சாஸ்திரம், யோகம், தவம்,ஆஸ்ரமம், அவதாரம் முதலிய அனைத்தையும் கேலிக்கு உட்படுத்துகிறது பிரதி. 'குருவைத் தேடிய காதை' என்ற பகுதியில் குருவைத் தேடிப் போகிறான் சிஷ்யன்; போகும் வழியில் எல்லா உயிர்களிலும் உறையும் ஜீவன் ஒன்றே எனத் தெளிந்த ஞானம் பெற்றவன் ஆதலால்,

புணர்வதற்குத் தயாராக இருக்கும் நாயோடு 18 நாட்கள் போகம் அனுபவித்துவிட்டு மந்திரம் ஜபித்துக் கொண்டிருக்கும் குரு இருக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்கிறான். அங்கே தவசிக்குத் தொண்டு செய்யும் "சிறுமியின்" மர்மப் பிரதேசங்களைத் தடவ, குறி விறைத்து எழுந்து கொள்கிறது; அந்த நேரம் பார்த்து குரு அழைக்கிறார். இவன் குறி பொத்திக் கூனி நிற்கிறான். அபச்சாரக் காட்சி கண்டு கோபமுற்ற தவசி சாபம் இடுகிறார் "நீ முதலில் யாரைக் காமுற்றாயோ அந்த உருவில் மாறக் கடவது" எனச் சபிக்கிறார்; உடனே சிஷ்யன் நாயாக மாறிவிடுகிறான்; தவயோகி மனஞ்சஞ்சலமுறுகிறார்; நாயைக் காமுற்றிருக்கிறான்; நாயாக மாறிவிட்டான் என்பதற்காக அல்ல; தன் ஆஸ்ரமத்தில் இருக்கும் சிறுமியைக் காதலித்திருப்பான்; தமக்கும் தபோவனத்திற்கும் இன்னொரு பெண் கிடைப்பாள் என்ற கணக்குத் தப்பாகி விட்டதே என்பதற்காகத்தான். இன்னும் கதை கேலியும் கிண்டலுமாகத் தொடர்கிறது. ரமேஷ்-பிரேம் எழுத்துக்களில் ஊசிமுனையாய்க் குத்தும் நக்கலும் கேலியும் இல்லை என்ற குற்றச்சாட்டு பிரதியிலுள்ள இந்தப் பகுதியினால் இல்லாமல் ஆக்கப்படுகிறது.

பிரதிக்குள் சிறுகதை, நாடகம், கவிதை என்ற இலக்கிய வடிவங்களும் புதையுண்டு கிடக்கின்றன. அந்த வகையில் கிழக்குக் கடற்கரைச் சாலையைக் கடக்க முயலும் மரவட்டை குறித்த கதை, பிரதியையும் வாசகனையும் கனமாக்கப் போதுமான ஒன்றாக விளங்குகிறது; மரவட்டைகள் சக்கரங்களுக்குள் சிக்கி அடையாளம் தெரியாமல் கூட அழிந்து போகும் யதார்த்தத்தைக் கண்டு குலுங்கி குலுங்கி அழுகிறான் சிறுவன்; ஒரு நாள் அந்த மரவட்டை வெற்றி பெற வேண்டுமென்ற ஆசை அவனுக்குள் வெறியாகி விடவே, அவனும் அந்தச் சாலைக்குப் பலியாகிறான்; கிழக்கு கடற்கரைச் சாலை, மாட்டு வண்டி போன காலம் போல் இல்லை. இந்த மாற்றங்களைக் கணக்கில் கொள்ளாத எந்த இனமும் தனிமனிதனும் கூட வரலாற்றில் தடம் தெரியாமல் மறைந்து போக வேண்டியதுதான்; சோக நாடகங்களுக்குக் கருவாக வேண்டியதுதான்; பிரதியின் வாசிப்பில் பல இடங்களிலும் வாழ்தல் போலவே வலியைத் தவிர வேறெதையும் உணர முடியவில்லை.

கௌதம புத்தரின் இறுதிக் கணங்களைச் சித்தரிக்கும் பகுதி, ஒரு வரலாற்று மனிதரின் நிகழ்வுகளை, எந்த அளவிற்குப் புனைவுகளாகக் கட்ட முடியும் என்பதற்குச் சாட்சியாக நிற்கிறது; பூரண சாந்தத்துடன் நிர்வாண நிலை அடைய, தனது கடைசிக் கணங்களைப் பயன்படுத்த துடிக்கிறார் புத்தர்; ஆனந்தரின் கைகளைப் பற்றிக் கொண்டு, தன்னிடமிருந்த ஒரே ஒரு இரகசியத்தையும் அவரிடம் இடப் பெயர்ச்சி செய்கிறார்; அதன் மூலம் முழுமையாக வெறுமையுற்று சூன்யமானதாக உணர்கிற நிலையில் "நான் நிர்வாணமடைகிறேன்" என உரைத்தபடி இமைகளை மூடுகிறார். அந்த ஒரே ஒரு ரகசியமென்ன? புத்தன் பெற்ற பெருஞானமெனச் சொல்லப்படும். மகாதம்மத்தின் பேரொளியெனக் கூறப்படும் "ததாகத மகா தீர்க்கம்" அவருக்குள் பேரின்பம் அளித்தது உண்மை; ஆனால் அது குறித்துப் பிறரோடு ஆடிய வார்த்தையெல்லாம் வெற்று வார்த்தைகள்; பொய்மைக் கூட்டங்கள் :- "அதை விளக்கவும் உரைக்கவும் நான் முயலும் ஒவ்வொரு கணமம் அது எனது மறதிக்குள் ஒளிந்து கொள்கிறது. எனது வாக்குகள் அனைத்தும் அதனுடன் ஒளிந்து விளையாடும் ஆட்டத்தின் பாட்டைத் தடங்கள்தான் ஆனந்தரே" (ப - 216) இதுதான் அந்த ரகசியம்; புத்தன் தான் நிர்வாணமடையத் தடையாய் இருந்த ரகசியத்தை இடப்பெயர்ச்சி செய்து விட்டுத் தப்பித்துவிட்டான்; ஆனால் மனித இனத்திற்கு எங்கே விடுதலை? புத்தன் வார்த்தைகளில் கட்டிய

பொய்மைகளிடமிருந்து எப்பொழுது விடுதலை? இப்படி மகா வாக்கியங்கள் வார்த்தெடுத்த புத்தனின் வரலாற்றைப் புனைவாகக் கட்டுவதன் மூலம் மகாவலிகளுக்குள் கொண்டு வந்து நிறுத்துகிறது பிரதி.

இப்படி வரலாற்றைப் புனைவாக எழுதிக்காட்டுவது போல, அர்த்தநாரீஸ்வரர் என்ற புனைவை வரலாறாக எழுதிக் காட்டுகிறது பிரதி. "கன்னிமுலையம்மன்" என்ற சிறு தெய்வ வழிபாட்டின் கதையைச் சொல்வது போலச் சொல்லி, ஆணாதிக்கச் சமூகம் பெண்ணைத் தன் கட்டுக்குள், கண்காணிப்பு எல்லைக்குள் வளைத்துக் கொண்டு வந்த வரலாற்று நிகழ்வின் விளைவுதான். அர்த்தநாரீஸ்வரர் என்ற புனைவு உருவாவதற்குக் காரணமெனக் கதையாடுகிறது பிரதி. பார்வதி/சிவன் என்ற பெருந்தெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டிலிருந்து வடிவமைக்கப்பட்டதுதான் என்ற ஆராய்ச்சி உண்மையும் கதையாக்கப்பட்டுள்ளது இந்தப் பகுதியில் அமைந்துள்ள வார்த்தையாடலின் வளமும், கதை கூறுதலின் திறமும் வாசகனைப் பிரமிக்க வைக்கக் கூடியவைகளாகும்.. ஒரு பிரதியை உருவாக்குவது என்பது மனித வாழ்வு குறித்த தத்துவ சிந்தனைகளின் தொகுப்பு; மேம், மனித இருப்பிற்கான வரலாற்றில் சிந்திய ரத்தத்தின் தொகுப்பு; மேலும் எந்த அளவிற்குக் கூர்மையாகவும் நுட்பமாகவும் நிகழ்காலம் முழுவதையும் ஓயாமல் செலவழித்துப் பணிபுரிய வேண்டிய வேலைப்பாடு மிக்கது என்பதை வாசகன் பக்கங்கள் தோறும் உணர்ந்த வண்ணமே நகர வேண்டியதிருக்கிறது.

மொத்தத்தில் நவீன சமூகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நிகழும் அணைத்துக் கூற்றுகளையும் உரையாடல்களையும், தனது எழுத்துலகில் நடக்கும் அரசியல் விளையாட்டுக்களையும், விஷஊசி உலவும் அதிகார விளைவுகளையும் ஒன்று விடாமல் பிரதிக்குள் கொண்டு வந்திருப்பதானது, "பிரதிக்கு வெளியே ஒன்றும் இல்லை; நீயுமில்லை; நானுமில்லை" என்று வாசகனை உணர வைக்கும் அளவிற்குப் பயன்படுகிறது. "எந்தவொரு மனிதனின் நகர்வும், எழுதப்பட்ட பிரதியின் ஏதோவொரு வாக்கியம் மட்டுமே" எனக்கூறி விடுகிறது; மனிதர்கள் உச்சரிக்கும் வாக்கியங்கள், வார்த்தைகள் அனைத்தும் தொலைக்காட்சி, திரைப்படம், வானொலி, பத்திரிக்கை முதலியவற்றிலிருந்து "கத்தரித்து எடுத்துக்" கொள்ளப்பட்டவைகளே என்ற உண்மைகளை உரக்க உரைக்கிறது. "யாருடைய பேச்சும் அவருக்குச் சொந்தமற்றதாக இருக்கிறது" "இருத்தல் அல்ல, பாவித்தல்தான் நிர்வாணம்; ஆதல் அல்ல ஆதலுக்கான பாவனை; பாவனைக்கான தயாரிப்பு" இதுதான் மனித ஜீவிதம் என வலி ஏற்படும்படிக் கூறுகிறது பிரதி - "கூடைகளில் வைத்து ஆற்றில் விடப்பட்ட சிசுக்கள் நாம்" என்கிறது பிரதி; கனியன் பூங்குன்றனார் இன்றைய நவீனத் தமிழில் வந்து பேசுவது போல் இருக்கிறது; நாம் தேர்ந்தெடுக்காதது நமது பாதை; வாக்கியப் பிரவாகத்தில் அடித்துச் செல்லப்படுகிறோம்; நம் மூலம் அது கடந்து செல்லுகிறது அவ்வளவுதான். அப்படி வாசகனை மகாவலியோடு மௌனமாக நிறுத்துகிறது பிரதி. நாங்கள் வலிகளைப் பற்றிப் பேசுகிறோம். வலிகளைத் தவிர எதுவுமற்ற மொழியில் பேசுகிறோம்" (ப - 57) என்பதற்கேற்ப மாறி மாறி வலிகளின் கதையாகவே பிரதி தொடர்கிறது. "கவிதையும் புரட்சியும் அற்றுப் போனதற்கான காரணங்களைத் தேடி அலைவதுதான் இன்றைய தலைமுறைக்கானது" என்று தான்யா கூறிச் சிரிக்கும் போது நவீன மனித வாழ்வின் ஒட்டுமொத்த வலியையும் ஒரு மாத்திரைக்குள் அடக்கித் தருவது போல் உணரமுடிகிறது. இறுதியில் "நாளந்தா" எரிகிறது; குழந்தைகள், புலிவாலோடு பிறக்கும் தென்புலத்

தீவில் "நூலகம்" எரியத் தொடங்குகிறது; தமிழினத்தின் குறியீடாக வரும் நன்மொழித்தேவன் திடுக்கிட்டு எழுகிறான்; தனது உடைவாளைத் துறவிகள் மடத்திலேயே விட்டுவிட்டு வந்ததை அப்பொழுதுதான் அறிகிறான்: என்பதோடு இந்த நாவல் முடிகிறது. மடங்கள் உடல் வீரத்தை உறிஞ்சிவிட்டன; உடலுக்கு அதற்குரிய இடம் இல்லாதபடிப் பார்த்துக் கொண்டன; தந்திரமும் சூழ்ச்சியும் சதியும் அதிகாரமும் உற்பத்தி செய்யப்படும் இடங்களான மடங்களின் மூளைக்க முன்னால் இனிநாம் என்ன செய்யப் போகிறோம்? பிரதியில் அதீதனைக் குறித்து இப்படியொரு வாசகம் வரும்:

'பாவம் அதீதன்; அவனுக்கு வலியைத்தவிர வேறெதுவும் தெரியாது; பாவம் அதீதன்; அவனுக்கு வலியைத் தவிர வேறெதையும் பிறருக்குத் தரவும் தெரியாது'.

இதுதான் நம் நிலையா? இப்படிப் பல வினாக்களோடுதான் இந்தப் பிரதி கட்டப்பட்டிருப்பதாக உணர்கிறேன். வினாக்களுக்குள் இயல்பாகவே இருக்கும் 'புதிர்த் தன்மைதான் இந்தப் பிரதிக்கு மாபெரும் இடத்தைப் பெற்றுத் தருகிறது எனக் கருதுகிறேன். இன்றைய தமிழ் சூழலில் பிரதியாக்கத்தில் 'நம்பர் ஒன்' என்கிற தளத்தில் இந்த இரட்டையர்கள் இயங்குகிறார்கள் என்பதைச் சொல்லாமல் முடிக்கவிடாதபடி இந்தப் பிரதி நம்மைக் கட்டாயப்படுத்துகிறது.

சொல் என்றொரு சொல்
ரமேஷ் - பிரேம்
வெளியீடு : காவ்யா, பெங்களூர், பக் லி 315, விலை ரூ. 125.

மதுரையில் நல்லதோர் புத்தக மையம்...

பாரதி புக் ஹவுஸ்

மாநகராட்சி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்
பஸ் ஸ்டாண்ட் [உட்புறம் - தென்புறம்]
பெரியார் பஸ் நிலையம், மதுரை - 625 001
தொலைபேசி : 736416

♦ காலச்சுவடு வெளியீடுகள், காவ்யா, அன்னம், அகரம், விடியல், வைகை வெளியீடுகள், தாமரைச்செல்வி பதிப்பகம், அடையாளம் வெளியீடுகள், அலைகள் வெளியீட்டகம், ஸ்நேகா, விஜயா பதிப்பகம், வைகறை, சவுத் விஷன், கீழைக்காற்று பதிப்பகம், நியூ செஞ்சுரி, திணை வெளியீடுகள், நேஷனல் புக் டிரஸ்ட், சாகித்ய அகாதெமி வெளியீடுகள், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார வெளியீடுகள் மற்றும் இலக்கியம், சமூகவியல், நுண்கலைகள் சார்ந்த புத்தகங்களும் அனைத்துச் சிற்றிதழ்களும் கிடைக்கும்.♦

ஞாயிறு விற்பனை உண்டு

சுகுமாரன்
கவிதைகள்

கன்யாகுமரி

பார்க்கத்தான் போனோம்
திரும்பும் போது
கூடவே வந்த கடல் வாழ்ந்து கொண்டிருக்கிறது
நம்முடன்

தீர்ப்பு

பற்றி எரிவதாயிருந்த
வயிறு

முரட்டுப் பதார்த்தம் - எனினும்
பூமியைப் பிட்டு விழுங்கிப்
பசியாறினேன்

பாலைத் தகிப்பாயிருந்த
நாக்கு

சிட்டிகை உப்பு தூக்கல் - எனினும்
கையளவு கடல் குடித்துத்
தாகம் தீர்த்தேன்

பொரிந்துருகுவதாயிருந்த
சருமம்

மரங்கள் விட்ட பெருமூச்சு - எனினும்
விசிறியில் நிரப்பிப்
புழுக்கம் தணிந்தேன்

குளிரால் நொறுக்குவதாயிருந்த
எலும்பு

கந்தையாய்ச் சுருண்ட ஆகாயம் - எனினும்
நீளவாக்கில் கிழித்துப் போர்த்தி
நடுக்கம் தவிர்த்தேன்

இருட்டின் பிசுபிசுப்பாயிருந்த
அகம்

பிடிக்குள் அடங்காது - எனினும்
ஒரு துண்டச் சூரியனை ஊதி
வெளிச்சம் விரித்தேன்

அத்துமீறிய செய்கை இவை என்று
தண்டிக்கப்பட்டேன்
தண்டித்ததோ
செவிட்டூமையும் முடவனுமான ஒரு நீதிபதி
குருடனும் கூட

வாழ்நிலம்

கனவின் நிலம்
நீரால் ஆனது

வாழ்க்கை சலித்துப்
புதைந்தொழிய விரும்பினேன்
தோண்டியதும் உள்வாங்கிய நிலம்
மூன்றுமுறை மன்னித்து ஒளியில் நடத்தியது

கனவின் கடல்
மண்ணால் ஆனது

மரணம் அலுத்து
உயிர்த்தெழத் தவித்தேன்
எழுந்ததும் சரிந்த நீர்
மூன்றுமுறை மிதித்து இருளில் மூழ்கடித்தது

நீரில் மரணம் இனிது
அதனிலும் இனிது
நிலத்தின் வாழ்வு .

*

பையாம்பலம் கடல்
அநாதி காலமாக
ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறது
கடல் :
'நீ என்னை எவ்வளவு நேசிக்கிறாய்?

பாறை மனம் கசிந்து
ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறது
கரை:
'நான் உன்னை நுரையளவு நேசிக்கிறேன்'

ஒரே கேள்வியை
ஒவ்வொரு முறையும்
ஒவ்வொரு விதமாகக் கேட்கிறது கடல்
ஒவ்வொரு விதமாகச் சொல்கிறது கரை
ஒவ்வொரு முறையும்
ஒரே பதிலை.

கூந்தலை அலையும் காலைக் குறும்புடன்
கேட்கிறது கடல்:
'எவ்வளவு நேசிக்கிறாய்?'

பாதி திறந்த விழியின் வெளிச்சத்துடன்
சொல்கிறது கரை:
'காற்றளவு'

கைகோர்த்து அலையும் பகல் தோழமையுடன்
கேட்கிறது கடல்:
'எவ்வளவு நேசிக்கிறாய்?'

கைக்குள் தங்கிய வெது வெதுப்பாய்ச்
சொல்கிறது கரை:
'மலையளவு'

முத்துப் பதிர்ந்த மாயை ஈரத்துடன்
கேட்கிறது கடல்:
'எவ்வளவு நேசிக்கிறாய்?'
சருமத்தைச் சுண்டிய நீர்மனச் சிலிர்ப்பாய்ச்
சொல்கிறது கரை:
'அலையளவு'

உயிர் தழுவும் உடலின் இரவாய்க்
கேட்கிறது கடல்:
'எவ்வளவு நேசிக்கிறாய்?'

உடலணிந்து உயிர்த்துடிப்புடன் மல்லாந்து
சொல்கிறது கரை:
'கடலளவு'

இருட்டறைக்குள்ளும்
மணற்சரிவுகளுக்கும் இடையில்
கடலை வரவேற்கும் கரை கேட்கிறது:
'நீ என்னை எவ்வளவு நேசிக்கிறாய்?'

'கடலளவு
இல்லை அலையளவு
இல்லை நுரையளவு
இல்லை மணலளவு
இல்லை காற்றளவு
இல்லை நிலமளவு

அநாதி காலமாக
ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறது
கடல்.

பையாக்கடல் கேரளத்தில் கண்ணூரில் உள்ளது.



பிரமிள்

நமக்கு இடையில்

இரு சரீரங்களுக்கு இடையில்
வார்த்தை இருப்பதில்லை
நாம்
வார்த்தையில்லாமலும் இருந்ததுண்டு.

இரு சொற்களுக்கு இடையில்
உடல் இருப்பதுண்டு
நாம்
உடலில்லாமலும் இருந்ததுண்டு

ஒருவருக்கொருவர்
முழுமை கோரும் நிகழ்வு நாம்

எனவே தான்
உடல் கலந்து கிடந்து
உடல் கடந்த கடலாவதும்
மனம் கூடிப் படர்ந்து
மனம் கடந்த வெளியாவதும்

நமக்கிடையில்
ஆகாயத்தைப் பிரதிபலித்து
ஓடிக் கொண்டேயிருக்கிறது பேராறு
மனிதச் சுவடுகள் பதிய
விரிந்து கொண்டேயிருக்கிறது சமவெளி

நான் உன்னிடம் என்னையும்
நீ என்னிடம் உன்னையும்
கண்டடைந்து கொண்டேயிருக்கிறோம்
நமக்கிடையில்
சொட்டி விழுந்து பெருகிக் கொண்டேயிருக்கிறது காலம்.
θ
புது எழுத்து 6/1

தேவதச்சன்

கவிதைகள்

537 வருடத்திற்கு முன்
குளத்தில் மூழ்கிய,
விலங்கு
எட்டிப் பார்க்..கிறு..
கின்று.ஆநின்று.
மாறிக் கொண்டே,
ஞாபகம்
எப்படியோ,
அப்படியே.
அப்படியா!
ஆழத்தில்
அவிழ்ந்து கொண்டிருக்கும்
முலைப்பால்
எதன் நடுவிலோ
மறைகிறது.
எப்பொழுது ஓஓ.
ஒரே மாதிரி நள்ளிரவு
ஒரு பொருளும் தெரியவில்லை
பகலைவிட வலிமையான
அலறல் வழிந்தோடுகிறது
விலங்கின்
சிறு வாலசைவில்
உன்னை நனைக்கிறது,
தண்ணீரில் கலையும் தண்ணீர்

0

முட்டையிலிருந்து வரவில்லை
உன் பின்னிலையிலும்
முன்னிலையிலும்
இரண்டு ஏகாந்த சிறகுகள்
அசைந்து கொண்டிருக்கின்றன
அவைகளுக்கு,
அலகு இல்லை. நகம் இல்லை,
கண்கள் இல்லை.

பின் அவைதானே மீண்டும்
இறந்து விழுகின்றன
என் அன்பைப் போல்

வழிக்குழந்தையின்
விரல்களில் ஏறி,
பௌதிகப் புத்தகங்களின்
மின்காந்தப் படங்களில்
தொற்று முன்னால்,
பித்து ஜீவி
ஒருவனிடமிருந்து
உதிர்ந்து கொண்டிருக்கும்
உறங்காத இமைகள் அவை.
0

உதய நரையாளின் மதியம்

உன்னுடைய நிலையம் மகிழ்வாக இல்லை.
தினந்தோறும் கடினமான சின்ன நிகழ்வுகள்
உன் தோல்தடித்த வீரன் சந்தையில் தங்கிவிட்டான்
ஒருவேளை, அங்கு, கடுமையாக உழைத்தும் தோற்கடிக்கப்பட்டிருக்க கூடும்
சந்தர்ப்ப வசத்தில் தொடர்கிறது, அன்பின் விரிப்பு
யாராவது, என்ன நடக்கிறது என்று சொல்லமாட்டார்களா என
உடல் மெலிகிறாய்
கைக்குள் அடங்கி அடங்காத பஞ்சைப் போல்
அலுவல் வெளிகளில் திரிகிறாய்
உன் உதயநரையில் ஊர்ந்தபடி, திகைக்கிறது
கண்கள் மட்டும் உள்ள பூச்சி
கொதிக்கிற மூச்சை மீண்டும் மறைத்தபடி
துணிகளை தண்ணீரில் ஊற வைக்கிறாய்.
மதியம் கூட இருக்க முடியாத அம்மாவைப் போல், உன்னை
வருடிச் செல்கிறது.

சௌந்தர்ய மூர்ச்சனைக் கவிதைகள்

அன்பெனும் விதை
ஆர். ராஜகோபாலன்

நகுலன் அவர்களை நேரில் சந்தித்துப் பேசும் போது கவிதையின் சாயல்களைப் பற்றியும் பேச்சு வந்தது. சுருதி தொகுப்பின் பின்னுரையில் தன் கவிதைகளில் ஆர். ராஜகோபாலன் சாயல் படிந்திருப்பதாக எழுதியிருப்பதை நினைவு கூர்ந்தார். ஆர். ராஜகோபாலனைப் படித்திருக்கிறீர்களா என்று கேட்டார். படித்திருக்கிறேன் என்றேன். திரு அழகிய சிங்கர் தந்த ழ பத்திரிக்கைகளின் வழியாகப் படித்ததைச் சொன்னேன். இனி, ராஜகோபாலன் அவர்களின் கவிதை பற்றி...

அன்பெனும் விதை என்னும் இத்தொகுப்பில் 49 கவிதைகள் உள்ளன. 1978லிருந்து 2000 வரை எழுதிய கவிதைகள் இவை. இவற்றை ஒட்டுமொத்தமாகப் படிக்கும் போது நகரம் சார்ந்த மன உலகத்தைப் பற்றி எழுதப்பட்டவையாகத் தெரிகிறது. நகரத்தின் வாழ்வியலில் இருக்கும் அழகியல் எல்லா கவிதைகளிலும் படிந்திருக்கிறது. ஒரு கட்டுரையில் இவர் கவிதைகளைப் பற்றி நகுலன் - சௌந்தர்ய மூர்ச்சனை கொண்டவை - என்று எழுதியிருப்பதையும் நினைவு கொள்ளலாம். இது மட்டுமே அவரிடம் இருக்கவில்லை. அதனுடன் எல்லாவற்றையும் கவிதையாகக் காணும் சம்பவங்கள் இருக்கின்றன. அவருடைய கவிதைகளில் கிளிகள், புறாக்கள், எருமை மாடுகள், கன்று குட்டிகள், மயில், அணில் என் பட்சிகளும் மிருகங்களும் அவர் வாழ்வியல் சூழலோடு இயக்கம் பெறுவதை அறியமுடிகிறது. (கவிஞர் ஷா-அ அவர்கள் ராஜகோபாலன் கவிதைகளில் வரும் கிளிகளைப் பற்றி உற்சாகமாக நேரில் என்னிடம் பேசியுமிருக்கிறார்) அவருடைய படிம உல்கம் கற்பனை உலகம், காட்சி உலகம் அவரின் நேரடியான உலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவையாகவே இருக்கின்றன. அழகியல் சார்ந்தும் இயங்குகின்றன. என்னுள்/எங்கோ ஒரு குழந்தை/மயிலென நடனமிடும்/ தன்னை மலர்த்திக் கொண்டு (பக் 33) என்ற வரியை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இத்தொகுப்பின் புதிய அனுபவத்தை ஏற்படுத்தும் கவிதைகளென்று ஆகஸ்ட் 1978, வருகை, உறவுகள், மழை, மல்லிகை, என் உலகம், கவிதை வாசிப்பவர் களுக்கும், மழை சாட்சி, புறாக்கள், மூன்றும் ஏழும், ஏழு கவிதைகள், நீ, குருவிகள், வைக்கோல் வண்டி, இரண்டு காகங்கள், கிளிகள் ஆகியவற்றைச் சொல்லலாம். இக்கவிதைகளில் இயங்கக்கூடிய அனுபவத் தளம் வேறொன்றாகச்

சொல்லப்படுகிறது. யதார்த்த மனோபாவம் எந்த இடத்தில் கவிதைக்கான மனோபாவமாக மாற்றமடைகிறது என்பதற்கான அடையாளமாகப் பல கவிதைகள் விளங்குகின்றன. மிகச் சாதாரண அனுபவம் என்று கூறப்படுபவை எந்த அளவில் தீவிரத்தன்மை பெற்று விடுகின்றன என்பதையும் இவற்றில் காணலாம். மேலும்,

இக்கவிதைகளில் நிலவும் மொழித் தனத்தையும் இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. அவருடைய பிரத்தேயக மனோநிலை படியே கவிதையின் மொழி - இசை இருக்கிறது. அதன் வடிவம் கூட கவிதையில் இயங்கும் இசைத் தன்மை மிக அமைதியாக இயங்குகிறது. நெருடலாக இல்லாமல் இயங்குகிறது. வடிவத்தின் எளிமையும் உருவ அமைதியும் காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. கவிதையின் ஊடாகச் சலனத்தை உருவாக்குபவை எனப் பல வரிகளைக் கோடிட்டுக் காட்டலாம்.

இலைகளேயில்லாமல் மர்மெல்லாம் மறைய (பக் 21)

வயதேறித் தளர்ந்த கிளியொன்று (பக் 36)

நற்கவிதை ஓசையாய்ப் பெருமழைத் தூறல் (பக் 44)

குளிர்ந்த காற்றில் தனக்குள்ளே பேசிக் கொள்ளும் (பக் 49)

இரண்டு குருவிகளின் சப்தம் மட்டும் என்னை நோக்கி விழும் (பக் 56)

பொதியின் மேல் நடுவில் சர்ரென்று வந்து அமரும் காகம் (பக் 75)

ஈர்க்க முடியாத மண் என சுற்றிலும் தார்ச்சாலைகள்,

எங்கும் நீண்டு பரந்து விரிந்து சிறிய பெரிய கிளைகளுடன் (பக் 78)

எரிவது நின்று போயிற்று இருட்டை எங்கும் பரவவிட்டு (பக் 86)

பெருங்காற்றில் சாய்ந்த மரங்கள் கோணல் கைகளை ஆட்டும் (பக் 88)

எனப் பல வரிகள் உள்ளன. இவருடைய கவிதை உலகத்தை உணரும்போது நாம் அதில் மூழ்கியிருப்பதற்கான அறிகுறிகளை நாம் நேரடியாகக் காண முடியும்.

யதார்த்தத்தின் மீதான எரிச்சலோ, புலம்பலோ இல்லாமல் அதன் அடிப்படையில் ஏற்கும் குணத்தை நாம் காணலாம். இன்னும் கூடுதலாக ஆர். ராஜகோபாலன் அவர்களின் மொழியும் இசையும் கட்டுரை - புதிதாக எழுத வருபவர்களுக்கும் மொழிப்பற்றிய பிரக்ஞை இல்லாமல் எழுதுபவர்களுக்கும் வெளிப்படையான உரையாடலாக அமைந்திருக்கிறது. இது போன்ற கட்டுரையை அவர் விரிவாக எழுத வேண்டியது அவசியமாகத் தோன்றுகிறது.

மொத்தத்தில் - உணர்வு தளத்தில், அனுபவ தளத்தில், எழுதும் தளத்தில் இக்கட்டுரை மட்டும் இல்லாமல் - கவிதைகளும் கவனிப்புக்குரியவைகளாக, ஆகக் கூடியவையாக இருக்கின்றன என்று இத் தொகுப்பை படிக்கும் போது அறிய முடிவதை இங்கு கடைசியாகச் சொல்லி முடிக்க வேண்டியிருக்கிறது.

அன்பெனும் விதை - ஆர். ராஜகோபாலன் - மதி நிலையம் - ரூ. 30.00

ஸங்ராந்த்

கணத்தோற்றம்

(கவிதைகள்)

ரா. ஸ்ரீனிவாசன்

விருட்சம் வெளியீடு, 7, ராகவன் காலனி, மேற்கு மாம்பலம், சென்னை - 33, பக். 48, விலை - ரூ. 20 முதல் பதிப்பு - செப்டம்பர் 2001.

1989இல் ஸ்ரீனிவாஸனின் முதல் தொகுதி 'ரா. ஸ்ரீனிவாசன் கவிதைகள்' வெளிவந்த பின் 2001இல் 'கணத்தோற்றம்' இரண்டாம் தொகுப்பாக வெளிவந்துள்ளது. இடையிலுள்ள பத்தாண்டுகளில் அவர் எழுதியவை இதிலுள்ள 29 கவிதைகள். தொகுப்பை வாசித்து முடித்தவுடன் உணரக் கிடைப்பது முதல் தொகுதி தந்ததான நிறைவை இது அளிக்கவில்லை என்பதுதான். இதற்காகவே இப்போதும் ஒரு முறை முதல் தொகுதி வாசிக்கப்பட்டது. அதில் காணக்கிடைந்த ஸ்ரீனிவாஸனின் கவித்துவ மொழியும், படிமங்களாக மாறிய பிரயோகங்களும் அற்று இத்தொகுதி பழகிப் போனதான அல்லது அதிகம் பயன்படுத்தப்பட்டதான கவியாக்க பாணியைக் கொண்டுள்ளது. புதிதான உணர்வுகளைக் கிளப்பாத விவரணைத் தனத்தை கொண்டுள்ளதாலும் சில ஞானக்கூத்தனின் எள்ளல் பார்வையை பெற்றிருப்பதாலும் இப்படித் தோன்றலாம். ஒரு வகையில் இந்தப் பத்தாண்டுகளில் கவித்துவத்தின் தீவிரம் குறைந்து, பார்வைகளில் பக்குவம் பெற்றிருப்பதான ஒரு தோற்றத்தை நோக்கியதாக . இக்கவிதைகள் பாவனைச் செய்வதாகக் கூடப் படுகிறது. கனவு வயப்பட்ட உலகத்தின் - பருவத்தின் - ஆழப் பரவசத்திலிருந்து கவிதைகளைப் படிமப்படுத்தித் தந்தவர் இப்போது மேல்தளத்தில் நின்று சில சிந்தனைகளை - காட்சிகளைச் சுட்டிக் காட்டிச் செல்பவராக மாறியிருப்பதாகப்படுகிறது.

அடுத்து இக்கவிதைகளில் பெரும்பான்மையானவற்றின் களம் நகரப் பின்புலத்தை கொண்டு இயங்கி அதனோடு உறவாடும் மனநிலைகளின் வெளிப்பாடுகளாக உள்ளன. செய்திக் கவிதைகள் இன்றைய நகரமயமானவனின் அத்யாவசிய பழக்கத்தின் விளைவாக விளைந்தவை. தவிர கடற்கரை, நெடுஞ்சாலை, இனிப்புக் கடை, ஜவுளிக்கடை, பக்க வீடுகள், அலவலகம், கோயில், சுரங்கப் பாதை, மேம்பாலம், கூச்சல் எழும் வீதிகள், அரங்கம் ஆகியவை கவிதைகளில் இடம் பெற்றிருப்பதன் வழியாக மாநகரத்தின் பேரிரைச்சலை எதிரொளிக்கின்றன. கடைசி வரியில் கவிதையை எழுப்ப திட்டமிடும் முத்தாய்ப்பு கவிதைகளின் தொடக்க விவரணைகள் கவிதையின் பொருண்மைக்கு வெளியே தேவையற்ற செய்திகளைக் கொண்டு சாதாரணங்களாக்குகின்றன. கால் கட்டுப் போட்ட நாற்காலி, சொர்க்க வாசல், வளர்க்கப்படாமல் எங்கள் வீட்டில் எங்களுடன் வாழ்ந்தவை. இரண்டு காட்சிகள், பொட்டு, பலூன்கள், கணிப்பொறி வளாகத்தில் குரங்கு ஆகியவற்றை உதாரணங்களாக்கலாம். அடுத்து மிக அதிகமாக இக்கவிதைகளில் நாம் எதிர் கொள்பவை அடுக்குத் தொடர்கள், 12

கவிதைகளில் 28 அடுக்குத் தொடர்கள் கையாளப்பட்டுள்ளன. இவை ஒன்றை அழுத்தம் கொடுத்துக் கூறவோ அல்லது வலியுறுத்தவோ பயன்படுத்தப் பெறாமல், ஓசை நயத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. சில தத்துவார்த்தப் புரிதல்களை (அ) கேள்விகளை கவிதைகளில் கொண்டு வரும் போது அவை முழுதும் புதிதானதாக இன்றி வேறெங்கோ நாம் சந்தித்து விட்ட அல்லது ஏற்கனவே உணர்ந்ததாக இருப்பதால் பெரிய மதிப்பைப் பெறத் தவறுகின்றன. அசையா சிறுகல், நான் இருக்கிறேன் ஆகியன இத்தன்மையன. இதிலிருந்து மீண்டுவிட்ட சில வரிகள் 'நாம் தான்' கவிதையின் இறுதி வரிகள் ரா. ஸ்ரீனிவாஸனின் முதல் தொகுதி என்னைப் பித்துக் கொண்ட வாசகனாக்கியிருந்தது. அந் நிலைக்கு மதிக்கத்தகுந்த இத்தொகுதி யின் கவிதைகளென அவஎ நடனமாடினேன், கணத் தோற்றம், வீழ்கின்ற உலகம், இரும்பு விதியில் சில விதிகள், பெயருமில்லை ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடத் தோன்றுகிறது.

(ஜவ்வாது மலையில் நடைபெற்ற கவிஞர்கள் சந்திப்பு - 2002இல் வாசிக்கப்பட்ட கட்டுரையின் சுருக்கம்)

தேவ்நேஷ்

பிருந்தா கவிதைகள்

எதிர் கொள்ளல்

எஞ்சிய ஒற்றை முணுமுணுப்பும்
எழுந்து போய்விட
நீயும் நானுமாக
நிரம்பி யிருக்கிறது அறை

எதிர் கொண்டேயாக வேண்டும்
என்னை நீ.

விளையாட்டுத்திடலில்
ஹோவென்ற இரைச்சலில் தேய்ந்து
அறுந்த சிலந்தி வலையில் தொங்கு
பல்லியின் வாலோடு நகர்ந்து நீ
எவ்வளவு தவிர்த்தும்
எதிரே யிருக்கிற என்னை
சட்டெனக் கடந்து
உதறியெழுந்து போய்விடுகிறாய்

உன்னால் எதிர்கொள்ள
முடியாதினி
உன்னையும்.
0

நீ யென் வண்ணத்துப்பூச்சி

அந்த வண்ணத்துப் பூச்சி
அழகாக இருந்தது
அது வண்ணத்துப் பூச்சி
என்பதாலேயே

பார்வைத் தொடுகைக்கு
பறந்து விடமால்
பூவில் அமர்ந்தது

எங்கள் அலுவலகத்தின்
மேல்தள தொட்டிச் செடியின்
பூ அது.

தட்டச்சு செய்து
முனை மழுங்கிய விரல்களுக்கு
வண்ணம் பூச விழைந்த
எண்ணத்தை
அதோடு பறக்க விட்டு

. . . .

வான்த்தை உமிழ்கிறேன்,
என்னை வந்தடைகிறது
என்மீதான என் வெறுப்பு.
0

பாரேஸ்

பிரம்மராஜன்

மொழி வெல்லும் வாள்

மொழி வெல்லும் வாள் கொண்டு நாம்
பெண் பார்க்கும் ஆண் நாய்க் காட்சி
இன்றிசைந்து
நின்றுறங்கி
நிலவுத் தூறல் நித்திலத்தாரை கனவுப் பாதை
புலவிக்கடுத்ததில் நழுவிக் கொள்ளும்
காலம்
நீலத்தீற்றல் ராம திலகம்
நகக் கண்கள் கனலும் ஜன்ம நட்சத்திரம்
மகா மந்திரம் பூமியாக இருக்கிறாள்
மற்றுமுன் மகள் நாகர் யௌவனர் ரோகம்
தொட அஞ்சும்
ரசிகம் பிரியம் தானம் சோறும் அமிழ்தம்
ராம பாணம் படாதிருக்கும் முலைக் கீறல்
ஆஹா ஒற்றைக் கண் காகம்
வாயறுந்து
சொல் மெலிந்து
மூளை துடிப்பில்
இன்றில் நினைக்கும்
ஒன்றேயொரு நாள் நமக்கு.
உண்டெங்கிலும்.
0

இதுவரை எழுத்தில் இடம் பெறாத பழங்குடி மக்களின் கதைகள்

(விடியல் பதிப்பகம் வெளியிட்டுள்ள மூன்று மராத்தி தலித் தன்வரலாற்று நாவல்கள் : ஒரு அறிமுகம்)

அ. மார்க்ஸ்

தலித் இலக்கியங்களையும் தலித் அரசியல் நூல்களையும் வெளியிடுவதில் முன்னோடிச் சாதனைகள் புரிந்துள்ள விடியல் பதிப்பகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள, பழங்குடி மக்களின் வாழ்வைக் களனாகக் கொண்ட மூன்று மொழி பெயர்ப்பு நாவல்கள் நமது களத்திற்குரியவை. பிற மொழிகளிலிருந்து முக்கிய பல நூற்கள் தமிழுக்கு வந்து கொண்டிருக்கும் சூழலில் மகாராஷ்டிர மண்ணில் வாழ்கிற இப் பழங்குடி மக்களைப் பாடு பொருளாகக் கொண்டுள்ள இம் மூன்று நூற்களைத் ★ உபரா, லட்சுமண் மானே, பக். 280, ரூ. 100. குலாத்தி, கிஷோர் சாந்தாபாய் காலே, பக். 199இ ரூ. 75. உச்சாலியா, லக்ஷ்மண் கெய்க்வாட், பக் 294, ரூ. 100. ★ தேர்வு செய்து மொழியாக்கி வெளியிட்டுள்ள தோழர்கள் சிவா, வெ. கோவிந்தசாமி, எஸ். பாலச்சந்திரன், கண்ணன்.எம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்.

இவற்றில் லட்சுமண் மானே யின் 'உபாரா', நாடோடிப் பழங்குடியினரான 'கைக்காடி'களின் வாழ்வைப் பேசுவது. காடுகளில் மூங்கில் சேகரித்துக் கூடை முடைந்து விற்றல், திருமணங்களில் வாத்தியம் இசைத்தல், சில நேரங்களில் விவசாய வேலைகள், பிற நேரங்களில் பிச்சை எடுத்தல் என்பன இவர்களின் தொழில், வாழ்வு. கூடையில் கடவுளரையும் அற்ப சொற்ப உடைமைகளைக் கழுதைகளிலும் ஏற்றிக் கொண்டு ஊர் ஊராக இடம் பெயரும் பிழைப்பு இவர்களுடையது. ஊர் எல்லையில் உயர்சாதி மராத்தியினர் மலம் பெய்யப் பயன்படுத்தும் ஒதுக்குப் புறங்களைக் கூட்டிச் சுத்தம் செய்து தமது கூடாரங்களை அமைத்துக் கொள்வது இவர்கள் வழக்கம். ஊருக்குள் சென்று பிச்சை எடுத்தல் இவர்கள் வாழ்வின் இன்னொரு அங்கம்.

சாந்தாபாய் காலேயின் 'குலாத்தி', ராஜஸ்தானிலிருந்து - மராட்டியத்திற்கு இடம் பெயர்ந்து வந்த ஒரு நாடோடிப் பழங்குடிச் சாதியைப் பற்றியது. குடும்பத்து பெண்களை, குறிப்பாகச் சகோதரிகளையும், மகள்களையும் (மனைவி மட்டும் விதிவிலக்கு) தமாஷா, லாவணி, ஜல்ஸா என்றெல்லாம் அழைக்கப்படுகிற உல்லாச நடனங்கள் ஆட விட்டு ஆண்கள் மட்டும் உழைக்காமல் சாப்பிடும் ஒட்டுண்ணிச் சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள மதிப்பீடு. குலாத்திப் பெண்கள் காதலிக்கக் கூடாது. திருமணம் செய்து கொள்ளக் கூடாது. எங்கேனும் தொடர் நடன நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கும் போது அங்குள்ள வசதிக்கார உயர் சாதியான் ஒருவன் ஒரு குலாத்திப் பெண்ணை விரும்பினால் அப்பெண்ணின் குடும்பத் தலைவன் கேட்கிற தொகையைக் கொடுத்துவிட்டு அவனுடன் முதல் பாலுறவு கொள்ளலாம். 'சிரா உட்டர்ன்' என்பது

அதற்கான சடங்கின் பெயர். யாருடனாவது வாழ்ந்து குழந்தை பெற்றுக் கொள்வது, அவன் கைவிட்டுச் சென்றால் எந்த உரிமையையும் கோர இயலாமல் இன்னொருவனை நாடுவது அல்லது விபச்சாரம் செய்வது என்பதுதான் இப் பெண்களின் வாழ்க்கை. இப்படிப் பிறக்கும் குழந்தைகள் பெண்களாயின் அவர்களுக்கும் இவ் வாழ்க்கை தொடரும். ஆண்களாயின் சிறு வயதில் நடன அரங்கில் எடுபிடி வேலைகள், பின் இசைக் கருவிகள் இசைத்தல், மாமா வேலை அல்லது தம் குடும்பப் பெண்களை ஆடவிட்டு வரும் வருவாயில் வாழ்தல். தந்தையற்ற இக் குழந்தைகளில் ஒருவர் தான் இந் நாவலின் நாயகனும் ஆசிரியனுமான சாந்தாபாய் காலே.

மூன்றாவது நாவல் லட்சுமண் கெய்க்வாடின் 'உச்சாலியா'. 'பத்ருத்' எனப்படும் குற்றப் பரம்பரைப் பழங்குடிச் சாதியின் கிளைகளில் ஒன்று உச்சாலியா. சாராம்சமாகக் குற்றப் பண்பைக் கொண்டவர்கள், பிறக்கும் போதே குற்றப் பண்புகளுடன் பிறப்பவர்கள் என்றும் அடிப்படையில் சில. சாதிகளை வரையறுத்து அவர்களைக் குற்றப் பரம்பரைச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்தது பிரிட்டிஷ் அரசு. இத்தகைய வரையறைக்கான கோட்பாட்டை உருவாக்கியவர் சீசல் லோம்ப்ரோசோ என்கிற 'மானுடவியல் அறிஞன்'. இவனது கோட்பாட்டின்படி 'குற்ற மனிதர்கள்' என்போர் பிற 'சாதாரண மனிதர்'களிடமிருந்து உயிரியியல் அடிப்படையிலேயே வேறுபடடவர்கள்!.

குற்றப் பரம்பரைச் சட்டத்தின்படி இச் சாதியில் பிறந்த வயது வந்த ஆண்கள் அனைவரும் காலையிலும் மாலையிலும் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு சென்று கையெழுத்திட வேண்டும். நெருங்கிய உறவினர் செத்தால் கூட ஊர் தாண்டிச் செல்ல

வேண்டுமெனில் காவல் நிலையத்தில் - கொடுக்க வேண்டியவைகளைக் கொடுத்து - அனுமதிச் சீட்டு பெறவேண்டும். காவலர்களுக்கும், கிராம அதிகாரிகளுக்கும் தொடர்ந்து மாமூல் கொடுக்க வேண்டும்; இலவச உழைப்பு நல்க வேண்டும். இவர்களின் திருட்டுப் பொருட்களை நகை வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்குவர். இப்படியாகத் திருட்டையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட வாழ்க்கை ஒன்று அவர்கள் மீது சுமத்தப்படுகிறது. துண்டு பிளேடையும், ஊர் தாண்டிச் செல்வதற்காகக் காவல் துறை அளிக்கும் அனுமதிச் சீட்டையும் தெய்வங்களாக வழிபட்டு, அவற்றிற்குப் பலியிட்டுத் தொழில் செய்யப் புறப்படுபவர்கள் இவர்கள். தொழில் மந்தமாக உள்ள போது பறவைகளையும் சிறு விலங்குகளையும் வேட்டையாடுவர். எதுவும் கிடைக்காத நாட்களில் தொடர்ந்து பல நாட்கள் பட்டினி. பசிக் கொடுமையின் உச்சத்தை இந் நாவலில் சந்திக்கிறோம். பத்துப் பன்னிரண்டு நாட்கள் வரை தண்ணீரைக் குடித்தே கழிக்கிறார்கள். வாய்ப்பிருந்தால் ஒரு துண்டு வெல்லத்தைத் தண்ணீரில் கரைத்துக் குழந்தைகளுக்கு கொடுக்கிறார் கெய்க்வாடின் அப்பா. பசி தாளாமல் ஆட்டுக் கல்லில் உப்பைத் தடவிக் குழந்தைகள் நக்குகின்றன. காட்டு இலைகளை வேக

வைத்துச் சாப்பிடுகின்றனர். குப்பையில் கிடக்கும் புளியங் கொட்டைகளைப் பொறுக்கி ஊற வைத்து உண்கின்றனர். 1947க்குப் பின் குற்றப் பரம்பரைச் சட்டம் ஒழிக்கப்பட்ட பின்பும் கூட அரசாலும் காவல் துறையாலும் குற்றவாளிகளாகவே அணுகப்படுகிறவர்கள் இவர்கள்.

2

இம்மூன்று நாவல்களுக்கும் பொதுவான சில அம்சங்களை இப்போது தொகுத்துக் கொள்வோம். பழங்குடி மக்களின் வாழ்வைச் சொல்பவை எவை என்பதை விரிவாகப் பார்ப்போம். இவர்களில் இரு சாதியினர் (கைக்காடி, குலாத்தி) நாடோடிப் பழங்குடியினர். மூன்றாமவர் (பத்ரூத்) குற்றப்பரம்பரையினர்.

நாடோடிகளைப் பொருத்தமட்டில் அவர்கள் எந்த மண்ணுக்கும் உரியவர்கள் அல்லர். மண்ணின் மைந்தர்கள் என்கிற உணர்வும் அவர்களுக்குக் கிடையாது. ★ 'உபாரா'வில் சித்தரிக்கப்படும் 'கைக்காடி'க் குடும்பங்களுக்குச் சில கிராமங்கள் கூடை முடைவதற்கும் பிச்சை எடுப்பதற்குமென ஒதுக்கப்படுகின்றன. 'பாலூத்' உரிமைகளும் பெயருக்கு வழங்கப்படுகின்றன. எனினும் அவர்கள் அக் கிராமங்களில் நிரந்தரமாக வாழ்வதில்லை. அங்கு அவர்களுக்கு நிரந்தரக் குடிசைகளுமில்லை ★ ஒரு குறிப்பிட்ட புவியியற் எல்லைக்குள் கட்டாயமாக முடக்கப்பட்டக் குற்றப் பரம்பரையினரைப் பொறுத்தமட்டில் முழுச் சமூகத்தின் எதிரிகளாகவும், கண்காணிக்கப்பட வேண்டியவர்களாகவும் உள்ள நிலையில் அவர்களுக்குங் கூட மண்ணின் மைந்தர்கள்/குடிகள்/குடிபடைகள்/குடிமக்கள் என்பதான உணர்வு தோன்ற வாய்ப்பில்லை. தவிரவும் குலாத்திகள் ராஜஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்த நாடோடிகள். உச்சாலியர்கள் தெலுங்கு மொழி பேசும் குற்றப் பரம்பரையினர்.

இந்த வகையில் அவர்கள் பிற மராட்டிய தலித் சமூகங்களிலிருந்து வேறுபட்டு நிற்பது கண்காட்சி. அங்குள்ள தலித் சமூகங்களில் மஹர், மங் எனும் இரு சாதிகள் பிரதானமானவை. இங்குள்ள அருந்ததியர், பறையர், பள்ளர் என்பது போல. இவர்கள் நாடோடிகள் அல்லர்.

2. 'உபாரா'வில் சித்தரிக்கப்படும் 'கைக்காடி'க் குடும்பங்களுக்கு சில கிராமங்கள் கூடை முடைவதற்கும் பிச்சை எடுப்பதற்குமென ஒதுக்கப்படுகின்றன. 'பாலூத்' உரிமைகளும் பெயருக்கு வழங்கப்படுகின்றன. எனினும் அவர்கள் அக் கிராமங்களில் நிரந்த்ரமாக வாழ்வதில்லை. அங்கு அவர்களுக்கு நிரந்தரக் குடிசைகளுமில்லை.

ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தீண்டாமைக்குள்ளாக்கப்பட்ட போதிலும் ஏதேனும் ஒரு கிராமத்தோடு பிணைப்புற்றவர்கள். பொது அடிமைகள். இடம் பெயராத (நிரந்தர) விவசாயத்தோடு கட்டாயமாக (Sedantic Agriculture) இணைக்கப்பட்டவர்கள். இவ்வாறு பிணைக்கப்பட்டிருப்பதின் இரு விளைவுகள் கவனிக்கத் தக்கவை. கடுமையான பொருளாதாரச் சுரண்டல், இலவச உழைப்பு ஆகியவற்றோடு தமக்கென ஒதுக்கப்பட்ட தீட்டுக் கழித்தல், சவம் காவுதல், பறை அடித்தல், மலம் அள்ளுதல் என்பன போன்ற இழிவான சாதீயக் கடமைகளையும் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு தீண்டாமையின் உச்சத்தை இவர்கள் (மஹர், மங்)

அனுபவித்த போதிலும் மிக மிகக் குறைந்த அளவிலேனும் இவர்களது வாழ்நிலைத் தேவைகள் கிராம சமுதாயத்தால் பூர்த்தி செய்யப்படுகின்றன. இந்த சமூக அமைப்பை உயர்த்திப் பிடிக்கும் அறிவுஜீவிகள் இந்த அம்சத்தைப் புகழ்ந்து பேசுவதை யோசிப்பவர்கள் விளங்கிக் கொள்ள இயலும்.

நாடோடிகளுக்கு நிலத்தோடு உள்ள இந்த சார்பு நிலையும் பிணைப்பும் குறைவென்பதால் ஒப்பீட்டளவில் இவர்கள் 'சுதந்திரமானவர்கள்'. எனினும் இந்த மண்ணின் எப்பகுதியின் மீதும் இவர்களுக்கு எந்தவிதமான பாத்தியதையும் உரிமையும் கிடையாது. குறைந்த பட்சமாகவேனும் இவர்களின் வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பையும் கூட இந்துச் சமூக அமைப்பு ஏற்றுக் கொள்வதில்லை. எனவே சமவெளிகளில் நாடோடிகளாக வாழ்கிற இவர்களுக்குக் குறைந்தபட்ச உடை, உணவு ஆகியவற்றிற்கும் உத்தரவாதமில்லை ★ தீண்டத்தகாத சாதியரல்ல எனக் காரணஞ் சொல்லி அரசு நிறுவனமொன்று லட்சுமண் மானேக்கு உதவி செய்ய மறுக்கிறது. மானே சொல்கிறார்: யாரை நீங்கள் தீண்டத்தகாதவர் என அழைப்பீர்களோ என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை! இதோ பாருங்கள் ஒரு மகர் சாதியைச் சேர்ந்தவனுக்கு இறந்து போன விலங்குகளின் தோலை உரிக்கும் தொழிலாவது இருக்கிறது. நல்ல நிலமையில் இல்லாவிட்டாலும் அவன் ஒதுங்குவதற்கு ஒரு கூரை இருக்கிறது. ஆனால் எனக்கு ... மண்ணில் எனக்கு இடமில்லை, வானத்தை என் கைகள் எட்டுவதில்லை. மனிதர்கள் மலம் கழிக்கும் இடத்தில் வசிக்கும் ஒருவன் தீண்டத்தகாதவன் அல்லவா? அவன் தீண்டத்தகாதவன் அல்ல என்றால் வேறு யார் தான் தீண்டத்தகாதவர்? வயிற்றுப் பிழைப்புக்காக ஊர் ஊராகச் சுற்றித் திரிபவருக்கு என்ன பெயர்? (உபாரா, பக் 250, 251) ★ பசிக்கொடுமையின் உச்சத்தை அனுபவிக்க வேண்டிய கட்டாயம் இவர்கள் மீது திணிக்கப்டுவதை இந்த நாவல்களில் நாம் சந்திப்பது இப்படித்தான். எனினும் இந்த நாடோடிப் பழங்குடியினர் மீது இழிவான சாதிக் கடமைகள் சுமத்தப்படுவதில்லை. ஆனாலும் இவர்களை முழுமையாகத் தீண்டத்தகாதவர்களாகவும் இந்துச் சமூகம் கருதுவதில்லை, நடத்துவதில்லை. இது அவர்களை ஒரு வகையில் 'இரண்டுங் கெட்டான்' நிலையில் நிறுத்திவிடுகிறது. தம்மை அவர்கள் கீழானவர்களாக உணர்கிற போதும் தீண்டத்தாகதவர்களாகக் கருதும் நிலையும் ஏற்படுகிறது. இப் பிரதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாகச் சில : தாம் இடம் பெயரும் போது எதிரே மஹர் சாதிக்காரர் யாராவது வந்துவிடக் கூடாது என்பதில் கைக்காடிகள் கவனமாக இருக்கின்றனர் (உபாரா, பக்.35) தனது சாதிக்கு அப்பால் ஒரு பெண்ணை லட்சமண் மானே காதலித்து திருமணம் செய்கிற போது கைக்காடிகள் அதனைக் கண்டிக்கின்றனர். சாதி விலக்கு செய்யத் துணிகின்றனர். அவள் மராத்திக்காரி என மானே கூறுகிறார். "அவ மராத்திக்காரி என்பதற்கு என்ன அத்தாட்சி? அவ மகர் இல்லீங்கறதுக்கு என்ன அத்தாட்சி? அவ பொறந்தபோது யாரு பாத்தாங்க?" என மானேயின் அப்பா கேட்கிறார் (உபாரா, பக். 244). சாதிப் பஞ்சாயத்து இப் பிரச்சினையை விவாதிக்கும் போதும், "உன்னோட சாதியப் பத்தியோ, உன்னோட சனங்களைப் பத்தியோ உனக்கு அக்கறையில்லை. நீ ஒரு கேவலமான மகர் பொம்பள மாதிரிப் போறே" எனப் பஞ்சாயத்தார் மானேயைக் கடிந்து கொள்கின்றனர் (ப்க்.278)

குலாத்திகளுங் கூட மஹர், மங் சாதியினரைத் தீண்டத்தாகதவர்களாகவே

கருதுகின்றனர். மராத்தியர் யாருடனும் உறவு கொள்வதையும், நிரந்தரமாக வாழ்வதையும் அனுமதிக்கும் குலாத்திச் சமூகம், ஒரு "குலாத்திப் பெண் மஹரையோ அல்லது முஸ்லீமையோ மணந்து கொள்வதை மாபெரும் குற்றமாகப்" பார்க்கிறது (குலாத்தி, பக்.74). குஷீம் என்கிற குலாத்திப் பெண் கும்ளே என்கிற மஹருடன் ஓடிப்போய்விட்டதற்காக அவளையும் அவளுக்கு உதவி செய்த ஒரு குலாத்தியையும் சாதி விலக்கு செய்த நிகழ்வைக் கால விவரிக்கிறார் (அதே பக்கம்)

குற்றப் பரம்பரையினரான உச்சாலியர்கள் சட்டத்தாலும், காவல்துறையாலும் கிராம எல்லைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டவர்கள் என்றோம். இவர்கள் கிராமத்தாரால் தீண்டத்தகாதவர்களாகவே கருதப்படுகின்றனர். அம்மி, ஆட்டுக்கல் கொத்துவதற்கு இவர்கள் அனுமதிக்கப்பட்ட போதும் உரல்களிலுள்ள மாவின் மீது இவர்களின் கைபடக் கூடாது என்பதில் மராத்தியர் குறியாக உள்ளனர். (உச்சாலியா, பக்.45). எனினும் இவர்கள் பலி கொடுத்த ஆட்டின் பச்சை மாமிசத்தில் பங்கு கோருவதற்கு மராத்தி உயர் சாதியினர் தயங்குவதில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினரான மங்குகளும் பங்கு கோரி வருகின்றனர். ஆனாலும் அவர்களின் கூடைகள் தனியாக வைக்கப்படுகின்றன. எல்லோரது கூடைகளிலும் மாமிசத்தைப் பகிர்ந்து வருகிற கெய்க்வாடின் அம்மா, மங்குகளின் கூடைகளுக்கு அருகில் வரும்போது மட்டும் "கூடையின் மீது கைபட்டு விடாதவாறு எச்சரிக்கையாக இருக்கிறார்." (பக்.49).

மகாராஷ்டிர மாநிலத்தின் சட்ட பூர்வமான சாதி வகைப்பாட்டில் இவர்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அட்டவணைப் பழங்குடியினர் (Scheduled Triber) என வகைப்படுத்தப் படுகின்றனரா இல்லைப் பிற்படுத்தப்பட்ட சாதிகளின் கீழ் உள்ளடக்கப் படுகின்றனரா என்பது புரியவில்லை. நூல்களை மொழியாக்கிய தோழர்களுக்கும் இது பற்றித் தெளிவில்லை. பிரதிக்குள்ளிருந்தும் இவர்களின் சட்டபூர்வமான நிலை குறித்துத் தீர்மானகரமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. எனினும் இம்மூன்று புதினங்களையும் வெறும் இலக்கியப் பிரதிகளாக மட்டுமின்றிச் சமூகவியல் ஆவணங்களாவும் வாசிக்க வேண்டிய நிலையில் இது குறித்து நாம் யோசிப்பதும் தவிர்க்க இயலாததாகிறது.

"என்னுடைய சாதி பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்ததை அறிந்தேன்" என்கிறார் மானே (உபாரா,பக்.210). "குலாத்தி போன்ற பிற்பட்ட சமூகத்தினருக்குக் கல்வி நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடுகள் இருப்பதாக எனக்குத் தெரியும்" எனவும் (குலாத்தி, பக்.106), தேர்வு முடிவுகள் வந்தபோது பிற்படுத்தப்பட்ட மாணவர்களில் தாம் இரண்டாவதாக வந்ததாகவும் குறிப்பிடுகிறார் காலே (பக்.164). சட்டப்படி குற்றப்பரம்பரைச் சாதியாக வரையறுக்கப்பட்டிருந்த உச்சாலியர்கள்

பற்றிய நாவலிலும் "பிற்படுத்தப்பட்டவர்களுக்கான பால் பண்ணை ஒன்றை அண்ணி நடத்தினார் "என்று பதிவு செய்கிறார் கெய்க்வாட்(உச்சாலியா, பக்.219) ★ மூன்றாம் எண்ணுள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும் ★

பிரதிகளில் பயன்படுத்தப்படுகிற 'பிற்படுத்தப்பட்ட' என்கிற சொல் சட்டபூர்வமான வரையறையைக் குறிக்கிறதா இல்லை, பொதுவாகப் பின்தங்கிய, வளர்ச்சியற்ற, கீழ்நிலையில் உள்ள என்கிற பொருளில் பயன்படுத்தப் படுகிறதா என்பது விளங்கவில்லை. நமது சூழலுடன் ஒப்பிட்டு அதன் அடிப்படையிலும் இறுதியாக ஒன்றும் முடிவு செய்ய இயலவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் சில இன்று பழங்குடிப் பட்டியலிலும் (எ.டு: இருளர்), இன்னும் சிலர் பிற்படுத்தப் பட்டவர்கள் பட்டியலிலும் (எ.டு:பிறன்மலைக் கள்ளர்-மிகப் பிற்படுத்தப் பட்டோர்) உள்ளடக்கப்பட்டுள்ளனர். குலாத்தி சமூகத்திற்கு ஓரளவு இணையாகச் சொல்லத்தக்க இசைவேளாளர்களும் இங்கே அட்டவணைச் சாதியாக வரையறுக்கப்படுவதில்லை.

சட்டபூர்வமான நிலை எதுவாக இருந்த போதிலும் தம் மீது சுமத்தப்படுகிற இழிவுகளின் அடிப்படையில் தாங்கள் அனைவருமே தலித்களாகத்தான் மராட்டிய சமூகத்தில் அறியப்படுகின்றனர் என்பதாக இம்மூன்று ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். ★ நூலாசிரியர்களுடன் தொலைபேசியில் உரையாடியதன் அடிப்படையில் திரு. கண்ணன்.எம். இதைக் குறிப்பிடுகிறார் ★ தவிரவும் தலித் இலக்கிய விருதுகள் இப்பிரதிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதும் கவனிக்கத் தக்கது (எ.டு: தலித் சாகித்ய விருது, டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் புரஸ்கார் விருது முதலியன குலாத்திக்கு வழங்கப்பட்டுள்ளன.) பிரதிகளில் வெளிப்படும் இவர்களின் வாழ்வை வாசிக்கும் போதும் இவர்கள் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கப்பட்டுள்ள நிலை நமக்கு விளங்குகிறது. தங்களைப் பற்றிச் சொல்லும் போது "தீண்டப் படாத சாதிகளாகிய நாங்கள்" என்றே குறிப்பிடுகிறார் கெய்க்வாட் (உச்சாலியா,பக்.45) அம்மி கொத்த அனுமதிக்கப்பட்ட போதுங் கூட மாவின் மீது இவர்களின் கை படக் கூடாது என்பதில் ஆதிக்க சாதியினர் குறியாக இருக்கின்றனர். ஊருக்கு வெளியே மராத்தியர் மலம் கழிக்கும் இடத்தைக் கூட்டி ஒதுக்கிக் குடியிருக்கும் பிச்சைக்காரச் சாதியினர்தான் கைக்காடிகள். இவர்கள் நாய்களோடு போட்டி போட்டுக் கொண்டு எச்சில் இலைகளைப் பொறுக்குகின்றனர் (உபாரா, பக்,124): திருமணப் பந்தியில் மற்ற சாதியினரோடு உட்கார்ந்து சாப்பிட முயற்சிக்கையில் சாதிப் பெயர் சொல்லி இழிவாகத்திட்டி விரட்டப் படுகின்றனர் (உபாரா, பக். 140). திருமண வீட்டில் தப்பட்டை வாசித்துக் களைத்து நிற்கும் நிலையில் கூட இவர்களுக்குத் தம்ளரில் தண்ணீர் கொடுக்காமல் கையை நீட்டிச் சொல்லி ஊற்றுகின்றனர். தவறிப்போய் மானேயின் கை தண்ணீர்த் தொட்டியில் பட்ட போது, தண்ணியை நாசம் பண்ணிடடியே எனத் திட்டுகின்றனர். தண்ணியைத் தீட்டாக்கிய செய்தி பரவி, இறுதியாக ஒரு தொட்டித் தண்ணீரையும் கீழே ஊற்றிவிட்டு மாட்டு வண்டியில் புதிதாகத் தண்ணீர் கொண்டு வரும் பொறுப்பு கைக்காடிகளின் மீது சுமத்தப்படுகிறது (பக்.148). இவர்கள் தீண்டத்தகாதவர்களாக நடத்தப் படுவதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்?

3

குலாத்திகளைப் பொருத்தமட்டில்

அந்தச் சாதிப் பெண்களின் உடல்கள் இந்த உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்திற்குத் தேவை. அவர்களது வீட்டிலேயே வந்து, தங்கி, உண்டு, உறவு கொள்ள வேண்டிய நிலையில் மராட்டியர்கள் இவர்கள் மீது தீண்டாமையைக் கடைபிடிக்க இயலாத நிலையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தீண்டாமைக்குப் பின்புலமாக உள்ள கருத்தியல், சடங்காசாரங்கள் என்பவை எத்தன்மையாயினும் நடைமுறையில் அது உடலை ஓதுக்குவதாகவே உள்ளது. உடல் மீதான இச்சை என்பது அறிவையும், தர்க்கத்தையும், சடங்கையும், மரபையும், மதத்தையும் வென்று விடுகிற சக்திமிக்கதாக இருக்கிறது. இச்சை முன் தீண்டாமை தோற்றுப்போய் விடுகிறது. கடுந் தீண்டாமை கடைபிடிக்கப்படக் கூடிய தாழ்த்தப்பட்ட பெண்களின் உடல்களாயினும் அவற்றின் மீது பாலியல் வன்முறை மேற்கொள்ள உயர்சாதி ஆண்கள் தயக்கம் காட்டுவதில்லை.

குலாத்திகள் தீண்டாமையை அனுபவிக்கவில்லையாயினும் கற்பு, குடும்பம் முதலான மதிப்பீடுகளின் அடிப்படையில் இச்சமூகம், குறிப்பாக இச் சமூகத்துப் பெண்களும் குழந்தைகளும் கடுமையான ஒதுக்கல்களுக்கும் இழிவுகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். ஒப்பிட்டளவில் தீண்டாமை குறைவாக உள்ள நகரங்களுக்கு உயர் கல்வியின் பொருட்டு வரும்போது கூட 'குலாத்தி' என்கிற தனது சாதியை மறைத்து 'மராத்தி' என்று சொல்லும் பொதுதான் காலேக்குத் தங்க ஓர் அறை கிடைக்கிறது. (குலாத்தி, பக்.156). சாதி தெரிகிறபோது அடிக்கடி அறையை மாற்ற வேண்டியுமிருக்கிறது (பக். 154). முஸ்லிம்கள் வசிக்கிற பகுதியில் தங்க நேர்கிறது (பக்.153). கூடப்படிக்கிற மாணவன், 'உன்னுடைய சித்தி என்னிடம் வருவாளா?' என வெளிப்படையாகக் கேட்டு காலேயை அவமானப் படுத்த முடிகிறது. (பக்.154).

ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களுக்குத் தமது உடலின் மீது எந்த விதமான அதிகார்ரமும் இல்லாமல் செய்து, ஒட்டு மொத்தமாக அச்சமூகத்து உயர்சாதி ஆண்களின் அதிகாரமும் இச்சையும் செயல்படும் களமாக அது மாற்றப்படும்போது அது தீண்டமைக்கு அடுத்தபடியாகவும், இணையாகவும் கருத வேண்ட ஒரு கொடுமையாகிறது. இதன் விளைவாகத்தான் தேவதாசி ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்பட வேண்டிய அவசியம் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தது. விதவைகள், தேவதாசி குலப் பெண்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து அவர்களை இளைஞர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென திராவிட இயக்கத்தின் சார்பில் பிரச்சாரம் செய்யப்பட்டது. குத்தூசி குருசாமி, நெ.து. சுந்தரவடிவேலு ஆகியோர் பிறப்பால் முதலியார்களாயினும் தேதாசி குலச் சகோதரியரை இப்படித் திருமணம் செய்து கொண்டதும் குறிப்பிடத் தக்கது. மராத்திய சமூகத்தில் குலாத்திகளை இது போல் தலித்களுக்கு இணையாகக் கருத வேண்டிய அவசியமிருப்பதைத்தான் தலித் இலக்கிய விருதுகள் இந் நூலுக்கு அளிக்கப்பட்டுள்ள செய்தியும் உறுதி செய்கின்றது.

இப் பிரதிகளினூடாக வெளிப்படுகிற சாதீயத்தின் இரு அம்சங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒன்று : கிராமங்களில் உச்சமாக இருக்கும் தீண்டாமை ஒதுக்கலின் உக்கிரம் இவர்கள் நகரத்திற்கு இடம் பெயரும் போது சற்றே தணிவதை மூன்று புதினங்களும் பதிவு செய்கின்றன. தொழிற் சங்கம், உயர் கல்வி, நகர வாழ்க்கை, நட்பு ஆகியவற்றினூடாகத் தம் மீதான ஒதுக்கலிலிருந்து அவர்கள் சற்றே விடுதலை அடைய முடிகிறது. மற்றது : 'குலாத்தி'யில் ஒரு காட்சி. அம்பேஜோனக என்னும் நகரில் தங்குவதற்கு ஒரு வீடு தேடி காலே

அலைகிறார். கடைசியாக ஒரு வீடு. வீட்டுக்காரன் கோமதி சாதிக்காரன். பெயரைக் கேட்கிறான். "கிஷோர் காலே" என்கிறார். 'சாந்தாபாய்' என்கிற தலைப் பெயரை இவர் தவிர்ப்பதை நாம் கவனிக்கிறோம். அடுத்த கேள்வி நாம் எதிர்பார்ப்பது தான். "நீ மராத்திக்காரனா இல்லை, பார்ப்பனரா?" "மராத்தி" என்கிறார் காலே (குலாத்தி, பக்.156) மற்ற இரண்டு நாவல்களிலுங்கூட இந்த 'மராத்தி' என்கிற பதம் பார்ப்பனரையும், தலித்/பழங்குடியினரையும் விலக்கிய இடைநிலை அடையாளமாக விளங்குவதைக் கவனிக்கலாம். பார்ப்பனரைப் பொறுத்த மட்டில் அவர்கள் தமக்குகந்ததாக ஒரு அகில இந்தியத் தேசியத்தைத் தேர்வு செய்து கொள்கின்றனர். நெருக்கடி நேர்ந்தால் மாநில அளவிலான மொழித் தேசிய அடையாளத்தில் ஒட்டிக் கொள்ளும் தயாரிப்பு நிலையுடனேயே அவர்கள் விளங்குவர். இத்தகைய தேசிய அடையாளங்களிலிருந்து நழுவியவர்களாகவே தலித்களும் பழங்குடியினரும் அமைகின்றனர். தொடக்க காலத் தமிழ்த் தேசியச் சொல்லாடல்களிலுங்கூடத் 'தமிழாள் X துலுக்காள்' என் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் போன்றோர். எதிர் நிறுத்தம் செய்ததும் இந்தத் 'தமிழாள்' என்பதிலுங் கூட மாட்டு மாமிசம் தின்பவர்களாயுள்ளவர்களே கருதப்பட்டதும் சிந்திக்கத் தக்கன. பார்ப்பனர்களும் தலித்/பழங்குடியினரும் அல்லாத இடைநிலைச் சாதி அடையாளமாகவே இந்த தேசிய இனம் உருப்பெறுகிறது.

4

இப் புதினங்களில் பொதுக் கூறுகளில் ஒன்று இம் மூன்றுமே ஒடுக்கப்பட்டப் பழங்குடிச் சாதிகளில் பிறந்த மூன்று இளைஞர்கள் எப்படித் தமக்குப் பிறப்பால் விதிக்கப்பட்ட வாழ்விலிருந்து விலகி, படித்து, வளர்ச்சி பெற்று, சாதீய இழிவுகளுக்கு எதிராகத் தம் மக்களைத் திரட்டி, அச் சமூகத்தின் வழிகாட்டிகள், தலைவர்கள் என்கிற நிலையை எட்டிய வரலாற்றைச் சித்தரிப்பவை. சமாஜ்வாடி, யுவக் தளம், பாக்தீய விமுக்தி ஜாமதி சங்காதளம் முதலான அமைப்புகளில் இயங்கி வந்த லட்சுமண் மானே இன்று 'மகாத்மா பூலே சமதா பிரதிஷ்தான்' அமைப்பின் பொதுச் செயலர் ஆகவும் 'நாடோடி/குற்றப்பரம்பரைப் பழங்குடி மக்களின் ஆய்வு/வளர்ச்சிக்கான இந்தியக் கல்லூரியின் நிறுவனத் தலைவராகவும் உள்ளார்.

மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர் கிஷோர் சாந்தாபாய் காலே, துடிரன் பகுதியில் பழங்குடியினர் மத்தியில் மருத்துவ சேவை புரிந்து வருகிறார். பழங்குடி மக்களுக்கான 'தாரா நினைவு சன்ஸ்தா', 'சாந்தாயி டவாகானா' முதலிய அமைப்புகளை (தன் பாட்டி மற்றும் அம்மாவின் பெயர்களில்) நடத்தி இலவச மருத்துவம், அனாதைக் குழந்தைகளைப் பராமரிப்பது முதலான பணிகளை மேற்கொண்டு வருகிறார். தனது தொடர்ந்த பணிகளில் மூலமாகக் குலாத்திப் பெண்கள் தமாஷா ஆடுவதைக் கிட்டதட்ட முடிவுக்குக் கொண்டு வந்து விட்டதாகப் பெருமை கொள்கிறார்.

லட்சுமண் கெய்க்வாட், லட்டூரில் உள்ள 'ஜனகல்யாண் விகாஸ் சாஸ்தா'வின் தலைவராகவும், 'பாத்கீய விமுக்தி ஜமாதி கங்காதன'த்தின் துணைத் தலைவராகவும் மேலும் பல நாடோடிப் பழங்குடி மக்களுக்கான அமைப்புகளில் உறுப்பினராகவும் உள்ளார்.

இவர்கள் மூவரும் இந்நிலையை எட்டுவதற்கான இளமைப் பின்புலம், அனுபவித்த வறுமை/இழிவு, எதிர்கொண்ட பன்னூறு தடைகள், வெறும் பொருளாதாரம் மட்டுமின்றி இச் சமூக அமைப்பே எவ்வாறு தமது முன்னோக்கிய நகர்வுக்கு எதிராக

இருக்கிறது என்பது குறித்த அனுபவபூர்வமான புரிதல்களை அடைந்த விதம் ஆகியவற்றை 'ப்ளாஷ் பேக்' போன்ற மிகச் சாதாரண இலக்கிய உத்திகளும் கூட இன்றி மிக மிக நேரடியாகச் சொல்லப்பட்ட வரலாறு இவை. இவர்களது முயற்சிகளும் செயற்பாடுகளும் ரொம்பவும் சட்டபூர்வமானவை. இவர்கள் மூவருமே தமது சமூகத்தின் இழிநிலை குறித்து நாணுகின்றனர், வேதனைப்படுகின்றனர். கடின உழைப்பு, முயற்சி, இழிவான பழக்கங்களை விட்டொதுக்குதல், கல்வி ஆகியவற்றின் மூலமாகத் தம் இழிவைப் போக்கிவிட இயலும் என நம்புகின்றனர். 'வெற்றிக்குத் தேவை முயற்சி மட்டுமே' என்கிறார் மானே (உபாரா, முன்னுரை). கைக்காடி சாதிப் பெண்ணைத் தவிர்த்து ஒரு மராத்திப் பெண்ணைத் திருமணம் செய்வதையே தன் லட்சியமாகக் கொண்டு நிறைவேற்றியவர் அவர். உழைப்பு, முயற்சி, கல்வி இவற்றின் மூலம் சமூக உயர்வு பெறுவதற்கு உதாரணமாகத் தன் வாழ்வையே முன் வைக்கிறார் டாக்டர் காலே. தமது சாதியினரின் குடிப்பழக்கம் அசுத்தம் முதலியனவற்றைக் குற்ற உணர்ச்சியோடு சொல்லிச் சொல்லும் கெய்க்வாட் வாய்ப்புக் கிடைத்த போது உயர் சாதியினருடன் இணைந்து பஜனை செய்வதற்கு விரும்புகிறார். சிவலீலாம்ருதம், பகவத்கீதை முதலானவற்றைக் கற்க முயல்கிறார். ★ எனினும் அதே திசையில் அவர் தன் வாழ்வைத் தொடரவில்லை என்பதும் இங்கே சொல்லத்தக்கது ★

இம் மூன்று புதினங்களுக்குமான இன்னொரு பொது அம்சம் இவை மூன்றுக்குமே மராத்திய மொழியில் மட்டுமின்றி இந்திய அளவிலும் ஏன் உலக அளவிலுங் கூட அங்கீகாரம் கிடைத்துள்ளது. 'உபாரா' வுக்குச் சாகித்ய அகாதமி பரிசு. உமா சங்கர் ஜோஷியின் பாராட்டு. போர்டு பவுண்டேஷனின் இரண்டு லட்ச ரூபாய் பரிசு மற்றும் அமெரிக்கப் பயணம். கெய்க்வாடுக்கு சாகித்ய அகாதமி விருது. காலேக்கு முன்பு குறிப்பிட்டது தவிர தமானி சாகித்ய புரஸ்கார் விருது, வி.கே. பாட்டீல் புரஸ்கார் விருது முதலியன. மூன்று நூற்களுமே உடனடியாக ஆங்கிலத்திலும் பின்னர் வேறு பல இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன.

இப் புதினங்களுக்குக் கிடைத்துள்ள இந்த ஏற்புகளுக்கும் இந்தப் பிரதிகளினூடாக வெளிப்படும் தலித்/பழங்குடி மக்களின் வாழ்க்கை பற்றிய குற்ற உணர்வுக்கும், சட்ட பூர்வத் தன்மைக்கும், மேற்தட்டு மதிப்பீடுகளுக்கும் (எடு : முயற்சியே வெற்றி தரும்) இடையேயான நேரடியான தொடர்பு நம்மை உறுத்தாமலிருக்க முடியாது.

5

ஒரு இலக்கியப் பிரதியாக இப் புதினங்களை எதிர்கொள்வதற்கு முன் இவற்றுக்கிடையேயான வேறு சில பொருத்தப்பாடுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வோம். இவை மூன்றுமே ஏதோ பல தலைமுறைகளுக்கு முந்திய சாதீயக் கொடுமைகளை விவரிப்பவையல்ல. சம கால அல்லது ஒரு தலைமுறைக்கு முந்தைய கால வரலாற்றைச் சொல்பவை.

மானே 1949ல் பிறந்தவர். கெய்க்வாட் 1956ல். காலே எல்லோர்க்கும் இளைஞர் 1970. இப் புதினங்கள் என்பது, தொன்னூறுகளில் எழுதப்பட்டவை. இந்தக் கொடுமைகளும், ஒதுக்கல்களும் இப்போதும் நடந்து கொண்டிருப்பவை தான் என்கிற உணர்வுடன் இவற்றை நாம் வாசிப்பது அவசியம். "இப்போது நான் லட்டூரில் வசித்து வருகிறேன். என் சகோதரர்கள் பிழைப்புக்காகத் திருட்டுத் தொழில் செய்து வருகிறார்கள்" என

முடிகிறது 'உச்சாலியா' (பக் . 295) தீண்டாமைக்கு அரசியல் சட்டத்தில் முடிவுகட்டி விட்டோம். சாதி என்பது உள்நாட்டுப் பிரச்சினை. அதை சர்வதேசத் தளத்தில் பேச வேண்டியதில்லை என இந்துத்துவ சக்திகளும், தலித்துக்களின் தனித்துவத்தை வலியுறுத்தி இன ஒற்றுமையைக் குலைக்கிறார்கள் எனத் தேசியவாதிகளும் நம்மைக் காய்கிற சூழலில் யதார்த்தம் இப்படியாகத்தான் இருக்கிறது என்பது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம், இப் பழங்குடியினர் மீதான இழிவுகளை எதிர்க்கும் முதல் முயற்சிகளோ இவர்களால் இப்போதுதான் தொடங்குகின்றன என அறியும் போது. தலித் அரசியலுக்கும், தலித் இயக்கங்களுக்கும் முன்னோடியான மராட்டிய மண்ணிலுங் கூட இந்தப் பழங்குடிகள், நாளது வரை அம்பேத்கரிய இயக்கம்/குடியரசுக் கட்சி முதலான பெயர்களில் இயங்கியவர்களுக்குங் கூட அணுகப்படாதவர்களாக இருந்தார்களா என்கிற கேள்வி எழுகின்றது. மஹர், மங் முதலான மண்ணுடன் பிணைக்கப்பட்ட சாதிகளை மட்டும் திரட்டுவதோடு தலித் இயக்கங்கள் நிறுத்திக் கொண்டனவா? பழங்குடியினரின் பிரச்சினைகள் கண்டுகொள்ளப் படாமலேயே தொடர்கின்றனவா?

தமிழகத்திலும் கூட கிட்டதட்ட இதுதான் நிலைமை என்பது நமக்குத் தெரியும். பறையர்கள், பள்ளர்கள் ஆகிய [illegible]னர் மத்தியிலேயே சென்ற நூற்றாண்டின் முக்காலிறுதி வரை தலித் இயக்கங்கள் உருக் கொண்டன. சென்ற நூற்றாண்டின் இறுதியில்தான் அருந்ததியர்கள் தம்மை இயக்கமாக்கிக் கொள்ள முனைந்தனர். இன்னும் கூட அவர்களது இயக்கம் பலவீனமானதோகவே உள்ளது.

பழங்குடியினர் பற்றிச் சொல்லவே

வேண்டாம். தங்களை அவர்கள் இயக்கமாகத் திரட்டிக் கொண்டு அடையாளப் படுத்திக் கொள்ளும் நிலையோ, அவர்களிலிருந்து ஒரு தலைவரோ இன்றளவும் உருவாகவில்லை. தோழர்கள் கல்யாணி, லூசினா, வி.பி. குணசேகரன் முதலானோர் முயற்சியில் அவர்களுக்கானப் பாதுகாப்பு அமைப்புகள் இன்று உருவாகியுள்ளன (எடு. திண்டிவனம் - செஞ்சிப் பகுதியில் கட்டப்பட்டுள்ள 'பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்') ஆக, பழங்குடியினர் இன்னும் மற்றவர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாகவே உள்ளனர்.

தமிழில் உருவாகியுள்ள தலித் இலக்கியங்களுங் கூட இப்படிப் பல தரப்பட்ட தலித் பிரிவினரின் வாழ்வையும் களனாகக் கொண்டு உருவாகவில்லை. பெரும்பாலான தலித் இலக்கியங்கள் பறையர் சமூக வாழ்வையே சித்தரிப்பவை. இதயவேந்தன், மதிவண்ணன் முதலிய மிகச் சிலரே அருந்ததியர் சமூகத்திலிருந்து உருவானவர்கள். அருந்ததியர் வாழ்வை இலக்கியப் பிரதிகளில் அடையாளப்படுத்துகிறவர்கள். தமிழகத்தின் தென் கோடியிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை உக்கிரத்தோடு வெளிப்படுத்துகிறார் என்.டி. ராஜ்குமார். பள்ளர்

சமூகத்திலிருந்து குறிப்பிடத்தக்க புனைவு எழுத்தாளர்கள் அதிகமில்லை. கந்தசாமி போன்ற மிகச் சிலரே கண்ணுக்குத் தென்படுகின்றனர்.

பழங்குடியினர் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களிடமிருந்து சொல்லத்தக்க எழுத்தாளர்கள் உருவாகும் சூழல் இன்றிருப்பதாகத் தெரியவில்லை. தோன்ற வேண்டும். பல தரப்பட்ட தலித் வாழ்வுகளும், அடையாளங்களும் இலக்கியப் பதிவு பெற வேண்டும் அதற்கான சூழலை உருவாக்குவது நம் கடமை.

6

இந்தப் புதினங்களினூடாக வெளிப்படும் இன்னொரு பொதுக் கூறாக, தீண்டாமைக்கும் சாதீயத்திற்கும் அப்பால் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த சில த்னி மனிதர்களிடம் தலைகாட்டும் சனநாயக உணர்வைச் சொல்லலாம். செய்கிற தொழில், சார்ந்திருக்கும் அரசியல், சில தனிப்பட்ட பண்புகள் ஆகியவற்றுனூடாக இத்தகைய உணர்வுகள் உருவாகின்றன. தீண்டத்தகாத இச் சாதிகளிலிருந்து முதல் தலைமுறையாகப் பள்ளிக்கு வர நேர்ந்த இந்தப் பிள்ளைகளிடம் சில ஆசிரியர்களும், பேராசிரியர்களும், நண்பர்களும், அரசியல் தோழர்களும் காட்டும் அன்பு குறிப்பிடத் தக்கது.

பேராசிரியர்கள் தாபோலோ, பட்கோன்கர், சவுத்ரி, ஆசாராம் குருஜி, தோழர்கள் பிரதீப் பாடில், பிரகாஷ் ரெட்டி, பகவன் ராவ் தேஷ்பாண்டே ஆசிரியர்கள் எல்லப்ப வெய்து குருஜி, குல்கர்னி குருஜி, பகவன் ராவ் தேஷ்பாண்டே என்றொரு பட்டியலை நாம் இவ்வகையில் இந்தப் புதினங்களிலிருந்து உருவாக்க முடியும். டாக்டர் காலேயின் அன்னை சாந்தாபாயை இரண்டாவது மனைவியாகச் சேர்த்துக் கொண்ட சாலி (நெசவாளர்) சாதியைச் சேர்ந்த வட்டிக்கடைக்காரன் நானாவின் முதல் மனைவியின் பிள்ளைகள் காலேயின் மேற்படிப்பின் போது செய்கிற சிற்சில உதவிகள் இங்கே சொல்லத் தக்கன. மருத்துவக் கல்லூரி நேர்முகத்திற்காக முதன் முதலாகக் காலே மும்பை செல்கிற போது நானாவின் முதல் மனைவியின் மகள் ஜெயஸ்ரீயும் அவள் கணவனும் காலேக்கு உதவி செய்கின்றனர். மருத்துவ கல்லூரிக்கு அழைத்துச் செல்கின்றனர். இத்தனைக்கும் காலேயும் அவர் தம்பி தீபக்கும் நானாவுக்குப் பிறந்தவர்களுமல்லர். நானாவுக்கு முன்னல் சாந்தாபாய் கொண்டிருந்த இரு வேறு தொடர்புகளுக்குப் பிறந்த பிள்ளைகள் இவர்கள்.

இது போலவே கீர்த்தி கல்லூரியில் மானே சேர்கிற போது தோட்டக்காரர் சாதியைச் சேர்ந்த நாராயண் மற்றும் ராம்தாஸ், மாருதி முதலான நண்பர்கள் செய்கிற உதவியும் மஹர் சாதியைச் சேர்ந்த ராம்பாபு தனது ஊர் கிராமப் பஞ்சாயத்தில் கைக்காடிகளுக்கு ஆதரவாகப் பேசி அதன் விளைவாக அடிதடி உருவாவதும் இங்கே குறிப்பிடத்தக்கவை. அங்கொன்றும் இங்கொன்றுமானதும் சாதியை மீறிக் கனலும் இந்த நட்புச் சக்திகளையும் சனநாயக உணர்வுகளையுந்தான் அழுகிப்போன இந்துச் சமூகத்தினிடையே நம்பிக்கைக் கீற்றுகளாகக் காண முடிகிறது.

7

இச்சாதிகள் மூன்றிலும் நிலவுகிற பஞ்சாயத்து முறையையும் ★ சாதிக்குள் நிலவுகிற ஜாட் பஞ்சாயத்து முறை ம்ட்டுமே இந்த அத்தியாயத்தில் பேசப்படுகிறது. இம்மக்களின் "குற்றங்களை" விசாரிக்க ஆதிக்க சாதியினரால் நடத்தப்படுகிற கிராமப் பஞ்சாயத்து முறை இங்கு விவாதிக்கப்படவில்லை ★ அவற்றில்

வழங்கப்படுகிற அருவருப்பான தண்டனைகளையும் இம் மூன்று நாவலாசிரியர்களுமே கடுமையாகக் கண்டிக்கின்றனர். இது இந்நாவல்களின் இன்னொரு பொது அம்சம். வாதியின் மூத்திரத்தில் மூக்கை நனைக்க வைப்பது, பஞ்சாயத்தார் பெய்யும் மலங்களைப் பிசைந்து ரொட்டி தட்ட வைப்பது, மலமும் மூத்திரமும் நிறைந்த பானையைத் தலையில் சுமக்க வைத்து கற்களால் பானையை உடைத்து மலத்தை முகத்தில் வழிய வைப்பது, கடும் அபராதங்கள், சாதி விலக்கு முதலானவை இத் தண்டனைகளில் சில.

நூலாசிரியரின் முயற்சியின் விளைவாக குலாத்திகள் ஜாட் பஞ்சாயத்து முறை ஒழிக்கப்பட்டது நூலின் முன்னுரையிலேயே குறிக்கப்படுகிறது. 'உபாரா'வின் முன்னுரையிலும் இத்தகைய பஞ்சாயத்து ஒன்றையும் அதில் பாதிக்கப்பட்ட தண்டனையையும் அருவருப்போடு குறிப்பிடுகிறார் மானே. தங்கள் சாதிப் பஞ்சாயத்து செயல்பட்டு வந்த விதம் இரங்கத்தக்கதாகவும் அருவருப்பாகவும் இருந்ததை கெய்க்வாடும் மனம் நொந்து சுட்டிக் காட்டுகிறார் *(உச்சாலியா, பக்.161)*

சாதிக்குள் இருக்கும் ஒரு சில 'பெரிய' மனிதர்களின் அதிகாரத்தில் இயங்கும் இப் பஞ்சாயத்துக்குள் தம் முன் வரும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பது மட்டுமின்றி, சில சந்தர்ப்பங்களில் சாதிக் கட்டுமானத்தையும் கவுரவத்தையும் காரணம் காட்டித் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகின்றன. கடுந் தண்டனைகளையும் வழங்குகின்றன. அபராதத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் பஞ்சாயத்தார் குடித்துக் கும்மாளமடிக்கப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்வு : இருவீட்டார் சம்மதத்துடன் கெய்க்வாடின் அண்ணியின் வீட்டில் ஒரு திருமணம் நடைபெற உள்ளது. அமைதியாக நடைபெற இருந்த திருமணத்தைத் தடுத்து நிறுத்துகிறது பஞ்சாயத்து. மணப்பெண்ணின் தாய் வழிப்பாட்டியொருத்தி ஒரு மராத்தியனோடு வாழ்ந்து வருவதைச் சுட்டிக் காட்டி மணப்பெண்ணின் தாய்க்குத் தண்டனை வழங்க வேண்டுமென்கிறது பஞ்சாயத்து. மலம் தின்ன வைப்பது, மூக்கை அறுப்பது முதலான தண்டனைகளெல்லாம் முன் மொழியப்பட்டு இறுதியில் அவளை மொட்டையடித்துக் கரும்புள்ளி, செம்புள்ளி குத்துகின்றனர். இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் அவளுக்கு விதிக்கப்படுகிறது (உபாரா, பக். 161,162)

இப்படியாக பஞ்சாயத்துகளும் அவற்றில் வெளிப்படுகிற ஆணாதிக்க மனோநிலைகளும் நம்மை அதிர வைக்கின்றன. நாடோடிப் பழங்குடிகளைப் பொருத்த மட்டில் பொழுது சாய்வதற்குள் கூடாரம் அடித்துள்ள இடத்திற்குப் பெண்கள் திரும்பியாக வேண்டும். திரும்பாவிட்டால் அவளது ஒழுக்கம் பற்றிய அய்யத்தையும் கடுந் தண்டனையும் அவள் எதிர் கொள்ள வேண்டும்.

சாதியை, சாதிக் கட்டுமானத்தைக் காப்பாற்றுவது என்கிற கருத்தியலின் அடிப்படையில் இந்த அதிகாரத்தைப் பஞ்சாயத்து எடுத்துக் கொள்கிறது. "மகனே ... சாதியைக் காப்பாத்துறதுக்காக ஒருத்தன் மண்ணைக் கூட திங்கலாம். சாதியில்லாம மோட்சம் கிடைக்காது" என்கிறார் மானேயின் அப்பா (உபாரா, பக். 221). ★ நாடோடிப் பழங்குடியினரைப் போன்று எல்லாவற்றிலிருந்தும் ஒதுக்கப்பட்ட ஒரு சாதிக்கு இத்தகைய பெருமை எவ்வாறு உருவாகிறது. இனக்குழு உணர்வுகள் என்பன மோட்சம் முதலான நம்பிக்கைகளோடு இணைந்து இத்தகைய சாதிப் பெருமை கட்டமைக்கப்படுகிறதா? இத்தகைய

சாதிய உணர்வைத் தான் இந்துத்துவ சக்திகள் இவற்றோடு நெருக்கங் கொள்வதற்குப் பயன்படுத்துகின்றனவா? ★ மானே திருமணம் செய்து வந்த பெண்ணை, "அவ பாப்பாத்தியா இருந்தாலும் நம்ம சாதியில் இடமில்லை" எனக் கறார் பேசுகிறது பஞ்சாயத்து (பக். 275)

பிரதிகளில் வெளிப்படும் பஞ்சாயத்து நிகழ்வுகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது பழங்குடிப் பஞ்சாயத்துகளின் இன்னொரு பரிமாணம் வெளிப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை அல்லது திருவிழாக்களில் இச் சாதி மக்கள் அனைவரும் திரளும் போது பஞ்சாயத்து கூடி பல்வேறுவிதமாக வழக்குகளும் விசாரிக்கப்பட்டு தண்டனைகள். வழங்கப்படுகின்றன. இந்த விசாரனைகள் மேம்போக்காக நடப்பதில்லை. சிக்கலான வழக்குகளாயின் பல நாட்கள் கூட விவாதங்கள் நடைபெறுகின்றன.

வாதி, பிரதிவாதி, இதர குற்றம் சாட்டப்பட்டவர் இவர்கள் ஒவ்வொருவரின் சார்பாகவும் சாதி வழக்கங்களையும், ஏற்கனவே முடிவு சொல்லப்பட்ட பல்வேறு வழக்குகளையும் நன்கறிந்த 'உத்தரவாதிகள்' வழக்காடுகின்றனர். வரலாற்றுச் செய்திகளையும், வழக்குகளையும், சாதக பாதக அம்சங்களையும் மேற்கோள் காட்டித் தேர்ந்த வழக்கறிஞர்களாக இவர்கள் வாதிடுகின்றனர்.

வாதப் பிரதிவாதங்கள் இடையில் நிறுத்தப்பட்டுப் பார்வையாளர்களும் பஞ்சாயத்தார்களும் குழுக்களாகப் பிரிந்து விவாதித்து மீண்டும் கூடி முடிவெடுக்கப்படுவதுமுண்டு. முடிவு சாத்தியமில்லாத நிலையில்- மூன்றாவதாக ஓரிடத்தில் கூடி அங்குள்ள பெரியவரின் கருத்தை இறுதித் தீர்ப்பாகவும் ஏற்கின்றனர்.

ஆக, பெரும்பான்மையான வழக்குகளில் அவசரக் கோலத்தில் தீர்ப்புகள் வழங்கப்படுவதில்லை.

இந்தப் பஞ்சயாத்துகளின் இன்னொரு முக்கிய கூறு, இறுதியில் இவை ஏதோ ஒரு வகையில் இம் மக்களை, அதாவது சாதி உறுப்பினர்களை உள்ளடக்குவதற்காகவே உள்ளன. மராத்திப் பெண்ணை மானே திருமணம் செய்து கொண்ட வழக்கிலும் கூட சாதிப் பஞ்சாயத்துக் கூடி கடும் விவாதங்களுக்குப் பின் ஒரு எளிய சடங்கின் மூலம் அந்தப் பெண்ணைக் கைக்காடிச் சமூகத்தின் ஒரு உறுப்பாக, கைக்காடிகளில் ஒருத்தியாக ஏற்கிறது. கெய்க்வாடின் அண்ணி வீட்டுத் திருமண வழக்கிலுங்கூடக் கடைசியில் திருமணமும் விருந்தும் அமோகமாக நடைபெறுகிறது. தன் அம்மா செய்த "குற்றத்திற்காக"க் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அவமானப்படுத்தப்பட்ட பெண்ணிற்கும் கூட அத்தோடு அந்தக் "களங்கம்" நீங்குகிறது. தாய்க்கும் மகனுக்குமிடையேயான உறவு (உபாரா, முன்னுரை) தந்தைக்கும் மகனுக்குமிடையேயான உறவு (உச்சாலியா, பக். 80-81) குறித்த மிகவும் சிக்கலான முறை மீறிய பாலியல் வழக்குகளிலுங் கூட அருவருப்பான தீர்ப்புகள், கடுமையான அபராதம் முதலியன வழங்கப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் முற்றாகச் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்படவில்லை. உறவு வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட தாய்க்கும் மகனுக்கும் எழுபத்தையாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட போதிலும் அதை முழுவதும் அவர்களே கட்ட வேண்டியதில்லை அவர்களும் பிந்தைய சந்ததிகளும் செலுத்தினால் போதும். இது குறித்து மானே அந்தத் தாயிடம் விசாரிக்கும் போது அவள் சொல்கிறாள் : "தம்பி வெள்ளரி விதையை விதைத்தேன்,

வெள்ளரியைத் தின்னேன். என்னோட குத்தம் என்ன? (உபாரா, முன்னுரை). எனக்கு நாலு புருசன். அய்ந்தாவதாக ஒருத்தன் தேவையில்லை. எனது முதல் பையனையே எனக்குப் புருசன் என்கிறாங்களே என்று சொல்லிச் செல்கிறார் அந்தப் பழங்குடித் தாய்.

மகளுடன் உறவு கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட சங்கரய்யாவின் மீசை மகளின் மூத்திரத்தைத் தடவி மழிக்கப்படுகிறது. இருவரையும் சாதி விலக்கமும் செய்கின்றனர். எனினும் நிரந்தரமாக அல்ல. இரண்டாண்டுகளுக்கு மட்டும். சாதி விலக்கம் செய்யப்பட்டவர்களை எல்லாவற்றிலிருந்தும் முற்றிலுமாக ஒதுக்கிச் சாகவிடுவதுமில்லை. சாதி விலக்கம் செய்யப்பட்ட சங்கரய்யா தன் ஊருக்கு வந்த கதையை விவரிக்கிறார் கெய்க்வாட் (உச்சாலியா, பக் 81) தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதிக்க சாதியினர் சிரட்டையில் தண்ணீர் கொடுப்பது போலச் சங்கரய்யாவுக்கும் கொடுக்கின்றனர். விவசாயத்திற்குப் பயன்படும் இரும்புச் சட்டியில் உணவிடுகின்றனர். வீட்டிற்கு வெளியே படுக்க வைக்கின்றனர். இவை எல்லாமுங்கூட இரண்டாண்டுகளுக்கு மட்டுமே. அதற்கு பிறகு எல்லோரையும் போல அவர்களும்.

தண்டனை என்பது நிரந்தர அவமானத்திற்குரியதாகவும் கருதப்படுவதில்லை. வழங்கப்படும் கனத்தோடு முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு அவர்களும் எல்லோரையும் போல அச் சமூக உறுப்பினர்தான். எந்தக் குற்ற உணர்வும் அவமானமும் அவர்கள் மீது தேங்குவதில்லை. சங்கரய்யா வந்து சென்ற கதையைச் சொல்கிற கெய்க்வாட் இறுதியாக, "சங்கரய்யா வழங்கப்பட்ட தீர்ப்பால் வருத்தப்படவோ, வெட்கப்படவோ இல்லை. அவன் எங்களுடன் நடந்து கொண்ட விதம் நட்பானதாகவும் இயல்பானதாகவும் இருந்தது" எனச் சொல்வது (பக். 82) சிந்திக்கத் தக்கது. சிரட்டையில் தண்ணீர் தந்து வீட்டுக்கு வெளியில் நிறுத்தும் போதுங் கூட இரு தரப்பினரும் அதை இயல்பாகவே எடுத்துக் கொள்கின்றனர்.

பிடிக்காத தம்பதியினரைப் பஞ்சாயத்து எளிதில் பிரித்து விடுகிறது. யார் காரணமோ அவர் மற்றவருக்குத் திருமணச் செலவைத் தந்தால் போதும். பிரிந்தவர்கள் மறுமணம் செய்து கொள்வதற்குத் தடை ஏதும் இல்லை. ஒரு வழக்கில் கணவன் தன் மனைவியை இன்னொருவனிடம் அடகு வைக்கிறான். அங்கே அவளுக்கு ஒரு குழந்தை. வழக்கை விசாரித்த பஞ்சாயத்து அவளைக் குற்றமற்றவளாகத் தீர்மானிக்கிறது. இரண்டாவது கணவனுடன் அவளை வாழ அனுமதிக்கிறது. இரண்டாமவன் முதல்வனுக்குத் திருமணச் செலவைத் தந்துவிட வேண்டும் அவ்வளவுதான்.

தீர்ப்புகள் பலவும் அருவருப்பாகவும் இழிவு செய்வதாகவும் இருந்த போதிலும் அவை சமூக உறுப்பினர்கள் தமக்குள்ளாகவே வழங்கிக் கொள்வது என்பதும் அவை உடனே நிறைவேற்றத்தக்கதாகவும் உடல் துயரை ஏற்படுத்துவதாகவும் ஏதோ ஒரு வகையில் சாதி உறுப்பினர்களை உள்ளடக்குவதாகவுமே உள்ளன என்கிற கூறுகள் கவனிக்கத் தக்கன. ★ திருட்டைத் தொழிலாகக் கொண்ட குற்றப் பரம்பரையில் காட்டிக் கொடுப்பது பெருங்குற்றமாகக் கருதப்படுகிறது. இதற்கு மரண தண்டனை உட்படக் கடுந் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அப்படி மரண தண்டனை வழங்கப்பட்ட ஒருவரின் பேரன்தான் கெய்க்வாட். இத் தண்டனைகள் குறித்து நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு அம்சம்: தமக்குள்ளாக இவர்கள் வழங்கிக் கொள்ளும் இந்த இழிவான தண்டனையை ஆதிக்க சாதியினர் இவர்கள் மீது சுமத்தும் போது அது வேறொரு பரிமாணத்தை

அடைகிறது★

வழங்கப்படும் தண்டனைகளிலுள்ள இந்த அருவருப்பான கூறுகளை நீக்க வேண்டும் என்பதில் இந்த நூலாசிரியர்களைப் போலவே நமக்கும் மாற்றுக் கருத்து இருக்க இயலாது. எனினும் இந்தக் கூறுகள் அவர்களின் தண்டனை முறைகளின் ஓரங்கமாக மாறிப் போனதை எப்படி விளக்கிக் கொள்வது? கஞ்சர்பாட் பழங்குடியினர் தமது குலதெய்வத்தைப் போற்றிப் பாடும்போது கூட, "ஓ! மாரி உன் பீயை முழுங்குவோம், உன் மூத்திரத்தைக் குடிப்போம்" என்று வணங்குவதென்ன? (உபாரா, முன்னுரை)

இந்தக் கேள்விக்கு ஒரு தீர்மானகரமான பதில் நமக்குத் தோன்றாவிட்டாலும் வேறு சில கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்ளலாம். அதற்கு முன் இந்த மக்களுக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை பற்றிய ஒரு பிரதியியல் விவரணை (உச்சாலியா, பக்.31)

"எங்கள் குடிசை ஒரு அசுத்தமான இடம். தெற்றுப் பூச்சிகளின் கூட்டத்தைப் போலவே நாங்கள் அதனுள்ளே நிரம்பியிருந்தோம். அதே குடிசையில்தான், எங்கள் ஆடுகளுக்கிடையில் ஹரிச்சந்திராவும் நானும் ஒன்றாகப் படுத்துத் தூங்கினோம். குளிர் காலங்களில் நாங்கள் நடுங்கி விறைத்துப் போய்விடுவோம்.

ஹரிச்சந்திராவுக்கும் எனக்கும் சேர்த்து ஒரே ஒரு போர்வை தான் இருந்தது. நாய்களுங்கூட வெது வெதுப்பிற்காக எங்கள் போர்வைக்குள்ளேயே படுத்துக் கொள்ளும். ஆட்டுக் குட்டிகள் அருகில் கட்டப்பட்டிருக்கும். அவை கழிக்கின்ற மூத்திரம் எங்கள் உடம்பின் மீது வெதுவெதுப்பாக வந்து படும். ஆட்டுக் குட்டிகளின் சூடான மூத்திரம் ஒரு கதகதப்பான போர்வையைப் போன்று ஒரு இதமான உணர்ச்சியைத் தந்தது. சில்லென்ற குளிரைப் போக்குகின்ற விதத்தில் ஆட்டுக் குட்டிகள் தொடர்ந்து மூத்திரம் பெய்து கொண்டேயிருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.

காலையில் தூங்கி எழுந்தவுடன் போர்வையைத் துவைக்காமலே குடிசையின் கூரையின் மீது தூக்கிப் போட்டு விடுவோம். மூத்திர நாற்றம் எங்கள் மூக்கைத் துளைத்த போதிலும், நாங்கள் அந்த ஈரப் போர்வையையே தொடர்ந்து பயன்படுத்தினோம். எங்கள் புலனுணர்வுகள் செத்துவிட்டன; நாங்கள் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தோம்.

போர்வையில் ஏராளமான பேன்கள் இருந்தன. அவற்றைக் கொல்லும் போது நானும் ஹரிச்சந்திராவும் அவற்றை எண்ணத் தொடங்குவோம். நூறு அல்லது இருநூறு வரை எண்ணிய பிறகு எண்ணுவதை நிறுத்தி விடுவோம். வெயிலில் போர்வையை விரித்து வைப்போம். வெயிலின் சூட்டைத் தாங்க முடியாத பேன்கள் அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருக்கும். அவற்றை நாங்கள் கற்களால் நசுக்குவோம். அதற்குப் பிறகும் கூடப் போர்வையைத் துவைக்க மாட்டோம். அதை நாங்கள் வருடத்திற்கு ஒரு முறை தான் துவைத்தோம்".

திருட்டுத் தொழிலுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட உச்சாலியர்களின் வாழ்க்கை இது. இதைப் படிக்கும் போது குழந்தைப் பருவத்திலேயே 'திருடன்' என்கிற அடையாளம் சுமத்தப்பட்டு, பின்னர் அந்த அடையாளத்தை விரும்பி ஏற்று அந்த வாழ்வின் உச்சங்களை எட்டுவதையே வாழ்க்கையாக அமைத்துக் கொண்ட ஃப்ரெஞ்ச் ஜெனேயின் பிரதிகளிலிருந்து

சில காட்சிப் படிமங்கள் நம் கண் முன் விரிகின்றன.

ஜெனேயின் பிரதி ஒன்றில் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்ட இரு குற்றவாளிகள் தங்களுக்கிடையேயான (ஓரினக்) காதலை வெளிப்படுத்திக் கொள்ளும் அடையாளமாக சீலைப் பேன்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். ★ Edmund white, Genet, Picador, p.) ★ அவரது 'திருடனின் குறிப்புகள்' நூலிலிருந்து இன்னொரு காட்சி: நகரத்து விளக்கு கம்பமொன்றின் கீழ் தட்டையான வெறுத்த முகமுடைய ஒரு வயதான பெண்ணைச் சந்திக்கிறார் ஜெனே. அந்த முகத்தில் வெளிப்படுவது சோகமோ, பாசாங்கோ என்பது விளங்கவில்லை. அவள் அவரை நெருங்கிப் பிச்சை கேட்கிறாள். அவள் அப்போதுதான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருப்பாள் என்பதை அந்த வட்ட முகத்தில் வெளிப்படும் கம்பீரம் ஜெனேக்கு உணர்த்துகிறது. 'திருடி' என அவர் தனக்குள் சொல்லிக் கொண்டு நகர எத்தளிக்கும் போது சிந்தனையோட்டத்தில் ஒரு தெறிப்பு. பிறந்த சில நாட்களிலேயே தன்னை அனாதையாக விட்டுச் சென்ற தன் தாயாக அவள் ஏன் இருக்கக் கூடாது? அப்படி இருந்தால்..? ஓ! அப்படியாயின் அவளை நான் ரோஜா மற்றும் கிளாடியோலிப் பூக்களால் மூழ்கடிப்பேன், அலங்கரிப்பேன். முத்தங்களிட்டு அவளின் உடலைப் போற்றுவேன். அந்த வட்டக் கண்களின் மீது, தட்டை முகத்தின் மீது என் கண்ணீரைச் சொரிவேன்.

இப்படியாக ஜெனே எண்ணி வரும்போது சிந்தனையோட்டத்தில் ஒரு குறுக்குப் பாய்ச்சல். ஏன், ஏன் நான் அழ வேண்டும்? அன்பையும் உன்னதத்தையும் வெளிப்படுத்தும் இந்த வழக்கமான குறியீடுகள், மெய்ப்பாடுகளுக்குப் பதிலாக, முத்தங்கள்/கண்ணீர்த்துளிகள்/பூக்கள் என்பனவற்றிற்கு ஈடாக என்னால் பொருள் கொள்ள முடிந்த வேறு சில வெறுக்கத்தக்க மெய்ப்பாடுகளை நான் ஏன் வெளிப்படுத்தக் கூடாது?

அவள் உடல் முழுக்க எச்சிலால் குளிப்பாட்டுவதில் நான் மகிழ்ச்சியடைவேன். அவளது தலையில் துப்புவேன். கைகளில் வாந்தி எடுப்பேன். ஆனால் என் தாயாகிய அந்தத் திருடியை நான் போற்றுவேன், வணங்குவேன். ★ Jean Genet, The Thief Jounal, Penguin Books, 1965, P.No. 14,15) இதே நூலிலிருந்து இன்னொரு படிமம். ஜெனேயின் திருட்டு நண்பனொருவன் வீடுகளை உடைத்துத் திருடிய பின்னர் வாசலில் அல்லது பின் மாடிப்படி அருகில் "நான் ஒரு 'வாட்ச்மேனை' நிறுத்திவிட்டு வருகிறேன்" எனச் சொல்லி அங்கு மலம் கழித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருப்பான் (P.No. 187)★

இதை ஏதோ தன்னை வஞ்சித்த சமூகத்தின் மீதான ஒரு பழிவாங்கலாகவும் கொள்ள முடியாது. அவன் உமிழ்ந்து போற்ற நினைப்பது அவனை ஒதுக்கிய சமூகத்தையல்ல; அபூர்வமாகக் கண்டெடுத்த அன்னையை. சொல்லப் போனால் உமிழ்தல் என்பது ஜெனேயைப் பொருத்த மட்டில் இகழ்ச்சியின் மெய்ப்பாடல்ல. அவன் உமிழ்ந்து இகழவில்லை. உமிழ்ந்து வணங்குகிறான். காறி உமிழ்தல் என்கிற மதிப்பீடு இங்கே தலைகீழாகிறது. மரபு வழிப்பட்ட ஒழுக்கவாதிகளுக்கும் தூய்மைவாதிகளுக்கும் இது அதிர்ச்சியைத்தான் அளிக்கும். ஒரு மரபு வழி வாசகனைச் சுகப்படுத்துவது, சொரிந்து விடுவது ஜெனே உருவாக்குகிற பிரதியின் நோக்கமல்ல.

அதே சமயத்தில் வாசகரை அதிர்ச்சிக்குள்ளாக்குவதற்காக மட்டுமே சொல்லப்பட்டதாகவும் இதை நாம் கருத முடியாது. இதை நாம் 'இழிவின் அழகியல்' என்பதாக விளங்கிக்

கொள்வதா? வழக்கமான நமது அரசியல் மதிப்பீடுகள் இங்கே பயனற்றுப் போகின்றன. எல்லாவிதமான ஒழுக்க மதிப்பீடுகளுக்கும் அற விதிகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு தேடலின் உச்சம் இது.

எல்லாவற்றிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்ட இம் மக்கள் தங்களைத் தாழ்த்திக் கொள்வதன் மூலம், தங்களை இழிவாக்கிக் கொள்வதன் மூலம், எல்லா மனித மதிப்பீடுகளையும் கீழே தள்ளி மிதிப்பதன் மூலம் அவற்றைப் பயனறச் செய்கின்றனரா? அவற்றின் பயன்பாட்டைத் துறக்கின்றனரா? துறவின் உச்சமா இது? அதனால்தான் சார்த்தர் ஜெனேயைப் 'புனிதஜெனே' என்றாரா? ஒரு புனிதனின் தேட்டம் நன்மையின் உச்ததை எட்டுவதாக, கடவுளை நோக்கிய பயணமாக அமைகிறது. நன்மை தீமைகளுக்கு, மேன்மை இழிவுகளுக்கு அப்பாற்பட்டு ஒதுக்கப்பட்ட இவர்களின் தேட்டம் தீமையின் உச்சமாக, குற்றத்தின் உச்சத்தை நோக்கிய பயணமாக இருக்கிறதா?

8

நமது நாவலாசிரியர்கள் மூவரும் இத்தகைய தேட்டத்தை ஆதரிப்பவர்கள் அல்லர். கண்டிப்பவர்கள். நாவலாசிரியர்கள் என்கிற பரிமாணத்தைக் காட்டிலும் அந்தச் சமூகத்தின் தலைவர்கள், அந்தச் சமூகத்தைத் திருத்தி நேர்படச் செய்ய வந்தவர்கள் என்கிற பரிமாணம் அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது. மானே சொல்வார்:

"நாடோடிப் பழங்குடியினரின் வாழ்க்கை உண்மையிலேயே மாறப் போகிறதா? உள்ளார்ந்த அளவில் அது மாறுமா? அவர்களின் வாழ்க்கை மாறுவதற்கு நம் சமூகம் அனுமதிக்குமா? குறிப்பிட்டதொரு இடத்தில் குடியேறி, புதியதொரு வாழ்க்கை முறையை ஏற்றுக் கொள்வார்களா? ஒரு புதிய பண்பாட்டின் பங்காளிகளாக அவர்கள் வாழ்க்கை நடத்துவார்களா? தங்கள் நெற்றிகளிலிருந்து உபாரா என்னும் களங்கத்தைத் துடைத்தெறிந்துவிட்டு அதிகாரம், சொத்து, கௌரவம், தத்துவார்த்தம், சிந்தனை, கலைகள் போன்ற துறைகளில், இந்தப்பல்வேறு நாடோடிப் பழங்குடியினரின் நீரோட்டங்கள் ஒரே பெரிய மனிதப் பண்பாட்டோடு ஒன்று கலக்குமா? (உபாரா, முன்னுரை)

மற்ற இரு நாவலாசிரியருங்கூட இதே ஒழுக்கமுடையவர்கள்தான். தனது நாவல் வந்த ஆறு மாதத்திற்குள் குலாத்திப் பெண்கள் தமாஷா ஆடுவதை விட்டுவிட்டனர் எனக் காலே கூறுவது (சந்தியா பாண்டேயின் முன்னுரை) முன்பே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜெனே இவர்களிடமிருந்து வேறுபடுகிற புள்ளி இது. தமது சமூகத்தின் குற்றச் செயல்களைக் கருதி வேதனைப்படுவதோ, இழிவைக் கண்டு நொந்து கொள்வதோ, மன்னிப்புக் கோருவதோ ஜெனே பிரதிகளின் தொனியாக இருப்பதில்லை. அவற்றை அறிவியல் பூர்வமாக விளக்குவதோ, ஆதரவான வாதங்களை முன் வைப்பதோ கூட அவற்றின் நோக்கமல்ல, பணியுமல்ல. பதினோரு வயதில் திருடன் எனவும், தமாஷா ஆட்டக்காரி எனவும், பிச்சைக்காரன் எனவும் முத்திரை குத்தப்பட்ட இம்மக்கள் இவற்றைத் தம் 'சாரம்சப் பண்பாகக் கட்டமைத்துக் கொள்கின்றனர். ஜெனேயைப் பொருத்தமட்டில் திருட்டு என்பது ஒரு செயலின் விவரணம் அல்ல. இருப்பின் வடிவம். எனவே அவற்றை மிகுந்த ஈடுபாட்டுடன் விவரிக்கிறார். தான் எதுவாக இருக்கிறோம் என்பதை முழுமையாகப் புரிந்தேற்றுக் கொண்டதன் விளைவாக அவர் வெட்கத்திலிருந்தும் குற்ற

உணர்ச்சியிலிருந்தும் விடுபடுகிறார். பதிலாகத் தனது குற்றமையில் பெருமிதம் கொள்கிறார். தன்னைக் கம்பீரமானவனாகவும் தனது செயல்களை மிக்க அழகானதாகவும் உணர்கிறார். ஒளி மயமான எதிர்காலத்தை நோக்கி பயனிப்பது உன் நோக்கமானால் இருளை நோக்கிய இயக்கமே எனது பயணம் என ஏற்றுக்கொள்கிறார். அந்தச் சமூகத்தில் ஒருவனாய் அந்தச் சமூகத்திற்குள்ளிருந்து அவர் குரல் ஒலிக்கிறது. ஜெனேயின் பிரதிகள் ஒரு சமூகவியல் ஆவணம் என்கிற நிலையில் நின்றுவிடாமல் இலக்கியப் பிரதி என்கிற நிலையை எட்டுகின்றன.

நமது நாவலாசிரியர்கள் மூவரும் இந்தச் சமூகத்தின் மதிப்பீகளிலிருந்து விலகி நிற்கின்றனர். அவர்களை வழி நடத்தத் தலைப்படுகின்றனர். தமது சமூகத்தைத் திருத்தப்படவேண்டிய ஒன்றாகக் கையாளுகின்றனர். ★ சென்னையில் இம் மூன்று நாவல்களின் விமர்சனக் கூட்டம் 'நிறப்பிரிகை'யின் சார்பாக நடைபெற்ற போது நான் முன் வைத்த இந்தக் கருத்தை எழுத்தாளர் சிவகாமி மறுத்தார். இத்தகைய மக்களுக்குத் தலைவர்கள் தேவையில்லையா? அவர்களின் செயற்பாடுகளை எப்படித் தவறு எனச் சொல்ல முடியும் என வினவினார். தலைவர்கள் தேவையில்லை என்றோ, அவர்களுக்குத் தனித்துவமான இயக்கங்கள் வேண்டாமென்றோ நாம் எங்கும் சொல்லவில்லை. மாறாக அவற்றை வற்புறுத்தியே வந்துள்ளோம். இக்கட்டுரையில் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல இவர்களிடத்தில் நாமிருந்தால் இதையே செய்திருப்போம் பிரச்சினை என்னவெனில் . அத்தகைய நிலைப்பாட்டை எடுத்து அந்த நோக்கிலிருந்து இம் மக்களின் வாழ்வு மேலிருந்து கீழாக அனுகப்படும்போது அப்பிரதி தட்டையாக அமையாமல் பன்முகப் பரிமாணங்களுடன் அமையுமா என்பதே. ★ இதனால் வெளியிலிருந்து அச் சமூகத்தை உற்று நோக்கும் ஒரு இரண்டாம் நிலைத் தன்மையுடனும் குற்ற உணர்ச்சியுடனும் இப் பிரதிகள் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகிறது. பன்முகப் பரிமாணங்கள் தொனிக்கும் இலக்கியப் பிரதியாகவன்றி சமூகவியல் ஆவணம் என்கிற ஒற்றைப் பரிமாணம் தூக்கலாய் வெளிப்படுகிறது.

ஒரு இலக்கியப் பிரதி என்கிற பரிமாணம் குறைபாடுடையதாகிப் போனதை இம் மூன்று நாவலாசிரியர்களும் வேறு காரணங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்கின்றனர். எழுதுவது என் தகுதிக்கு மீறிய செயல் என்கிறார் மானே. இலக்கிய அழகு இல்லை என விமர்சிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளும் குலாத்தியின் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் விரைவாக எழுதப்பட்டது, சரியாகச் செப்பனிடப்படவில்லை என்று காரணம் சொல்லுகிறார். முறையான கல்வியை அதிகம் பெற்றிராத லட்சுமண் கெய்க்வாடிடம் ஒரு எழுத்தாளருக்குரிய நயமோ, தனித் திறமையோ இல்லை என மன்னிப்பு கோருகிறார் உச்சாலியாவின் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் (பார்க்க முன்னுரைகள்)

நாம் இந்தக் கருத்துக்களுடன் உடன்படவில்லை. 'இலக்கிய அழகு' குறித்து மரபு வழி மதிப்பீடுகளையும் கூட இந் நூலாசிரியர்களும் மொழி பெயர்ப்பாளர்களும் அப்படியே ஏற்றுக் கொண்டதன் விளைவே இவ் ஒப்புதல் வாக்குமூலங்கள். இத்தகை மதிப்பீடுகளை எல்லா மட்டங்களிலும் ஏற்றுக் கொண்டதனால்தான் இந்தப் பிரதிகள் மரபு வழி வாசகர்களிடமும் விமர்சகர்களிடமும் எந்த அதிர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை ★ இளைஞர்களின் வாழ்வைச் சொல்லும் இந் நாவல்களில் அவர்களின் உடலிச்சைகள் எங்கும் கொண்டாடப்படுவதில்லை.

ஓரிடத்திலும் பதிவு செய்யப்படவில்லை. விமர்சன அரங்கில் இந்த அம்சத்தைத் திரு வெளி. ரங்கராஜன் அவர்களும் தோழர் ஜி.கே. விஜயனும் சுட்டிக் காட்டினர்.★ பிரதிகளுடனான இவர்களின் உறவு ரொம்பவும் சுமுகமாக இருக்கிறது. இதன் விளைவாகவே நிறுவனங்களும் இவற்றிற்குப் பரிசளித்து மகிழ்கின்றன. உள் வாங்கிப் பெருமிதம் கொள்கின்றன.

9

பின்குறிப்பாய்ச் சில:

1. 'உச்சாலியா'வின் இறுதியில் லட்சுமண் கெய்க்வாட் முன் வைக்கும் சில கருத்துக்கள் நமது சிந்தனைக்குரியன. 'ஆக்ஸ்ஃபாம்' என்கிறத் தன்னார்வ நிறுவனத்திடம் உதவி பெற்றுத் தனது இயக்கத்தை நடத்தி வந்த கெய்க்வாட் இந்த உதவியைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளக் கூடாது என முடிவெடுத்து அதிலிருந்து விலகிக் கொள்கிறார் (பக் 273). காரணங்கள் விரிவாகச் சொல்லப்படவில்லையாயினும் ஒரு நேர்மையான இயக்கப் பணியாளர் இந்த முடிவுக்கு வந்ததன் பின்னணியை நாம் யோசிக்க வேண்டியுள்ளது. மேல் சாதித் தலைவர்கள் தம்மைப் போன்றவர்களைப் பயன்படுத்திக் கொள்வது பற்றிய அவரது வெறுப்பும் கவனிக்கத் தக்கது (பக் 295) இறுதியாக,

"நாடோடி மற்றும் குற்றப் பரம்பரைப் பழங்குடிகள், பட்டியற் சாதிகள், அடக்கி ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் முழுமையான விடுதலையைச் சாதிப்பதற்காக அறிவுத் தளத்தில் பழங்குடி மக்களின் இயக்கங்களை உருவாக்கவும் பலப்படுத்தவும் பல்வேறு வழிமுறைகளைத் தேடுவதுதான் இப்போது என்னுடைய லட்சியம்".

என அவர் முடிப்பதையும் (பக் 295) நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2. குலாத்தி ஆசிரியர் டாக்டர் கிஷோர் சாந்தாபாய் காலேயின் வாழ்வு பலவேறு அம்சங்களில் நாம் முன் மாதிரியாகக் கொள்ளத்தக்கதாக நான் உணர்கிறேன். போராளிகள் தோற்கும் போது தியாகி ஆகிறார்கள். வெற்றி பெற்றுத் தொடர்ந்து நிற்கும்போது தலைவர்கள் ஆகின்றனர். தவிர்க்க இயலாமல் அவர்களைச் சுற்றி ஒரு அதிகாரம் கட்டமைக்கப்படுகிறது. எந்தப் போராட்டங்களுமின்றி அதிகாரங்களைக் கைக் கொள்ளும் சூழலும் இன்றுள்ளது. இது எல்லோருக்கும் பொருந்தும். உங்களுக்கும். எனக்கும். நம்முள் கட்டமைக்கப்படும் இந்த அதிகாரத்தை, பாசிசத்தை வெல்வதற்கான வழிகளில் ஒன்று சேவை. குலாத்தி மற்றும் பழங்குடியினரைத் திரட்டி அதன் மூலமான அதிகாரம் ஒன்றைக் கட்டமைப்பது என்பதாகவன்றி அம் மக்களோடு வாழ்ந்து, அவர்களுக்குச் சேவை செய்யும் வாழ்வை அவர் தேர்ந்துள்ளது நம்மை நெகிழ வைக்கிறது.

3. தமிழ் மொழியாக்கம் பற்றி நான ஒன்றும் சொல்லவில்லை. ஆங்கிலப் பிரதிகளை நான் பார்க்கவுமில்லை. எளிய கதை சொல்லல் என்கிற வகையில் மொழியாக்கத்திலும் சரளம் இயல்பாக வந்துவிடுகிறது. எனினும் இன்னும் ஒரு முறை வாசிக்கப்பட்டு வாக்கிய அமைப்புகள் திருத்தப்பட்டிருந்தால் சரளம் கூடியிருக்கும்.

0

மின்னல்

சுயமுன்னேற்றம், தொழில்மேலாண்மை புத்தகங்கள்

தமிழ் பதிப்புத்துறையில் ஓர் புதிய வரவு!

சுயமுன்னேற்ற வரிசை

வெற்றிக்கு ஒரு திட்டம்

தொழில் வேலாண்மை வரிசை



தொழில் வெற்றிக்கு சந்தைப்படுத்தல் உத்திகள்

ஆசிரியர் - **மு. கா. இளங்கோ,** பி.டெக.

அறிவியல், மேலாண்மை மற்றும் நடைமுறை விளக்கங்களுடன் எழுதப்பட்ட முற்றிலும் மாறுபட்ட பயனுள்ள கையடக்க புத்தகங்கள்.

அஞ்சலில், கூரியரில் பெற (ரூ. 30/- + ரூ. 5/- ஒரு புத்தகத்திற்கு) பணவிடை அனுப்பவும் :

மின்னல் மீடியா

எண். 5/1470 வி.பி.சிங் தெரு, தருமபுரி 636 705.

தொலைபேசி : 04342 230097, மின்அஞ்சல் : minnalmedia@yahoo.com

எமது அடுத்த வெளியீடுகள்:

1. **வெல்லும் தொழில் திட்டம்**
2. **தொழில் வெற்றிக்கு நிதி மேலாண்மை**

உயிர்ப்பு

உலவும்
பிரேதங்களின் வனத்தில்
வாய்தவறி
உச்சரிக்கப்பட்ட
உயிர்ப்பிக்கும் மந்திரங்கள்
வார்த்தைகளாய்
வெளியெங்கும் பரவி
வெறியூட்டி
ஒளியுமிழும் கண்களும்
புன்னகையும்
உயிர்த்தெழுகின்றன
தொடங்கும்
உறவு பிறழ்ந்த விளிப்பில்
மரணம்
தவிர்க்க
பெருநகர வீதிகளில்
முடிவற்ற நடை அடங்கா
பெருமூச்சோடு பிணைந்து
வெடித்துக் கிளம்பும்
கண்ணீர்த்துளிகள்
எளிதாக இருப்பதில்லை
ஒரு பிரேதத்தை ஸ்பரிசிப்பது
உயிர்ப்பிப்பது அல்லது
உயிர்ப்பிக்கப்படக் காத்திருப்பது.

சொல்லப்படாதவை

நிகழ்வுகள்
திசைபாராது
சாட்சியமாய்
படிந்து
அலையும்
மனங்கள்
காட்டிவிடும்
காலக்கெடுவற்ற
செயல்கள்
தாண்டி
ஞாபகமாய்
நம்பிக்கையுடன்
வாழ்வின்
சிதிலங்கள்
தேடுகின்றன
உரையாடல்களின்
இடைவெளியை

ஜேஸன் கவிதைகள்

இசை நாற்காலி ஆட்டம்

முடிவைத் தேடும்
பார்வைகளின்
இசை நாற்காலி ஆட்ட
மாய காற்றோட்டம்
உதிர்த்த
மகிழ்வின் சாம்பல்
படித்த நாட்கள்
சொல்லும்
உறவின் கண்ணிகள்
உடல் படர்ந்து
கிளைத்துப் பரவ
இருளும் முகம்
மறக்கக் காத்திருக்கிறது
கால்கள்
தெருவெங்கும் துழாவி
சேர்ந்த துளிகளுடன்
தீராப்பசி கொண்டு
இரை தேடும் உதடுகள்
பாசாங்குடன்
ஒரு மூலையில்

நீலகண்டன்

கவிஞனின் கவிதையில் இருந்த
பறவையைப் பற்றி படித்து
கொண்டிருந்தபோதே என்னுள்ளே
உருவான பழத்தோட்டத்திற்குள்
வந்துவிட்ட பறவை
பழங்களை உண்டு கழிவுகளையும்
அங்கே கழித்து
இன்பத்தைப் பற்றியும் துன்பத்தைப் பற்றியும்
பல விதமான நிகழ்வுகளை நடத்தி
தன் கூர்ய அலகுகளால்
வெற்று பிரதேசத்தில் என்னைப் பட ம் தீட்டி
சிறை கம்பிகளையும் வரைந்து விட்டு
இரை தேடிச் சென்ற அது
சிறிது காலம் வராமல் போக
இருளும் வெளிச்சமும்
மண்ணுக்குள் புதைந்ததில்
நினைவு பிசங்க என்னுள்
இருந்த பறவையும் பழந்தோட்டமும்
இல்லாமல் போனது
மூச்சு முட்டிவெளிவர தவிக்கிறேன்
வரைந்து விட்டு போன சிறைகம்பி
மட்டும் என்னில் இருந்து அகலவில்லை
பறவை வந்தால்தான் என் விடுபடல்
என்றான பிறகு
கவிதையை வாசிக்கிறேன்
பழத்தோட்டம் உண்டாகவில்லை
பறவையும் வரவில்லை
காலம் திருகிட

ரிஷி

கவிதைகள்

பிரக்ஞையின் விரிவு

இடம்

பதறப் பதற ஓடிய மூட்டுக்களில் வலி பெருகும்
பரிசு பெறும் பிறிதிரு கரங்கள்
விரைந்த களைப்பில் வறள்வாய் திறக்க
வேறொரு வாயுறிஞ்சும் குளிர்ந்த நீர்
வெற்றிப் புள்ளியை எட்டும் போதெலாம் கரவொலி
'X' ற்கு
வழி வியர்வையின் நவரத்தினங்கள் 'Y'க்கு
வாணவேடிக்கை 'Z'ற்கு, விருந்தோம்பல் Q,R,S க்கு
எக்குத்தப்பான போட்டியில் பங்கேற்ற
துக்கம் மட்டும் எனக்கே யெனக்காக

மொழி

ஞானிக்கொரு மொழி, தேனிக்கொரு மொழி
பிச்சி பேசும் மொழி யொரு எழவும் புரியாது.
மழலையின் மொழியோ மாமேதைக்கும் பழகாது.
அலையின் ஆர்ப்பரிப்பு பாமர மனதிலும்
ஆயிரம் தம்புராக்களை யெதிரொலிக்க, ரீங்கரிக்கும்
அன்பின் மொழியென்றும் ஆழ் நெஞ்சில் ...
எண்ணாயிரந் தலைமுறைகளை உள்வாங்கியிருக்கு
மந்த
காற்றின் மொழியை யார் தான் படிக்கக்கூடும்?

சொந்தம்

மூன்றாண்டுகளுக்குப் பின் வந்தாலும்
மீண்டும் வேலையுண்டு;
சம்பளமும்
முப்பதாண்டுகளுக்குப் பின் என்றாலோ
மூவேழுலகமும் சமர்ப்பணம்
- தூர இருந்தால் சேர உறவு.

துருவங்கள்

உறைபனிக் கடலும், எரிகுழம்பு மலையும்
நிறைந்திருக்கிறது உலகில்
எலியைக் கொஞ்சும் பூனையைப் பார்க்கலாம்
'டிஸ்கவரி சானலி'ல்
எதுவுமில்லை அதிசயம்! எல்லாம் விதி வசம்
என்றாலும் கதிகலங்கும் இதயம்
சிதிலமாகும் கனவில்.

இயற்கை

வசந்தம் வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தவன்
அதன் பிறகானதையும் குறிப்புணர்த்தியவாறு
மாறி வரும் பருவங்கள்
மந்தமாருதம் வெறியேறி யடித்த சூறாவளியில்
அறைந்து மூடிக் கொண்டன உடலின் கதவுகள்
அடியில் நசுங்கிக் கிடக்கும் அன்பு மனம்.

மீட்புப்பணி

விரிந்தகன்ற நீரப்பரப்பின் மீது
அணைக் கட்டத் தொடங்கிவிட்டன அணில்கள்
இனி கடந்துவிட முடியும் ஒரு நாள்
காலதாமதமாகலாம் என்றாலும்
முதுகு வருடித் தர வேண்டும் மறுபடி
கரங்கள் முளைத்த பின்

மறுஜென்மம்

பிணங்களெல்லாம் நடக்கும் காலமிது
'வெட்டியான் பட்டறையில் நமக்கேது இடமெ'ன
விட்டு விலகுகிறது குற்றுயிர்.
இத்தனை நாள் சேமித்து வைத்ததெல்லாம்
வெற்று
'ஸெண்டிமெண்ட்டலிஸ'மாக
முழு விழிப்புடனிருக்கும் மனதிற்கு
நுண்ணுணுக்கங்களறியா நிபுணன் கையால்
'பிளாஸ்டிக் ஸர்ஜரி' நிறைவேற்றப்படுகிறது.

மருதா

நூல் அச்சு 0 பதிப்பு 0 விற்பனை

3, கீழ்த்தளம், ரியல் ரீஜென்ஸி
102, பாரதி சாலை, இராயப்பேட்டை, சென்னை-14.
போன்: 8485426 மின்னஞ்சல் :marutha 1999 @ rediffmail.com

நூலின் பெயர்	ஆசிரியர்	விலை ரூ.
மின்மினிக்காடு	ஈரோடு தமிழன்பன்	25
கவிமூலம்	விக்ரமாதித்யன்	35
Glow-worm woods	S.A. Sankaranarayanan	40
கிட்டி	ப்ரஸன்னா	60
திசைக்குள் திசைகள்	ஈரோடு தமிழன்பன்	130
என்றும் இளமை	எஸ்.மோகனா	40
வேட்டையாடு விளையாடு/எஸ்.மோகனா		40
ஒரு வண்டி சென்ரியு	ஈரோடு தமிழன்பன்	40
கலையா!கைவினையா	ஈரோடு தமிழன்பன்	30
Methods & Meanings in Tamizhanban/ S.A. Sankaranarayanan		40
அங்கீகரிக்கப்படாத கனவின்.../சி.மோகன்		10
Salutations Valluva!/Tamizhanban/ S.A. Sankaranarayanan		75
கவிதைரசனை	விக்ரமாதித்யன்	100
மிதக்கும் இருக்கைகளின் நகரம்/சங்கர ராமசுப்ரமணியன்		40
சோ. தர்மன் கதைகள்	சோ. தர்மன்	140
புத்தம் வீடு	ஹெப்சிபா ஜேசுதாசன்	70
அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள் /பிரம்மராஜன் &.ஆர். சிவகுமார்		70
மற்றும் சிலர்	சுப்ரபாரதிமணியன்	75
வேர்கள் விழுதுகள்	திலகவதி	70
ஒரு ஆத்மாவின் டைரி	திலகவதி	70
கூச்சங்கள்/க.முத்துகிருஷ்ணன்		50
வில்லிசை வேந்தன் பிச்சைக்குட்டி/சோ.தர்மன்		50
உபகதை	பிரளயன்	50
இன்று விடுமுறை	பாலு சத்யா	40
காரணங்களுக்கு அப்பால்/ஐசக் அருமைராஜன்		75
கல் தூங்கும் நேரம்	விக்ரமாதித்யன்	35

நல்ல நூல்கள் அச்சாக்கி, வெளியிட்டு,
விற்பனை செய்து தருகிறோம்.

நூல் விற்பனை நிலையம் உண்டு

அன்னம், அகரம், நாட்டார் வழக்காற்றியல் மையம்,
சவுத் விஷன், சிநேகா, புதுப்புனல், கல்லாத்தி, காவ்யா,
ருத்ரா பதிப்பக வெளியீடுகளும் சிற்றிதழ்களும் கிடைக்கும்.

அ. மங்கையின்

பெண்-அரங்கம்-தமிழ்ச்சூழல்

ஸ்நேகா
348, டி.டி.கே சாலை, இராய்ப்பேட்டை,
சென்னை - 600 014. விலை ரூ.90

நம்முடைய கலை இலக்கிய வெளிப்பாடுகள் வெகுஜன ஊடகங்கள், மதநிறுவனங்கள் இவற்றின் ஊடாக சித்தரிப்புப்பெறும் பெண் படிமங்களை, ஒரு முற்றிலுமான பெண் நோக்கிலிருந்து ஆராயக் கூடிய பதிவுகள் தமிழில் மிகவும் குறைவு. பெண்ணைப் பொறுத்தவரை தமிழ்ச் சமூகத்தின் மனநிலை என்பது நோய்க்கூறாகவே இருந்து வருகிறது. பெண்ணை ஒருபுறம் தெய்வமாக்கி வழிபடுவதும், மறுபுறம், ஊழியம் செய்யும் எந்திரமாக்கி நுகர் பண்டமாகக் கேவலப்படுத்துவதும் தமிழ்ச் சூழலில்தான் அதிகம் நிகழ்ந்திருக்கிறது. மனித ஜீவிதத்திற்குரிய எல்லா நியாயங்களும் உரிமைகளும் கொண்டு தனக்குரிய பலங்களுடனும், பலகீனங்களுடனும் பெண் கொள்ளும் இருப்பு உரிய அங்கீகாரம் பெறுவதில்லை. ஜே. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுவதுபோல, பெண் ஆணைவிடக் கீழானவளுமல்ல, மேலானவளுமல்ல, சமமானவளுமல்ல. வேறானாவள். இந்த வேறுபாட்டின் சுவையை அதிகப்படுத்திக்கொள்ளாமல், சார்புத் தன்மையின் கற்பிதங்களுக்குள், வாழ்ந்து, பரஸ்பர இருப்பை மேலும் சிக்கலாக்குவதாகவே நம் சூழல் உள்ளது. இந்நிலையில், மங்கையின் பிரதி பெண்ணிலைப் புறக்கணிப்பை கேள்விக்குட்படுத்தும் ஒரு குரலை வலுவாக முன்வைக்கிறது. இந்தக் குரலின் நியாயங்கள் தமிழ்ச் சூழலில் அதிகப் பரிமாணங்கள் கொண்டு, ஒரு பரந்துபட்ட இயக்கத்திற்கான சாத்தியங்களை முன்வைக்கின்றன.

பெண்களை காலங்காலமாக புறக்கணிக்கப்பட்டுவந்த அரங்கம்போன்ற நிகழ்கலைகளில் முற்றிலும் பெண்களைக் கொண்டு அரங்கச் சூழலை வடிவமைத்து மௌனக்குறம், ஔவை நாடக வெளிப்பாடுகளில் மரபான பெண் படிமங்களை மாற்றி அமைத்ததைப்போன்ற மங்கையின் முயற்சிகள் ஒரு சிறப்பான மனநிலையைப் பிரதிபலிக்கின்றன. குறிப்பாக ஔவை நாடகத்தில் அர்ச்சனா என்ற பெண் கலைஞர் மேற்கொள்ளும் பாவனைகளும், ஸ்பரிசத்தின் இயல்பான நெகிழ்ச்சிகள் குறித்த தயக்கமின்மையும், ஔவையின் முதுமை குறித்த மறுவாசிப்பும், பால் தன்மையின் இறுக்கங்களை உடைத்து ஒரு நிகழ்கலை அனுபவத்தில் உடல்களின் திளைப்பு என்பது எத்தகைய பரவசத்தை அளிக்கமுடியும் என்பதற்குச் சாட்சியமாக இருக்கின்றன. பெண் உடல் கூறு சார்ந்த நோய்க்கூறான பார்வைக்ளால்

கொச்சைப்படுத்தப்பட்ட ஆண், பெண் உறவுகளே நிரம்பிவழியும் தமிழ் சினிமா மற்றும் பத்திரிகை ஊடகங்களுக்கு மாற்றாக ஒரு நிகழ்தளத்தில் பெண் உடலை அதன் வீரியமான பரிமாணங்களுடன் உணரத்தருவதென்பது நிகழ்தளத்தில் நாம் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய ஒரு பயிற்சியாகிறது. புராதன விவசாய காலங்களில் பெண்ணுக்கிருந்த முதன்மையும், சங்க இலக்கிய பனுவல்களில் பெண் சித்தரிப்புத் தரும் உத்வேகமும், பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகளும் வரலாற்று ரீதியாகப் பெண்ணின் மாற்றுப் படிமத்தையும் பங்கேற்பையும் தீவிரப்படுத்தும் காரணிகளாக மங்கையின் பார்வை ஒரு ஆரோக்கியமான விரிவை நோக்கி இயக்கம் கொள்கிறது. மற்றும் வரலாற்று ரீதியான இலக்கியப் பார்வையில் அம்பை, சிவகாமி, பாமா, அழகிய நாயகி அம்மாள் ஆகியோரின் புதிய பெண் உடல் மொழியும், ஈழக் கவிஞர் அவ்வையின் கவிதைகள் வெளிப்படுத்தும் பழைய பெண் குரல்களும், பெண்களில் தன் உலகுக்குறித்த விவரணைகளையும், பெண்ணிலைப்பாட்டையும், புரிதலையும் குறித்த இலக்கியப் பதிவுகளாக முன்னிறுத்தப் படுகின்றன. இதேபோல், பெண் நோக்கை முன்னிறுத்தும் ஆண் எழுத்தாளராக வ.ரா.வின் கோதைத் தீவு நாவலின் பலங்களும், பலவீனங்களும், விடுபடல்களும் ஆராயப்படுகின்றன. ஆனால், கைம்பெண் உணர்வு குறித்த கு.ப.ராவின் ஆழ்ந்த அக்கறையை மங்கை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. தி.ஜானகிராமனின் மோகமுள், உயிர்த்தேன், மரப்பசு நாவல்களில் பெண் உடல் வாழ்வு, விழைவு, உலகம் என விரியும் அனுபவங்களை எழுத்தில் அளிப்பதற்கான முயற்சிகளாகப் பார்க்கிறார்.

பெண்ணிற்கும் அரங்கிற்குமான தொடர்பு குறித்தும் கலைத்துறையில் பெண்களை மறுதலிக்கிற தன்மையைக் குறித்தும், மங்கையின் தீவிரமான அக்கறையைப் பிரதி புலப்படுத்துகிறது. பெண் நடிகர்களின் வாழ்நிலையும், சிக்கல்களும் விரிவான கவனம் பெறுகின்றன. நாடகத்துறையில் பாலியல் இறுக்கம் தளர்த்தப்படாமை அரங்கத்தில் பெண்களின் பங்கேற்பை மேலும் சிக்கலாக்குகிறது. சமகால நாடகச்சூழல் குறித்தும், பிரதிகள் மற்றும் விமர்சனப் போதாமைகள் குறித்தும் அவருடைய அக்கறைகள் செறிவானவை. பாதல் சர்க்கார் அரங்கம் குறித்த எதிர்வினையில் அவருடைய உடல், மொழி, கருத்தாக்கம் பற்றிய புரிதல் இல்லாமல் அவர் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறித்த மங்கையின் அக்கறையைப் பகிர்ந்துகொள்ளமுடிகிறது.

ஆனால் இன்றைய பின் நவீனத்துவ சூழலில் கோட்பாடு மற்றும் சாரம்சம் பற்றிய இறுக்கங்களைத் தவிர்த்து மைக்ரோ அளவில் பெண் சார்ந்த பிரச்னைகள் கூர்ந்து நோக்கக்கூடும் ஒரு சூழலில் அதிக வெளிச்சத்திற்கான சாத்தியங்கள் உண்டு என்று தோன்றுகிறது.

வெளி ரெங்கராஜன்.

மூன்று
தொகுப்புகளும்
ரூ. 99
மட்டுமே

புது எழுத்து முகவரிக்கு
எம்.ஓ. செய்வீர்!
வீடு தேடிவரும்
தபாலில் அல்லது
கூரியரில்

புது எழுத்து
வெளியீடு

காலத்தின் முன் ஒரு செடி

ஸ்ரீநேசன்

விலை ரூ.30